தர்மசக்கரம்



ரௌத்திரி ஆண்டு புரட்டாசி மீ சக்கரம் 20 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை—639 115. திருச்சி ஜில்லா.

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

அந்தர்யோகம்

1980 ஆம் ஞு நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய அக்டோபர் மாதம் 16, 17, 18 தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி புதன்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 5-00 விதம் ரூ. 15-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர் களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இட முண்டு. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தை களுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர் களும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6	மணிமுதல்	7	மணிவரை	தியானம்
,,	8	,,	9	,,	பஜனை
,,	9	,,	10	,,	லலிதாநாம விளக்க உபந்யாசம்
,,	11	,,	12	,,	அர்ச்சனை
மாலை	2	,,	3	,,	லலிதாநாம விளக்க உபந்யாசம்
,,	5	,,	6	,,	அர்ச்சனை
,,	6	,,	7	,,	தியானம்
இரவு	8	,,	9	,,	பஜனை

தியானம், லலிதாநாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத் தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒரு மணி நேரமும் மாலையில் ஒருமணி நேரமும் அகண்டநாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாம பஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட் டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை நடைபெறும் நாம ஜபத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

17.9.80

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29	ரௌத்திரி ஷு புரட்டாசி மீ	ஆரம் 9

பொருளடக்கம்

பக்கம்

வருட சந்தா:	உள்நாடு ரூ.	12-00	வெளிநாடு ரூ.	25-00
தனி இதழ்:	,, ரூ.	1-25	,, ரூ.	2-25

அந்தர்யோக விவரங்கள்

மதுரையில் 20—9—80 சனிக்கிழமை

இடம்: கீழமாசிவீதியில் உள்ள ஸ்ரீ மொட்டை விநாயகர் கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம் விவேகானந்த கல்விநிலையம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 1-00 நேரில் செலுத்தி காலை 10-00 மணிக்குள் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண ஸமாஜத்தில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பங்கஜம் காலனி, தினமணி நாளிதழ் ஆபீஸ் சமீபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

[பின்பக்கம் பார்க்க]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீவைகுண்டத்தில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 21—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பெரிய காளியம்மன் கோவில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

சேலம் ஜில்லா—ஓமலூரில் 28—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : குப்புச்சாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 28—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ மன்னீஸ்வரர் தேவஸ்தானம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 28—9—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ மனக்காவலம் பிள்ளை கல்யாண மண்டபம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—சுருளிமலையில் 2—10—80 வியாழக்கிழமை

இடம் : சுருளி தீர்த்தத்துக்கருகில்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 5—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : விவேகானந்த கல்லூரி
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி : நேரில் பகல் உணவிற்கு ரூ: 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தூத்துக்குடியில் 5—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சச்சிதானந்த சபை
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமான சுவாமி கோவில் பதினைந்தடி உயரத்தில் மேல்தளம் கான்கிரீட் போட்டு முடிந்தது. மூன்று வாரங்கள் மேல்தளம் தண்ணீரில் ஊறி உறுதிபெறும் வரையில் காத்திருக்க வேண்டும். பாலர்பள்ளி கட்டடம் தரையில் உடைகல் ஜல்லி போட்டுத் தரை உறுதி படுத்தப்பட்டிருக்கிறது.

பழுதுபட்டுக் கிடந்த தாயுமான சுவாமிகளின் சமாதிக்கோயிலைச் சில ஆண்டுகளுக்கு முன்பு போய்ப் பார்த்துவிட்டுத் தபோவனத்திற்கு வந்த திரு. ந. மகாலிங்கம் அவர்கள் தாயுமான சுவாமிகளின் மேலாம் கருத்துக்களைப் பிரசாரம் பண்ணும் தபோவனம், அக்கோவிலைப் புதுப்பிக்கும் திருப்பணியையும் எடுத்துக்கொள்ளலாமே என்று வேண்டினர். இப்பொழுது அத்திருப்பணி நடைபெற்று வருவதைப் பார்த்து மகிழ்வடைந்து திரு. ந. மகாலிங்கம் அவர்கள் அவருடைய நிறுவனத்திலிருக்கின்ற மூன்று தொழிற்சாலைகளினின்று மொத்தம் ரூபாய் ஐம்பதினாயிரம் நன்கொடை அளித்திருக்கிறார்.

1980 ஆகஸ்ட் மாத நன்கொடை விபரம் வருமாறு :

விலாசம்		ரூபாய்
ஜூலை மாதம் முடிய நன்கொடை வசூல்		8 87 719
M/s. சக்தி சுகர்ஸ் லிமிடெட்	ரேஸ்கோர்ஸ் ரோடு, கோவை	20 000
,, சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்	சக்தி நிலையம், பொள்ளாச்சி	15 000
,, ஸ்ரீ பகவதி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்	,, ,,	15 000
ஸ்ரீமதி V. ராதா அம்மாள்	அம்மாமண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி	5 000
ஸ்ரீ N. ராமதுரை	கொப்பமாபுரி, திருச்சி	5 000
,, டத. தோ. சாமிவேல்	பொதுப்பணித்துறை அமைச்சர் கோலாலம்பூர்	2 000
M/s. R. L. ராமையர் சன்ஸ்	மஹால் 3வது தெரு, மதுரை	1 111
ஸ்ரீ S. சாத்தப்ப செட்டியார்	சிரம்பான், கோலாலம்பூர்	1 050
,, P. சண்முகம்	அவன்யு ரோடு, சென்னை	601
,, பழ. அரு. லெட்சுமணன் செட்டியார்,	சிரம்பான், கோலாலம்பூர்	550
,, பழ. கோ. கோவிந்தன் செட்டியார்	கிள்ளான் ,,	260
,, வெ. மு. முத்தையா செட்டியார்	சிரம்பான் ,,	240
,, மு. மெ. மு. முத்தையா செட்டியார்	கிள்ளான் ,,	210
,, S. ராமலிங்கம்	R. S. ரோடு, திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர்	108
,, ஞ. மு. சொ. சொக்கலிங்கம் செட்டியார்	சிரம்பான் கோலாலம்பூர்	105
,, சி. ஆ. சுப்பிரமணியன்	,, ,,	105
,, M. அண்ணாமலை செட்டியார்	,, ,,	105
,, மு. ப. மு. முத்து பழனியப்ப செட்டியார்	கிள்ளான் ,,	101
,, கரு. கணேசன் செட்டியார்	,, ,,	101
,, N. P. R. பெரியகருப்பன் செட்டியார்	,, ,,	101
,, இ. உ. சுப்பையா	,, ,,	101
,, நா. வ. நா. நாகப்ப செட்டியார்	,, ,,	101
,, மெ. ப. வெ. அழகப்ப செட்டியார்	,, ,,	101
,, சித. நாச்சியப்பன்	,, ,,	101
,, நா. ஆண்டியப்ப செட்டியார்	,, ,,	101

ஸ்ரீமதி அத்தாயம்மாள்	சன்னிதித்தெரு, சேலம்	101
ஸ்ரீ L. ராமையா ஆச்சாரி	V. O. C. தெரு, கண்டனூர், ராமநாதபுரம்	101
„ M. H. சீனிவாசன்	ஹரிராஜன் லார் சர்வீஸ், சென்னை	101
„ A. R. ஜெகதீசன்	புத்திசாஹிப் தெரு „	101
குமாரி C. செண்பகவல்லி	கோவில்பட்டி	101
ஸ்ரீ M. சேதுமாணிக்கம் பிள்ளை	நயினா நாயுடு தெரு, ராமநாதபுரம்	101
ஸ்ரீமதி துளசியம்மாள்	மேற்குப் பிரதக்ஷணரோடு, கரூர்	101
M/s. கணேஸ் ஏஜன்ஸீஸ்	லெபோஅம்பாங், கோலாலம்பூர்	100
ஸ்ரீ ராமா	„ „	100
„ T. V. S. L. சுப்ரமணியன் செட்டியார்	கோந்தான்	100
ஸ்ரீ S. ஆறுமுகம்	பஜார் தெரு, அரக்கோணம், வ. ஆ. மாவட்டம்	100
„ PL. L பழனியப்ப செட்டியார்	ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம், பள்ளத்தூர்	100
ஸ்ரீமதி R. விஜயகௌரி	கம்ப நிலையம், வேலூர்	100
ஸ்ரீ ந. பெரியசாமி அடைக்கப்பட்டார்	கிளியூர், திருச்சி	100
„ T. மாணிக்கம்	கைலாசபுரம், திருச்சி	100
„ P. ராஜு பிள்ளை	கருங்கல்பட்டி மெயின் ரோடு, உகை, சேலம்	100
„ T. S கந்தசாமி	அரசாங்க தொழிற்பேட்டை, சேலம்	100
„ V. C. தங்கவேல்	திருச்செங்கோடு ரோடு, பள்ளிப்பாளையம்	100
„ S. N. ராமச்சந்திர செட்டியார்	செவ்வாய்ப்பேட்டை, சேலம்	100
„ N. பழனியப்ப முதலியார்	துறையூர் ரோடு, நாமக்கல்	100
„ P. மாதேஸ்வரன்	„ „	100
M/s. ஹேமா டிரேடிங் கம்பெனி	கணக்கர் தெரு, சேலம்	100
M/s. ஸ்ரீ கிரி டெக்ஸ்டைல்ஸ்	பள்ளிபாளையம், சேலம்	100
M/s மணிவேல் டெக்ஸ்டைல்ஸ்	காந்திபுரம், பள்ளிபாளையம்	100
M/s. G. M. பழனிசாமி & கோ	திருச்செங்கோடு ரோடு, பள்ளிபாளையம்	100
ரூபாய் நூறுக்குக் கீழ் வந்த நன்கொடைகள்		22 835
	ஆகக் கூடுதல் ரூ.	9 80 014

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—தேவாரத்தில் 12—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு இராமலிங்க சௌடேஸ்வரி திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்
உணவு வசதி: நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 12—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—செட்டிமேடு டோனுவூரில் 12—10—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29	ரௌத்திரி ஸ்ரீ புரட்டாசி மீ	ஆரம் 9

பிரார்த்தனை

अयि नन्दतनूज किङ्करं पतितं मां विषमे भवाम्बुधौ ।
कृपया तव पादपङ्कजस्थितधूलि सदृशं विचिन्तय ॥

— श्री गौराङ्ग

அயி நந்ததனூஜ கிங்கரம் பதிதம் மாம் விஷமே பவாம்புதௌ
க்ருபயா தவ பாதபங்கஜஸ்திததூலி ஸத்ருசம் விசிந்தய

— ஸ்ரீ கௌராங்கர்

நந்தகுமாரா, பிறவிக் கடலில் மூழ்கிக் கிடக்கும் என்னை உன்னுடைய தாமரைத் திருவடித் தூளாக ஏற்றுக்கொள்ளுவாயாக.

உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்
என் அப்பா! என் இருடிகேசா!
என் உயிர்க் காவலனே.

— பெரியாழ்வார் திருமொழி

அருள் விருந்து

பரம்பரையினும் மிக்கது மேலாம் மனப்பாங்கு.

நல்ல பணிவிடை யாண்டும் மகிழ்வுக்கு உரியது.

காலம் கிடைப்பதற்கரிய வாய்ப்பு. அதை வீணுக்கலாகாது.

நேர்மையினின்று பிசகுபவன் பொல்லாங்குகளைப் புரிபவனாகிறான்.

மக்களுக்கு நலம் தரும் செயல் எல்லாராலும் போற்றப்படுகிறது.

மன அமைதியைப் பேணுவது நல்ல ஆத்ம சாதனத்தின் அறிகுறியாம்.

அக்ஞானத்தில் உழல்பவர்களைக் குறித்துச் சான்றோர் குறைகூறுவதில்லை.

நிறை நிலையை அடையப்பெறுபவனுக்குத் தெய்வக்காட்சி வந்து வாய்க்கிறது.

பரமனுக்கென்று புரியும் பணிவிடை காயத்தால் செய்யும் பிரார்த்தனையாகும்.

தூய்மை யாருக்குமே தனியுடைமை ஆகாது. அது அனைவர்க்கும் சொந்தம்.

மனிதன் தனக்குத்தானே அமைத்துக்கொள்ளும் கட்டுப்பாடு அவனைத் தூய்மைப்படுத்துகிறது.

கஷ்டங்களையும், ஆபத்துக்களையும் அமைதியாகச் சமாளிப்பவன் நல்ல ஆத்ம சாதகன் ஆகின்றான்.

பொருளைப் பெரிய காரியத்துக்குப் பயன்படுத்துபவனுக்கு மேலும் பொருள் வந்து வாய்க்கிறது.

எப்படியாவது உயிர் வாழ்ந்திருந்தால்போதும் எனக் கருதுபவன் சுய நலத்தில் ஆழ்ந்து மூழ்கியவனாம்.

எண்ணத்துக்கேற்றவாறு மனிதன் உருவெடுப்பதால் ஒவ்வொருவனும் தனக்குத் தானே சிருஷ்டி கர்த்தாவாகிறான்.

ஆசையை அடிப்படையாகக் கொண்டது உலக வாழ்வு. அமைதியை அடிப்படையாகக் கொண்டது பாரமார்த்திகப் பெருவாழ்வு.

மருந்து வகைகளில் பல பொருளற்றவை என்பதை அறிகிறவன் நல்ல மருத்துவன். மதக் கொள்கைகளில் பல பொருளற்றவை என்பதை அறிகிறவன் நல்ல தத்துவஞானி.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய நூலை மகேந்திரநாதர் பரமஹம்சதேவர் முன்னிலையில் வாசித்தார். ஆங்குக் குழுமியிருந்த பக்தர்கள் அந்நூலின் உட்பொருளுக்குக் கூர்ந்து செவி சாய்த்துக் கொண்டிருந்தனர். அந்நூலில் அடங்கியிருந்த பாத்திரங்களுள் நிஷி என்னும் மாது வயதில் இளையவள். பவானிக்கு அவள் சிஷ்யையாகவிருந்தாள். தர்க்க சாஸ்திரத்தை ஆழ்ந்து ஆராய்ந்தவள் அவள். ஆனல் பிரபுல்லா என்னும் மாதோ கல்லாத அறிவிலி. நிஷி கிளப்புகின்ற கோட்பாடுகளுக்குத் தக்க விடையளிக்க அவளுக்கு இயலவில்லை. ஆயினும் சமுதாயச் சட்டதிட்டங்களை உருவாக்கிய நூலோர்க்கு எந்தெந்தக் கேள்விகளுக்கு என்னென்ன விடை பொருத்தமாகும் என்பது நன்கு விளங்கியிருந்தது. பரவஸ்து அகண்டம் என்பதில் ஐயமில்லை. ஆனல் அந்த அகண்ட வஸ்துவை மானுட ஹ்ருதயம் என்னும் சிறிய கூண்டுக்குள் அடைத்து வைப்பது சாத்தியமன்று. எல்லைக்குட்பட்ட சிறிய பொருள் ஒன்றைச் சிறிய இடத்தில் பொருந்த வைக்கலாம். அகண்டமாயுள்ள பரவஸ்துவானது வேண்டுமென்றே ஸ்ரீ கிருஷ்ணன் என்னும் எல்லையில் அடங்கியுள்ள சிறிய மூர்த்தியாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய கிருஷ்ணனை மானுட உள்ளம் என்னும் கூண்டினுள் வீற்றிருக்கச் செய்வது சாத்தியம். தலைவன் தலைவி என்னும் கோட்பாடு கடவுள் வழிபாட்டுக்கு மிகப் பொருத்தமானது. அவர்களிருவரும் காதலித்துக் கருத்து ஒன்றுபட்டிருப்பது கடவுள் வழிபாட்டுக்கு முதல் படியாகிறது. அக்காரணத்தை முன்னிட்டே கற்புடைய மாது ஒருத்தி தன் கணவனைக் கடவுளாகக் கருதுகின்ருள். இந்த மேலாம் லட்சியத்தினின்று கீழ் நிலைக்கு இறங்கி வந்துள்ள சமுதாயங்களில் கணவனும், மனைவியும் வெறும் ஒப்பந்த மூர்த்திகளாகின்றனர். அத்தகைய இணக்கம் கீழ்த்தரமானது. அது பாராட்டுதற்குரியது ஆகாது. பிரபுல்லா என்னும் பெண்பால் கல்வியறிவில்லாத மடந்தை. ஆதலால் நிஷி எடுத்துரைத்த கோட்பாட்டின் உட்பொருள் அவளுக்கு விளங்கவில்லை. "தோழி, நீ புகட்டுவது ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை; அது இருக்கட்டும். உன் பெயர் எனன என்பதை இன்னும் எனக்கு நீ எடுத்தியம்பவில்லை!"

நிஷி: "பவானி பதக் என்பார் என்னை நிஷி என்று அழைக்கின்ருர். இரவு என்பது அப் பதத்தின் பொருள். திவ என்பாருக்கு நான் சகோதரி. திவ என்னும் பதத்தின் பொருள் பகல். என் சகோதரியை ஒரு நாள் உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். என் பேச்சுக்கு மேலும் செவி சாய்த்துவா. கடவுள் ஒருவரே உண்மையான கணவன். கற்புடைய மாது ஒருத்திக்குத் தன் கணவனே கடவுள்.

"ஸ்ரீ கிருஷ்ணனே அனைவர்க்கும் கடவுள். இரண்டு மூர்த்திகளை, இரண்டு தெய்வங்களை நாம் போற்றுவானேன். நம் உள்ளத்திலிருக்கும் அன்பை நாம் இரண்டாகப் பிரித்தால் அது பொருளற்றதாகப் போய்விடும்!"

பிரபுல்லா: "உளருதே. மாது ஒருத்தியின் அன்புக்கு எல்லை ஏதேனும் உண்டா?"

நிஷி: "மாது ஒருத்தியின் அன்புக்கு முடிவு இல்லை. ஆனல் பக்தி வேறு, அன்பு வேறு."

மகேந்திரநாதர் இப்பொழுது புஸ்தகத்திலிருந்த கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குகிருர். பவானிபதக் பிரபுல்லாவுக்குப் பாரமார்த்திக வாழ்வைப்பற்றி உபதேசம் செய்துவைத்தார்.

புஸ்தகம் மேலும் தொடர்ந்து வாசிக்கப்படுகிறது.

உபதேசம் செய்துவைத்த முதல் வருஷம் முழுவதும் பிரபுல்லாவின் வீட்டுக்குள் ஆடவன் யாரும் நுழைவதற்குப் பவானி இடம்தரவில்லை. அதே விதத்தில் அவ்வீட்டுக்கு அன்னியராயிருந்த ஆடவன் எவனேடும் உரையாடுவதற்குப் பிரபுல்லாவுக்கு அனுமதி தரப்படவில்லை. ஒரு வருஷம் பூர்த்தியானபிறகு உரையாடுவதைப் பற்றிய நிபந்தனை ஒதுக்கிவைக்கப்பட்டது. ஆனல் வீட்டுக்குள் ஆடவன் யாரும் வரலாகாது. மூன்ரும் ஆண்டில்

பிரபுல்லா மொட்டையடித்துக்கொண்டாள். அதன் பிறகு தம்முடைய குறிப்பிட்ட சில சிஷ்யர்கள் மட்டும் பிரபுல்லாவைப் பார்ப்பதற்கு அனுமதி தரப்பட்டது. மொட்டையடித்துக்கொண்டிருந்த சிஷ்யை மற்ற குரு சகோதரர்களோடு பாரமார்த்திக விஷயத்தை மட்டும் பேசலாம். அப்படிப் பேசும்பொழுது அவளுடைய கண்பார்வை நிமிர்ந்து இருக்கலாகாது. அது நிலத்தைப்பார்த்த வண்ணமாக இருக்க வேண்டும்.

நூலின் உட்பொருளை மகேந்திரர் மேலும் வாசிக்கலாயினர். பிரபுல்லா சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். அவள் இலக்கணம் கற்றாள். அதன் பிறகு இரகு வம்சம், குமார சம்பவம், சாகுந்தலம், நைஷதம் முதலியன கற்கலானாள். அதன்பிறகு நியாயம், சாங்க்யம், வேதாந்தம் ஆகிய தர்சனங்களையும் அவள் கற்கலானாள்.

பரமஹம்சதேவர்: "இதன் உட்கருத்து யாது என்பது உங்களுக்கு விளங்குகின்றதா? ஏட்டுக் கல்வியில்லாதவர்களுக்கு ஞானமில்லை என்பது இந்த நூலாசிரியர் போன்றவர்களுடைய கருத்தாகும். சாஸ்திர ஞானம் முதலில் வருகிறது என்றும் அதைத் தொடர்ந்து கடவுள் ஞானம் வருகிறது என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஏட்டுக்கல்வியின் மூலமாகவே தான் பரஞானம் வருகிறது என்பது அவர்களுடைய கருத்து. இதில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்போம். யதுமல்லிக் அவர்களை அறிமுகப் படுத்திக்கொள்ள நான் விரும்புகிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படி அறிமுகப் படுத்திக்கொள்ளுவதற்கு முன்பு அவருக்கு வீடுவாசல் எத்தனை? சொத்துசுகம் எவ்வளவு என்பதை அறிந்துகொள்ள வேண்டுவது அவசியமா? யதுமல்லிக்கைப்பற்றிய இத்தனை விதமான விபரங்கள் எனக்குத் தேவையா? ஏதேனும் ஒருவிதத்தில் யதுமல்லிக்கருடைய வீட்டுக்குள்ளே நான் நுழையவேண்டும். வாயில் காப்பாளர்களை முகஸ்துதி பண்ணியோ, அல்லது அவருடைய முரட்டுத்தனமான செயலைப் பொருள்படுத்தாது விரைந்து வீட்டுக்குள் சென்றோ யதுமல்லிக்கோடு நான் நேரில் பேச வேண்டும். அப்படி நான் அவரிடம் இணக்கம் கொண்டான பிறகுவேண்டுமானால் அவருடைய சொத்துக்களைப் பற்றி நான் அவரிடம் கேட்கலாம். கேட்டமாத்திரத்தில் அவரைப்பற்றிய விபரங்கள் யாவும் தாமாகவே வெளியாகும். அதை அறிந்துகொள்ளுதலில் எனக்குச் சிரமம் ஏதும் உண்டாகாது. முதலில் பரமனை நாம் அறிந்து கொண்டாக வேண்டும். அந்தப் பரமனுக்குச் சொந்தமாயிருக்கும் பிரபஞ்சத்தைப் பற்றிய ஞானம் அதைத் தொடர்ந்து வரவேண்டும். எடுத்த எடுப்பில் வால்மீகிக்கு 'ராமா' என்று பகர இயலவில்லை. அதற்கு மாறாக மரா என்று உச்சரித்தார். ம என்னும் எழுத்து கடவுளைக் குறிக்கிறது. ரா என்னும் எழுத்து அவர் படைத்துள்ள சம்பத்தைக் குறிக்கிறது. வீட்டில் குடியிருப்பவனோடு முதலில் இணக்கம் பூணவேண்டும். அதற்குப் பிறகு தேவை ஏற்பட்டால் அந்த வீட்டைப் பற்றிய உண்மைகளையெல்லாம் வீட்டானே எடுத்து இயம்புவான்."

பரமஹம்சர் கொடுத்த இந்த வியாக்யானத்தை ஆங்குக் குழுமியிருந்த அன்பர்கள் ஆழ்ந்து கவனித்துக் கேட்டு வந்தனர்.

மகேந்திரநாதர் பிரபுல்லாவின் வரலாற்றைத் தொடர்ந்து வாசிக்கலாயினர்.

பிரபுல்லாவானவள் கல்வியை முடிவுக்குக் கொண்டு வந்தாள். பிறகு நெடுநாளாக அவள் ஆத்மசாதனம் புரிந்தாள். அப்பொழுது ஒரு நாள் பவானிபதக் அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். நிஷ்காமிய கர்மத்தை அவளுக்குப் புகட்டுதற்கு அவர் திட்டமிட்டு இருந்தார். பகவத்கீதை புகட்டுகின்ற கோட்பாடு ஒன்றை அவர் எடுத்துரைத்தார்: "உனக்கு ஏற்பட்டுள்ள நித்தியகர்மங்களைப் பற்றற்றவனாயிருந்துகொண்டு யாண்டும் புரிந்து வருவாயாக; பற்றற்றுப் பணிவிடை பண்ணுபவன் மேலாம் நிலை எய்துகிறான்."

நிஷ்காமிய கர்மத்தின் மூன்று கூறுகளை அவர் அவளுக்கு எடுத்து இயம்பினர்; இந்திரிய நிக்ரஹம் முதல்படி; அகங்காரமற்றிருப்பது இரண்டாம்படி; கர்ம பலனை ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் பண்ணுவது மூன்றும்படி. அகங்காரத்தில் ஊறிக்கிடக்கும் மானுடன் ஒருவனுக்குத் தன் கடமையை முறையாகச் செய்வது சாத்தியமன்று என்று அவர் மேலும் அவளுக்கு எடுத்து உரைத்தார். பக

வத்கீதையினின்று அவர் மேற்கோள் எடுத்துக் காட்டினர். அவர் இயம்பியதாவது: "பிரகிருதியின் குணங்கள் கர்மம் புரிகின்றன. அகங்காரத்தால் அறிவு மழுங்கியவன் நான் கர்த்தா என்று எண்ணிக்கொள்ளுகிறான்."

அடுத்தபடியாக பவானிபதக் கர்மபலனை ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அர்ப்பணம்பண்ணுவதைக் குறித்து விளக்கினர். அதற்கும் அவர் பகவத் கீதையினின்றே மேற்கோள் எடுத்துக் காட்டினர்: "நீ எதைச் செய்கின்றாயோ, எதை அருந்துகின்றாயோ, எதைத் தானமாக எடுத்து வழங்குகின்றாயோ, எத்தவத்தைப் புரிகின்றாயோ, குந்தியின் மைந்தனே அதை எனக்கு அர்ப்பணமாகப் பண்ணுவாயாக."

பரமஹம்சதேவர்: "இது மிகநன்று. இவை யாவும் கீதையின் கோட்பாடுகள். யாரும் இக்கோட்பாடுகளை மறுக்க முடியாது. இதற்கிடையில் மற்றொரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கர்மபலனை ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் படைப்பதைக் குறித்து இந்த நூலாசிரியர் பேசுகின்றார். ஆனால் பகவானிடத்தில் பக்திபண்ணுவதைக் குறித்து அவர் ஒன்றும் பகரவில்லை."

மகேந்திரர்: "இல்லை. பக்தியை வளர்ப்பதைப்பற்றிய பேச்சுக்கு ஈண்டு இடமில்லை."

அடுத்தபடியாகப் பிரபுல்லாவும் பவானிபதக்கும் பணத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப்பற்றிப் பேசினர்கள். தன்னுடைய செல்வமனைத்தையும் கிருஷ்ணனுக்கு ஒப்படைத்து விட்டதாகப் பிரபுல்லா பகர்ந்தார்.

அப்புஸ்தகத்தினின்று மேலும் மகேந்திரர் வாசிக்கலாயினர்.

பிரபுல்லா: "என் செயல்கள் அனைத்தையும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நான் எங்ஙனம் படைக்கின்றேனே அங்ஙனம் என் செல்வத்தையும் நான் அவனுக்குப் படைக்கின்றேன்."

பவானிபதக்: "செல்வம் முழுதையுமா?"

பிரபுல்லா: "ஆம்! செல்வமனைத்தையும்."

பவானிபதக்: "அப்படியானல் பற்றற்றவளாகப் பணிவிடை பண்ணுவது உனக்குச் சாத்தியப்படாது. உணவுக்காக நீ உழைக்கின்ற பொழுது அவ்வுழைப்பில் உனக்குப் பற்றுதல் உண்டாகும். ஆகவே இரண்டு உபாயங்களில் ஏதேனும் ஒன்றை நீ கையாளவேண்டும். உன் உணவைப் பிக்ஷையாக நீ ஏற்றுகவேண்டும், அல்லது நீ சம்பாதித்த பணத்தைக்கொண்டு நீ ஜீவனம் பண்ணவேண்டும். தான் பெறுகிற பிக்ஷா அன்னத்தில் பிச்சைக்காரனுக்கும் பற்றுதல் உண்டாகிறது. ஆதலால் உன்னுடைய சரீர சம்ரக்ஷணையின் பொருட்டு உன்னுடைய பணத்தையே நீ பயன்படுத்தவேண்டும்."

மகேந்திரர்: (புன்னகை பூத்தவராகப் பரமஹம்சரைப் பார்த்து) "உலகப்பற்று உடையவர்களுடைய போக்கு இத்தகையது."

பரமஹம்சதேவர்: "ஆம். அது உண்மை. ஆனல்கடவுள் பற்றுஉடையவன் ஆழ்ந்து சாதனத்தில் மூழ்குகிறான். தன் உடலைப் பற்றி அவன் எண்ணிப் பார்ப்பதில்லை.

அடுத்தபடியாக பவானிபதக் பிரபுல்லாவிடம் கேள்வி ஒன்று கேட்கின்றார். உன்னிடத்துச் செல்வம் ஏராளமாகவிருக்கின்றது. இந்தச் செல்வம் முழுவதையும் எம்முறையில் நீ கிருஷ்ணனுக்குப் படைப்பாய்?" பிரபுல்லா கொடுத்த விடையாவது: "அதில் சிரமம் யாது உளது? எல்லார் உள்ளங்களிலும் கிருஷ்ணன் குடியிருக்கின்றான். என் செல்வத்தைப் பல பேருக்குப் பங்கிட்டுக் கொடுப்பது கிருஷ்ணனுக்குக் கொடுப்பதற்கு ஒப்பாகிறது."

கீதையினின்று மேற்கோள் எடுத்துக்காட்டி பவானிபதக் பகர்ந்ததாவது: "எல்லாப்பொருள்களினும் என்னைக் காண்பவனும் எல்லாப் பொருள்களை என்னிடத்துக் காண்பவனும் ஒருபொழுதும் என்னிடத்திலிருந்து பிரிந்துபட்டுப்போவதில்லை. பரமாத்மாவாகிய நானும் அன்னவனிடமிருந்து பிரிந்துபட்டுப் போவதில்லை. எந்த யோகி எல்லா உயிர்களிடத்தும் இலங்குகின்ற என்னை வணங்குகின்றானே அன்னவனுடைய வாழ்வு எத்தகையதாயினும் அவன் பரமாத்மாவாகிய என்னிடத்தே லயப்பட்டவனாகின்றான். தனக்கு இன்பம் தருபவை யாவும் மற்ற உயிர்களுக்கு இன்பம் தருகின்றன, தனக்குத் துன்பம் தருகின்றயாவும் மற்ற உயிர்களுக்கும் துன்பம் தருகின்றன என்னும் கோட்பாட்டை அறிபவன் மஹாயோகியாகக் கருதப்படுகிறான்.

பரமஹம்சதேவர்: "பராபக்தியில் மூழ்கி இருப்பவனிடத்து இந்தப் பாங்குகளனைத்தையும் தெளிவுறக் காண்கின்றோம்."

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

41. பைம்பயிரை நாடும்உன்போல் பார்பூத்த பைங்கொடிசேர்
செம்பயிரை நாடித் திகைத்தேன்நான் பைங்கிளியே.

பைம்பயிரை - பசுமையான பயிரினை. பார் பூத்த-உலகைத் தோற்றுவித்த. பைங்கொடி- பச்சைக்கொடி போன்ற இடையினை உடைய பார்வதி தேவி. செம்பயிரை–செவ்விய பயிரா கிய சிவனரை.

பச்சைக்கிளியானது மரம், செடி, கொடி களில் எங்கு பசுமை ஏராளமாகவிருக்கிறதோ ஆங்கு அது இன்புற்று வாழ்ந்திருக்கிறது. இதில் தற்பாதுகாப்பு நிறைந்திருக்கிறது. ஆங்கிலத்தில் Camouflage சூழ்நிலைப் பாது காப்பு என அது பொருள்படுகிறது. அதற்கு இரண்டொரு சான்று எடுத்துக்கொள்வோம். செம்புழுதியில் வாழும் வெட்டுக்கிளி செம் புழுதி நிறத்துடன் இருக்கிறது. பச்சை இலை களுக்கிடையில் வாழும் வெட்டுக்கிளி அந்த இலை போன்றே பச்சை நிறம் உடையதாயிருக் கிறது. எதிரிகளிடத்திலிருந்து தற்பாதுகாப்புப் பெறுவதற்கு இச்சூழ்நிலை பயன்படுகிறது. பச்சை இலைகளுக்கிடையிலே வாழ்திருப்ப தால் பச்சைக்கிளியைப் பருந்து முதலிய சத் துருக்கள் எளிதில் கண்டு பிடிக்க முடி யாது. அந்தப் போக்கில் இயற்கைத் தாய் ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு விதத்தில் பாதுகாப்பு அளித்திருக்கிறாள்.

அன்னை பராசக்தி அகிலாண்டங்களனைத் தையும் தோற்றுவித்திருக்கிறாள். அப்படியிருந் தும் சிவனார் மேனியில் இடம் பெற்றுள்ள அப் பார்வதி தேவியானவள் யாண்டும் கன்னியா கவே இருந்து வருகிறாள். சேரிடம் அறிந்து அவள் சேர்ந்திருப்பதின் விளைவு அதுவாம். சிவனாரோ யாண்டும் நிறை பொருள். ஆதலால் அன்னவர் செம்பயிர் என ஈண்டு இயம்பப் பெறுகிறார். அத்தகைய உமா சமேதனாகிய சிவனாரை நான் சேர்ந்திருப்பேனாகில் அதற்கு நிகரான பாதுகாப்பு வேறு ஏதுமில்லை. அத்த கைய அழிந்துபட்டுப் போகாத பாதுகாப்பை நான் எங்ஙனம் பெறுவேனென்று திகைத் திருக்கிறேன். பச்சைக்கிளியே, பொருத்தமான சூழ்நிலையில் நீ நன்கு பாதுகாக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றாய். அதே விதத்தில் எனக் குப் பொருத்தமான சூழ்நிலையாகிய அம்மை யப்பன் சந்நிதியில் நான் இடம் பெறவேண்டு மென்று திகைத்து இருக்கிறேன் என்பது இக் கண்ணியின் கோட்பாடு.

42. பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ எம் [இறைவர்
மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே.

விளம்பிவா—தெரிவித்து விட்டு வருவாயாக.

தேகம் எடுத்திருக்கும் ஜீவாத்மன் தேஹி என அழைக்கப்பெறுகிறான். சரீரம் படைத் திருக்கும் ஜீவாத்மன் சரீரி என அழைக்கப் பெறுகிறான். எது ஓயாது தஹனமாய்க் கொண்டிருக்கிறதோ அது தேஹம். எது ஓயாது ஜீரணமாய்க் கொண்டிருக்கிறதோ அது சரீரம். குழந்தைப் பருவத்திலிருந்து சரீரம் ஓயாது மாறியமைந்து கொண்டே இருக்கிறது. மரணத்தின் வாயிலாக ஜீவாத்மன் ஏதேனும் ஒரு நாள் அந்தச் சரீரத்தினின்று விலகிக் கொள்கிறான். கல்பகாலம் முழுதும் மாறு படாத ஒரே சரீரத்தில் வாழ்ந்திருக்கும் ஜீவாத் மனைப் பிரபஞ்சத்தில் எங்கும் காண்பதில்லை. ஆகலால்தான் மானுட உடம்பைப் பொய்க்கூடு என்று அண்ணலார் இயம்புகின்றார். தேகம் எடுப்பதில் துன்பம். அதைப் பேணுதலில் துன்பம். அதை ஒதுக்குதலில் துன்பம். ஆக தேகமானது யாண்டும் துன்பத்துக்கு இருப் பிடமாகிறது. அத்தகைய தேகத்தை என்னு டையது என்று கருதி நான் புலம்புவது பொருந்துமா? தன்னுடையது அல்லாததைத் தன்னுடையது என்று கருதித்தானே உலக முழுதும் துயருற்றுக் கிடக்கிறது. சேரிடம் அறிந்து சேர் என்னும் கோட்பாட்டுக்கு இலக் காக இக்கண்ணியும் அமைந்திருக்கிறது. பொய்க்கூடு ஆகிய பிரகிருதிமயமான உட லோடு தொடர்வு கொள்ளாது ஆத்ம சொரூபத் திற்கு நிஜமான இருப்பிடமாகிய சிவனைச் சார்ந் திருப்பதே முறை. அச்சிவனாரை மெய்க்கூடு என்று மொழிவது பொருந்தும். ஏனென்றால் மெய்ம்மைக்கு அவரே இலக்கு ஆகிறார். கால

காலனுகிய அவரைக் காலம் எடுத்து விழுங்காது. இடத்திலே அங்கு இருக்கிருர், இங்கு இருக்கிருர் என்று எல்லே கட்டமுடியாத நிறை பொருளாக அவர் இருக்கிருர். காரணத்தை முகாமையாக வைத்துக்கொண்டு பிரபஞ்சம் தோன்றியிருக்கவும் மறையவும் செய்கிறது. ஆனல் மெய்ப்பொருளாகிய சிவனர் பூரணனுய் யாண்டும் இருந்தது இருந்தபடி இருக்கிருர். அத்தகைய மெய்ப்பொருளேயே நான் யாண்டும் சார்ந்திருப்பேன். பொய்ப்பொருளாகிய இப் பிரபஞ்சத்தை நான் ஒரு பொழுதும் சாரேன். நான் கொண்டுள்ள இந்த மேலான தீர்மானத்தைப் பச்சைக்கிளியே, பரமனிடம் சென்று பகர்ந்து வருவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

43. பொய்ப்பணி வேண்டேனேப் பொருள்படுத்தி
[அண்ணல் என்பால்
மெய்ப்பணியும் தந்துஒருகால் மேவுவனே பைங்
[கிளியே.

மேவுவனே—ஆட்கொள்வானே.

பொய்ப்பணி, மெய்ப்பணி ஆகிய இரண்டுக்குமிடையில் வேற்றுமை மிக உண்டு. பெரியோர் செய்கிறசெயலேப் பார்த்துச் சிறுவர்கள் அச்செயல்களே யெல்லாம் விளேயாட்டாகப் பண்ணுவதுண்டு. மணலிலே வீடுகட்டி மணலிலே சோறு சமைத்து அதைத் தங்களுக்கிடையில் வழங்கி விளேயாடுகிருர்கள். வெறும் விளேயாட்டை ஊக்கத்தோடும் ஓரளவு மெய் உணர்வோடும் புரிந்து வருகின்றனர். அப்படிச் செய்வது பாசாங்கு அல்ல. சிறுவருக்கேற்ற பண்புடனே அச்செயலேப் புரிந்து வருகின்றனர். கடவுள் வழிபாட்டில் மக்களில் பெரும்பான்மையோர் அச்சிறுவர்களுக்கு ஒப்பாகின்றனர். கோயிலுக்குப் போவதும், கடவுள் வழிபாடுபண்ணுவதும் சமுதாயப் பழக்க வழக்கத்தை அனுசரித்து அவர்கள் நடாத்துகின்றனர். அவர்கள் பண்ணுவதும் பாசாங்கு அன்று. ஆனல் அதில் பரபோதமோ அருள் நாட்டமோ ஏதுமில்லே. ஐதிகப்படி அவை யாவும் நிகழ்ந்து வருகின்றன. ஆனல் ஆத்ம பரிபாகம் அடைந்து வருகிற ஆத்மசாதகனுக்கு அருள்நாட்டமும் பராபக்தியும் வடிவெடுக்கின்றன. அருள் நாட்டத்தால் தூண்டப் பெற்றுச் செய்யும் ஆராதனே ஐதிகத்தால் தூண்டப் பெற்றுச் செய்யும் ஆராதனே போன்றதன்று. பிந்தியது சமுதாயப் பழக்க வழக்கங்களே ஒட்டியது. முந்தியதோ இறைவன் பால் பூண்டுள்ள பேருணர்வின் வேகத்தால் நிகழ்வதாம். ஐதிகத்தை அனுசரித்துப் பண்ணுவது மனிதனே விரைந்து மேல் நிலேக்கு எடுத்துச்செல்வதில்லே. இறை நாட்டத்தின் ஆவேசத்தால் செய்யப்படும் பணிவிடையோ அதிவிரைவில் மனிதனேத் தெய்விகப் பாங்குடையவனுகத் திருத்தியமைக்கிறது. அத்தகைய மேலாம் ஆர்வம் தமக்கு வரவேண்டுமென்று அண்ணல் பைங்கிளியோடு முறையிட்டுப் பேசுகின்ருர்.

44. மண்உறங்கும் விண்உறங்கும் மற்றுஉளஎலாம்-
[உறங்கும்
கண்உறங்கேன் எம்இறைவர் காதலால்
[பைங்கிளியே.

உலகத்தவர்களுக்கு எது பகலோ அது ஞானியர்க்கு இரவு. ஞானியர்களுக்கு எது பகலோ அது உலகத்தவர்களுக்கு இரவு. இக்கோட்பாடு பாரமார்த்திகப் பெருவாழ்வைத் தெளிவுற விளக்குகிறது. உலகினுள் வந்துள்ள மக்கள் தாம் எதைநாடி வந்திருக்கிருர்களோ அதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். சுகஜீவனம் வேண்டும் என்பவர்கள் அதை நாடுகின்றனர். போகம் வேண்டும் என்பவர்கள் அதற்குத் திட்டமிட்டுப் பாடுபடுகின்றனர். பொருளே ஏராளமாக ஈட்ட விரும்புகின்றவர்கள் அதற்கேற்ற சூழ்நிலேயை பண்ணிக்கொள்கின்றனர். பதவியையும் புகழையும் நாடுபவர்கள் அவற்றிற்காகப் பாடுபடுகின்றனர். ஆனல் பரநாட்டம் அரிதினும் அரிதாக யாரோ சிலர்க்குத்தான் அமைகிறது. அருள்நாட்டம் பூண்டிருப்பவர்கள் பாங்கு அலாதியானது. உலகத்தவர்களோடு கூடியிருந்து அவர்கள் பூணுகின்ற நாட்டங்களில் ஆத்ம சாதகர்கள் கருத்தைச் செலுத்துவதில்லே. அல்லும் பகலும் பரநாட்டத்திலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். பரத்தை அடையப்பெருது அவர்கள் தவித்திருப்பதில் அலாதி தெய்விகம் திகழ்கிறது. அத்தகைய பண்பு தம்மிடத்து வரவேண்டும் என்று அண்ணல் பரிவுடன் தெரிவித்துக் கொள்கிருர். இது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

10. நன்மக்கள் உலகுக்கு விளக்குப் போன்றவர்கள். குன்றின்மீது கட்டியுள்ள நகரத்தை யாரும் மறைத்து வைக்கமுடியாது. ஏற்றிவைத்த விளக்கை யாரும் கூடைக்குள் மூடிவைப்பதில்லை. விளக்கை அதற்குரிய விளக்கு மாடத்தில் வைக்கிறார்கள். அது வீடு முழுவதற்கும் வெளிச்சம் தருகிறது. விளக்குப் போன்று நல்லோருடைய நல்வாழ்வு ஏனையவர்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றது. நல்லோர் செய்கின்ற நல்வினைகளை மக்கள் போற்றிப் பாராட்டுகின்றனர். நல்லோரைப் பின்பற்றி ஏனையவர்களும் கடவுள் பக்தி உடையவர்களாகின்றனர்.

பரஞானம், அபரஞானம் என்ற இரண்டு வகை ஞானங்கள் இருக்கின்றன. அபர ஞானம் பிரபஞ்சத்தைப் பற்றியதாகும். பர ஞானம் கடவுளைப் பற்றியதாகும். அபர ஞானத்தை யார் வேண்டுமென்றாலும் பெறலாம். பரஞானமோ நூல்களின் மூலம் இருந்து பெற்றுவிட முடியாது. பரஞானம் பெறுவதற்கு ஒழுக்கம் மிக மிக இன்றியமையாதது. பரஞானம் பெற்ற பரமாச்சாரியர் தூய ஆத்மாக்களைத் தம்மிடம் இழுக்கின்றார். அத்தூய ஆத்மாக்களின் உள்ளத்தில் தம்மிடமுள்ள ஆத்மசக்தியைச் செலுத்துகின்றார். ஞானி தம்மிடம் வரும் தூய சிஷ்யர்களிடத்துத் தன் னம்பிக்கையை வளர்க்கின்றார். சிஷ்யர்களுடைய உள்ளத்தில் தெளிவை உண்டுபண்ணுகின்றார். சிஷ்யர்களை உலகத்துக்கு நன்னெறி காட்டுபவர்களாக மாற்றி அமைக்கின்றார். எல்லாருடைய உள்ளங்களிலும் சுயஞ்ஜோதியாக விளங்கிக் கொண்டிருக்கும் ஆத்மப் பிரகாசத்தைத் தங்கள் உள்ளத்தில் கண்டவர்களே உலகுக்கு ஞான ஒளியை வழங்கும் அருளாளர்களாகின்றார்கள். அத்தகைய அருளாளர்கள்தாம் உலக மக்களுக்குப் போதிக்கும் தகுதியுடையவர்களாகின்றார்கள். இறைவனுடைய செய்தியை உலகுக்கு எடுத்துச் செல்லும் அதிகாரம் அவர்களுக்குத்தான் உண்டு. கடவுளைப் பற்றிப் பேசவிரும்பும் ஒருவனை ஸ்ரீ ராமகிருஷ்ணர் சந்திக்கும் பொழுது "நீ உலகுக்குப் போதிப்பதற்குக் கடவுளிடமிருந்து அத்தாக்ஷி பெற்றிருக்கின்றாயா?" என்று கேட்பார். கடவுள் தரிசனம் பெற்றவர்களே கடவுளைப்பற்றி மற்றவர்களுக்குப் போதிப்பதற்குரிய அத்தாக்ஷி பெற்றவர்களாகிறார்கள். கடவுள் தரிசனம் பெறாத அன்பர்கள் கடவுளைப் பற்றிப் பேசுவதற்குத் தகுதியற்றவர்கள். கடவுள் காட்சி பெறாதவர்கள் செய்யும் மதப்பிரசாரம் மதத்துக்கு இழுக்கைத் தருகிறது. வெறும் தத்துவ நூல்களைப் படிப்பதால் மட்டும் நலன் விளைந்து விடாது. புத்தகப் படிப்பு ஞானஒளியைத் தந்துவிடாது. ஒருவன் சாஸ்திரங்களையும் வரலாற்று நூல்களையும் தரிசனங்களையும் ஏராளமாகப் படித்திருக்கலாம். சமயக்கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் ஒருவனுக்கு நல்ல திறமை இருக்கலாம். சமயக்கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பிரசாரம் செய்வதில் ஒருவன் திறமைசாலியாக இருக்கலாம். ஆனால் ஆத்மீக அனுபவத்தில் அவன் ஒரு குழந்தையாக இருக்கலாம். தன் உள்ளத்தில் ஆத்மதரிசனம் பெறாதவன் பிறருடைய உள்ளத்தை மாற்றி அமைக்க முடியாது. தன் உள்ளத்தில் ஆத்ம ஒளி பெற்றவனே பிறருடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கும் செயலைச் செய்கின்றான்.

பௌதிக, ரசாயன அறிவும், சாஸ்திர அறிவும் அபர ஞானத்தோடு சேர்ந்தவையாகும். கடவுள் தரிசனம் பெற்றவர்களே பரஞானம் பெற்றவர்களாகிறார்கள். கடவுள் காட்சி பெற்றவர்கள் நூல் அறிவு பெற்றவர்களாக விருக்கவேண்டுமென்று அவசியமில்லை. அவர்களுக்கு ஏற்பட்ட கடவுள் அனுபவத்தைக் கொண்டே கடவுளைப் பற்றிப் பிறர்க்குத் தெளிவாக எடுத்து விளக்குவார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நூலறிவு எதுவும் பெற்றிருக்கவில்லை. அவர் தேவியின் காட்சி பெற்றிருந்தார். ஒரு சமயம் அவருடைய உறவினர் ஒருவர் சாஸ்திரம் படித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாஸ்திர கருத்துக்களைக் கேட்டுப் பரமானந்தம் அடைந்தார். ஆனால் அவர் உறவினர் தாம் படிப்பது ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஒன்றும் விளங்காது என்று எண்ணிக்கொண்டிருந்தார். எனவே அவர் ஸ்ரீ ராம

கிருஷ்ணரைப் பார்த்து, "நான் படிப்பது உமக்கு விளங்குவது போன்று காட்டிக்கொள் கிறீர். நீர் படியாதவர்; நான் படிப்பது உமக்கு விளங்குகின்றதா?" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொடுத்த விடையாவது: "நான் படிக்காதவன், நீ என்ன புஸ்தகம் படிக் கிறாய் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நீ சொல்லும் விஷயங்களெல்லாம் என் அனுப வத்துக்கு ஒத்து இருக்கின்றன. நீ என் அனு பவத்தைப் பற்றிப் பேசுவது போல எனக்குத் தெரிகிறது. எனவே நீ சொல்லுவதைக் கேட் டுப் பரமானந்தம் அடைகிறேன்." ஸ்ரீ ராம கிருஷ்ணர் இங்ஙனம் பகர்ந்ததிலிருந்து சாஸ் திரக் கருத்துக்களெல்லாம் அனுபவத்திலிருந்து வந்தவைகள் என்று தெரிகின்றன. சாஸ்திரக் கருத்துக்கள் யாருடைய சொந்தக் கருத்துக் களும் அல்ல. அவைகள் சனாதன உண்மைகள் ஆகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் சுவாமி அற்புதானந்தர் ஒருவர் ஆவார். அவர் ஞான ஒளி பெற்றிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய சிஷ்யர்களுக்குள் அவர் ஓர் அலாதி யானவர் ஆவார். முறைப்படி அவர் கல்வி கற்கவில்லை. அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்தில் ஒரு வேலைக்காரப் பையனாக வந்து சேர்ந்தார். அப்பொழுது அவருக்குக் கையெழுத்துப் போடவும் தெரியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்கு வங்காள எழுத்துக்களைப் புகட்டு வதற்குப் பெரிதும் முயன்றார். ஆனால் அற்பு தானந்த சுவாமிகள் வங்காள மொழியிலுள்ள முதல் எழுத்தைக்கூடச் சரியாக உச்சரிக்க வில்லை. ஆனால் அவருடைய பிற்கால வாழ்க் கையில் அவர் ஒரு சிறந்த ஞானியாகத் திகழ் வதைப் பார்க்கிறோம். ஒருநாள் உபநிஷதப் பகுதியில் உள்ள கஷ்டமான சுலோகத்துக்குப் பொருள் காண்பதில் இளம் சந்நியாசிகள் சிரமப்பட்டார்கள். அனேக வியாக்யானங் களைப் புரட்டிப் பார்த்தும் அச்சுலோகத்துக்கு அவர்களுக்குப் பொருள் விளங்கவில்லை. கடைசியாக அற்புதானந்த சுவாமிகளை அச் சுலோகத்துக்கு விளக்கம் தரும்படி கேட்டார் கள். அற்புதானந்த சுவாமிகளுக்கு ஸம்ஸ்கிரு தம் தெரியாது. எனவே அந்த உபநிஷதப் பகுதியை அவருடைய தாய்மொழியில் மொழி பெயர்த்துச் சொன்னார்கள். அற்புதானந்த சுவாமிகள் அந்தச் சுலோகத்தைச் சிறிதுநேரம் தியானம் செய்தார். அதன் பிறகு எளிய உபமானம் ஒன்று கூறி அந்த உபநிஷதப் பகுதியை அவர்களுக்கு விளக்கினார். அவர் கூறியவிளக்கம் அந்தச் சுலோகத்தின் பொரு ளைத் தெளிவாக விளக்குவதாக இருந்தது. அந்த விளக்கத்தைக் கேட்ட இளம் துறவிகள் ஆச்சரியம் அடைந்தனர்.

கடவுளைக் கண்ட ஞானிக்குச் சமயத்தைப் புகட்டுவதற்குத் தகுதி வருகிறது. உலகத்தவர் கருதுகின்ற பட்டப் படிப்பு அவர்களுக்குத் தேவையில்லை. கடவுள் காட்சி பெற்றவ ருடைய இருதயம் தூய்மையும் பிரகாசமும் உடையது ஆகிறது. அவரிடமிருந்து அருள்ஒளி வெளிப்பட்டு அனைவர்க்கும் சாந்தியை அளிக் கிறது. அவரிடம் சிஷ்யர்கள் தாமாகவே வந்து சேருகின்றார்கள். சிஷ்யர்களைத்தேடிக்கொண்டு அவர்கள் எங்கும் செல்ல வேண்டியதில்லை. ஆகாயத்தில் உள்ள சூரியனை யாரும் மறைக்க முடியாது. அங்ஙனம் ஞானிகளிடம் உள்ள அருள்சக்தியை யாரும் மறைக்க முடியாது.

ஞான ஒளிபெற்றவர்கள் பக்குவமான உள் ளங்களை எல்லாம் தங்கள்பால் இழுக்கின்றார் கள். அவர்கள் முன்னிலைக்குச் செல்கின்ற பொழுது கடவுளைப்பற்றிய சிந்தனை குதித் தெழுந்து வருகிறது. அந்த ஞானிகளைப் பக்கு வம் அடைந்தவர்கள் பக்தியோடு நேசிக்கின் றார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் போகும் பொழுதுகடவுள் தரிசனத்தை எளிதில் பெற்று விடலாம் என்ற உணர்வு உள்ளத்தில் உண் டாகிறது. வழக்கறிஞரைப் பார்க்கின்ற பொழுது வழக்கைப்பற்றிய ஞாபகமும், வைத் தியரைப் பார்க்கிறபொழுது உடல் நோயைப் பற்றிய ஞாபகமும் ஏற்படுவன போல, கடவுள் தரிசனம் செய்தவர்களைப் பார்க்கும் பொழுது கடவுளைப் பற்றிய ஞாபகம் உண் டாகிறது. நறுமணம் உடைய பூவிடத்துச் செல்கின்றபொழுது நறுமணத்தை உணர்கின் றோம். அழுகிப்போன பிணம் இருக்கின்ற இடத்துக்குச் செல்லும்பொழுது துர்நாற்றம் வீசுவதை அறிகின்றோம். புனிதவான்கள் வசிக்கும் இடத்துக்குச் செல்லுபொழுதும் மன தில் புனித உணர்வுகள் உண்டாகின்றன.

யாரிடம் செல்கின்றபொழுது மன அமைதி உண்டாகின்றதோ அவர் மனச்சாந்தி அடைந்தவர் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். உலகத்துயரத்தில் அமுந்திக்கிடந்த ஒரு மனிதன் அதைப் போக்க இயலாதவனாக இருந்தான். துயரத்தைத் தாங்கமுடியாது தற்கொலை செய்துகொள்ளலாமா என்ற எண்ணம் அவனுக்கு வந்துவிட்டது அவன் ரமண மகரிஷியிடம் சென்றான். அவர் முன்னிலைக்குச் செல்லச் செல்ல அவனுடைய உள்ளத்தில் இருந்த துயரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. இதுதான் சான்றோர்களுடைய மகிமையாகும். மகான்கள் வாயில் இருந்து வருபவைகளெல்லாம் உள்ளத்திற்குச் சாந்தியையும் அமைதியையும் தருகின்றன.

ஆத்மீகச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ளும் பரிபாகம் நமக்கு இருக்கவேண்டும். கங்கையைப் பிரமவாரி என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வது உண்டு. கங்கையின் மகிமையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்றோர் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆனால் கங்கைக்குள்ளிருக்கும் மீனுக்கு அதன் மகிமை தெரியாது. ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்தமாத்திரத்தில் ,தங்களைப் பவித்திரமாக்கிக் கொண்டவர்கள் இருந்தார்கள். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் வாழ்ந்து அவருக்குச் சமாதி வரும்பொழுதெல்லாம் அவர் மேனியைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த ஹிருதயர் என்பவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மஹிமையை முற்றும் அறியாதவராக இருந்தார். அங்ஙனம் மனபரிபாகம் அடையாத மக்கள் ஆத்மீகச் சூழ்நிலையில் வாழ்ந்திருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளும் பாக்கியமற்றவர்களாகிறார்கள். குதிரை ஒன்றை நீருக்கு அருகில் இழுத்துச் செல்ல ஒருவர் போதும். ஆனால் அதற்கு விருப்பம் இல்லாவிடில் இருபது பேர் சேர்ந்தாலும் அதை நீர் அருந்தச் செய்யமுடியாது. இயேசுநாதரே முன்தோன்றி உபதேசித்தாலும் அருள் நாட்டம் இல்லாதவர்கள் அவ்வுபதேசத்தின் மஹிமையையும், அவருடைய இறைத் தன்மையையும் அறிந்துகொள்ள மாட்டார்கள். இராமன் தெய்வாம்சம் பொருந்தியவர் என்பதை ரிஷிகளில் சிலரே அறிந்திருந்தனர். இராவணன் கடைசிவரையில் இராமன் மஹிமையை அறிந்துகொள்ளாது அழிந்தான். அங்ஙனம் பண்பாடு அடையாதவர்கள் அருள் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள்.

கடவுள் நன்றுடையான் தீயதில்லாதவனாகின்றான். கடவுள் தன்மை உடையவர்களும் முற்றிலும் நலமே வடிவெடுத்தவர்களாகின்றார்கள். தீயைச் சார்ந்த விறகுக் கட்டை தீ மயமாவதுபோன்று நல்லவர்களைச் சார்ந்து அவர்களுடைய மஹிமையை உணர்ந்து அவர்கள் மயமாவதற்கு ஊக்கத்தோடு பாடுபடுகின்றவர்கள் அவர்கள் மயமே ஆகிவிடுகிறார்கள். நல்லவர்களைக் காணும்பொழுது நம்மிடமுள்ள நல்ல சம்ஸ்காரம் தூண்டிவிடப்படுகிறது. நல்லார்களுடைய கூட்டுறவிலேயே இருந்து பழகினால் நல்ல எண்ணம் வலுப்பெற்று வருகிறது. தெய்வச் சூழ்நிலை என்பது நல்ல எண்ணத்தை வலுப்படுத்துவதும், தீயஎண்ணத்தை ஒழிப்பதுமாகும். நல்ல எண்ணம் வலுவாகும்பொழுதுதான் நம் வாழ்வு நல் வாழ்வாகிறது. நலம் தரும் செயல்களை நாம் எண்ணியபடி முடிப்பதும் அப்பொழுது சாத்தியமாகும். நல்லதை ஆழ்ந்து எண்ணி நற்செயல் செய்து திண்ணிய வாழ்வு வாழ்ந்து தெளிந்த நல்லறிவு பெறுதல் நம்வாழ்வின் லட்சியமாகும். சூரியனுடைய வருகையால் பனி மறைவதுபோன்று தெய்வ சாந்நித்தியத்தில் தீமைகள் யாவும் நசித்துப்போய் விடுகின்றன. பாரதியார் பராசக்தியிடம் விண்ணப்பிப்பதாவது:

"எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல்லறிவு வேண்டும்;
பண்ணிய பாபமெல்லாம்
பரிதிமுன் பனியே போல,
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!"

உலகை உய்விக்க வந்தவர்களை ஒருநாளும் மறைத்து வைக்க முடியாது. அவர்களுடைய அருள் ஒளி உலகத்தில் உள்ளவர்களை எல்லாம் உய்விக்கின்றது. உலகத்தை உய்விக்கும் அருள் ஒளியை நம்மிடத்துத் தோற்றுவித்து உலகை உய்விக்கும் உத்தமர்களாக நாம் ஆக வேண்டும் என்பதே இயேசுநாதர் அருளிய இவ்வுபதேசத்தின் கருத்தாகும்.

அறத்தாறு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 20–1–75 அன்று மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[299ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருதராஷ்டிரன் பாண்டவர்களைப் பார்த்து "நீங்கள் இராஜ்பத்தைவிட்டு வெளியே போய்ச் சிறிது காலத்துக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு வரலாம்" என்று கூறி அவர்களை இராஜ்யத்தை விட்டு வெளியே அனுப்பி வைத்தான். துரியோதனன் அரக்கு மாளிகை ஒன்று கட்டி அதில் பாண்டவர்களைத் தங்கச் செய்து ஒழித்துக் கட்டிவிடச் சூழ்ச்சி செய்தான். பாண்டவர்கள் அவ்வரக்கு மாளிகையிலிருந்து தப்பித்து விட்டார்கள். மறுபடியும் பாண்டவர்கள் பாழடைந்து கிடந்த காண்டவப் பிரஸ்தத்தை இந்திரப் பிரஸ்தமாகச் சிறப்படையும்படி செய்து விட்டார்கள். பாண்டவர்கள் வளர்ச்சி அடைவதைப் பார்த்துத் துரியோதனன் பொறாமை கொண்டான். பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தை அபகரித்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டான். போர் புரிந்து அவர்களிடமிருந்து இராஜ்ஜியத்தைப் பெறமுடியாது என்று எண்ணிய துரியோதனன் சூதாடி அவர்களிடமிருந்து இராஜ்யத்தை அபகரித்துக்கொள்ளலாம் என்று எண்ணினான். பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைக்குமாறு துரியோதனன் தன் தந்தையைத் தூண்டினான். துரியோதனன் பேச்சைக்கேட்டுத் திருதராஷ்டிரன் பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைத்தான். "சூதாடுவது கொடியது; சூதாட்டத்தில் விவேகம் போய்விடும்; ஆனால் பெரியப்பா சூதாட்டத்தில் ஈடுபடும்படி உத்திரவு போடுகிறார். நான் அவருடைய உத்திரவை மீறி நடக்கமாட்டேன். அவருடைய உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து என் தந்தை பாண்டு நடந்துகொள்வார். அவருடைய பிள்ளையாகிய நான் பெரியப்பாவினுடைய உத்திரவு பொருந்தாது எனினும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்." இங்ஙனம் எண்ணிய யுதிஷ்டிரன் சூதாட்டத்தில் ஈடுபட்டு நாட்டை இழந்தான். காட்டில் தவ வாழ்க்கையில் பாண்டவர்கள் ஈடுபட்டவர்களானார்கள். இங்குப் பாண்டவர்கள் தீமையை எதிர்க்காது அதைப் பொறுத்துப் பழகினார்கள். அருள் நாட்டம் படைத்தவர்களாக வனத்திலிருந்து தவத்தின் மூலமாகத் தங்களைப் பலப்படுத்தி வந்தார்கள். துரியோதனன் பொருள்நாட்டம் உடையவனாக இருந்து தன்னுடைய சேனையின் பலத்தைப் பலப்படுத்தி வந்தான். மகரிஷி ஒருவர் வனவாசம் செய்து கொண்டிருந்த பாண்டவர்களிடம் சென்று அவர்களோடு சில நாட்கள் தங்கி இருந்தார். பிறகு அவர் அஸ்தினபுரத்துக்கு வந்தார். திருதராஷ்டிரன் அந்த ரிஷியை வரவேற்றான். உபசாரத்திற்காகத் தம்பிமக்கள் க்ஷேமமாக இருக்கிறார்களா? என்று கேட்டான். மகரிஷி பகர்ந்ததாவது: "பாண்டவர்களுடைய தவத்தின் மஹிமையை என்னென்று சொல்வது! சிவபெருமான் அர்ஜுனன் தவத்தை மெச்சி அவனுக்குப் பாசுபதாஸ்திரம் தந்துள்ளார். இந்திரனும் அர்ஜுனனுக்கு விதவிதமான அஸ்திரங்களை எல்லாம் தந்திருக்கிறான். பீமனும் முன்பிருந்ததைவிடப் பன்மடங்கு பலம் பெற்றவனாகத் திகழ்கின்றான். யுதிஷ்டிரன் அருள்நிலை ஓங்கப் பெற்றவனாக இருக்கின்றான். நகுல சகாதேவர்களும் சிறப்பு மிக எய்தியிருக்கின்றார்கள்." இதைக் கேட்ட திருதராஷ்டிரனுக்குத் தாங்கமுடியாத வேதனையாக இருந்தது. மகரிஷியிடம் பாண்டவர்களைப் பற்றி எதற்காகக் கேட்டேன் என்று தன்னைத்தானே நொந்து கொண்டான். பாண்டவர்கள் அருள் நாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். துரியோதனன் பொருள் நாட்டம் உடையவனாக இருந்தான். வனவாசம் செய்வதை நல்ல சந்தர்ப்பமாகப் பாண்டவர்கள் எண்ணி அக்காலத்தைத் தவத்தில் ஈடுபடுத்தினார்கள். வனத்துக்குப் போய்ச் சிறிது காலத்திற்கு பிறகு திரௌபதியும், பீமனும் யுதிஷ்டிரனிடம் பகர்ந்ததாவது: "போர் புரிந்து நாட்டைப் பெறுவது க்ஷத்திரிய தர்மத்துக்குப் ஒத்ததாகும். சூதாடி நாட்டை எடுப்பது க்ஷத்திரிய தர்மம் ஆகாது. துரியோதனன் சூதாடி நாட்டைப் பிடுங்கிக்கொண்டான். அப்பொழுது நீங்கள் அவனை எதிர்க்கக் கூடாது என்று சொல்லிவிட்டீர்கள்.

நீங்கள் சொன்ன பிரகாரம் ஒரு மாதத்துக்கு மேல் வனத்தில் இருந்து விட்டோம். இனி, துரியோதனன் மீது படையெடுத்துச் சென்று போர்செய்து இராஜ்யத்தை எடுத்துக்கொள்ள லாம். யுதிஷ்டிரன் அதற்குப் பகர்ந்ததாவது: "சொன்ன சொல்லைக் காப்பது மனிதனுடைய தர்மமாகும். எக்காலத்தும் சத்தியமே வெல்லும். பொய் ஒரு நாளும் வெற்றி அடையாது. நாம் எடுத்துக்கொண்ட விரதப்படி பன்னிரண்டு வருடங்கள் வனவாசமும், ஒரு வருடம் அக்ஞானவாசமும் செய்தாகவேண்டும். அதிலிருந்து நாம் தவறுதல் கூடாது."

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு

என்பது வள்ளுவர் வாக்கு. ஆசை வசப்பட்டு கௌரவர்கள் அவஞ்செய்வதில் ஈடுபட்டார்கள். பாண்டவர்கள் தவஞ்செய்து தங்களை மேலானவர்களாகத் திருத்தி அமைத்தார்கள். பீஷ்மர் பாரதப் போரில் கௌரவர்களோடு சேர்ந்து போர்புரிந்தார். அவர் நடுநிலையிலிருந்து பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சமாதானம் செய்து வைத்திருக்கலாம். அப்படி இல்லாமல் பாண்டவர்களோடு சேர்ந்து நலத்துக்குத் துணைபுரிந்து இருக்கலாம். கௌரவர்களோடு சேர்ந்து கேட்டுக்குத் துணைபுரிந்தது அறமாகுமா? என்னும் கேள்வி எழலாம். உலகுக்குப் பாடம் புகட்டவந்த பீஷ்மர் கெட்டவர்களுக்குத் துணைபுரிந்தார். விபீஷணன் கெட்டவனாகிய இராவணனை விட்டு நீங்கி அவனை எதிர்த்துப் போர்புரிந்தான். பீஷ்மர், விபீஷணனுடைய செயல்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. ஆனால் அவ்விரண்டு பேர்கள் செய்தவை சரியானவையே. ஏனென்றால் இரண்டு பேர்களிடத்திலும் சுயநலம் இல்லை. கிருஷ்ணபரமாத்மாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் பீஷ்மர் இருக்கிறார். கிருஷ்ணன் பாண்டவர்களுக்குச் சகாயமாக இருந்தார். கிருஷ்ணனுக்கு நிகராக இருந்த பீஷ்மர் துரியோதனனுக்கு உதவிபுரிந்தார். பீஷ்மர் போன்றவர்களுடைய உதவி கேட்டுக்குக் கிடைத்தாலும் கேடு வெற்றி அடையாது என்ற பாடம் நமக்குக் கிடைக்கிறது. பீஷ்மர் மனப்பூர்வமாகத் துரியோதனனுக்கு உதவிபுரிந்தும் துரியோதனன் வெற்றி அடைய முடியவில்லை. அது தீமை ஒருநாளும் வெல்லாது என்ற உண்மையை உலகுக்குப் புகட்டுவதாக இருக்கிறது. கேடு வெல்லாது என்ற பாடத்தை உலகுக்குப் புகட்டுவதற்கே கேட்டுக்குத் துணைபுரிதல் என்ற பெரிய தியாகத்தைப் பீஷ்மர் செய்தார். இனி விபீஷணன் சுயநலமற்றவனாக விளங்குகின்றான். இராவணன் போக்கில் போனால் இலங்கை முழுதும் அழிந்துபோய்விடும். கேடு சூழ்ந்த இராவணன் ஒழிந்து போனாலும் இலங்காபுரி மக்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று விபீஷணன் எண்ணினான். இராவணன் ஒருவன் ஒழிந்து போனால் குற்றமில்லை. இராவணனை முன்னிட்டு இலங்கை முழுதும் அழிந்துபோகக் கூடாது என்ற பரந்த எண்ணம் விபீஷணனிடம் இருந்தது. இலங்கை மக்களைப் பாதுகாத்தல் பொருட்டு இராவணனுக்கு எதிரியாக இராமனிடம் தன்னை முற்றும் ஒப்படைத்தான். விபீஷணனிடம் சுயநலம் சிறிதும் இல்லை. எனவே கேட்டுக்கு உதவிபுரிந்த பீஷ்மரும், கேட்டை எதிர்த்த விபீஷணனும் சுயநலமற்றவர்களாக இருந்தமையால் அவர்கள் செயல்கள் அறத்துக்கு ஒத்திருக்கின்றன.

இராமன், பரதன் ஆகிய இருவரும் சுயநலமற்றவர்களாக இருக்கின்றார்கள். இராமன் தாய் சொற்படி நடப்பேன் என்று சொன்னான். பரதன் தாய் சொல்லை மீறிப்போக ஆயத்தமாக இருந்தான். இவர்கள் இருவருள் யார் செய்தது அறமாகும்? என்ற கேள்வி எழுகிறது. இராமன், பரதன் ஆகிய இருவரும் சுயநலத் தியாகம் செய்தவர்களாகிறார்கள். இராஜ்ஜியம் தன்னிடத்தில் இருந்தால் என்ன? தம்பியிடத்தில் இருந்தால் என்ன? தம்பியே இராஜ்ஜியத்தை ஆளலாம்—இது இராமனுடைய மனப்பான்மை. "இராமனுக்குரிய சிம்மாசனத்தில் நான் அமரமாட்டேன். நான் இராமனுடைய தொண்டனாக இருப்பேன்." இது பரதனுடைய தியாகம். பதினான்கு வருட காலம் ஆட்சி புரிந்த காலத்திலும் பரதன் இராமச் சிந்தனையிலேயே மூழ்கி இருந்தான். மனிதன் எந்தத் துறையில் புகுந்து எதைச் செய்ய விரும்பினாலும் சுயநலத் தியாகம் பண்ணுகின்ற அளவு மேல்நிலைக்குப் போகின்றான். இராமன், பரதன் ஆகிய இருவரும்

சுயநலத்தியாகத்தில் உச்சநிலையில் இருக்கின்றார்கள். ஆகையால் இருவருடைய செயல்களும் அறச்செயல்கள் ஆகின்றன.

மகாபாரதத்தில் கர்ணன் என்னும் மற்றொரு சுயநலத் தியாகி வருகின்றான். தன் பிறப்பைப் பற்றி அறியாது பேராற்றலே வடிவெடுத்தவனாகக் கர்ணன் வளர்ந்து வருகின்றான். தேரோட்டி மகனாக அவன் வளர்ந்து வந்தாலும் அவன் தேரோட்டி மகனல்லன். பரசுராமரிடம் வில்வித்தை கற்றுச் சிறந்த போர் வீரனாக இருக்கின்றான். துரியோதனனுடைய அன்புக்கு அவன் பாத்திரமானான். துரியோதனனைச் சிறந்த நண்பனாக ஏற்றுக்கொள்கின்றான். கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களின் சார்பாகத் தூது வந்து பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் சமாதானம் பண்ணிவைக்க முயன்றார். கிருஷ்ணன் உட்பட எல்லாரும் ஒன்று கூடிப் பாண்டவர்களுக்குரிய இராஜ்ஜியத்தைக் கொடுத்துவிடுமாறு துரியோதனனுக்குப் புத்தி புகட்டினார்கள். ஆனால் துரியோதனன் "ஊசிமுனை இடமும் பாண்டவர்களுக்குத் தரமாட்டேன். இராஜ்ஜியம் என்னுடையது. என்னிடம் பெரியசேனை இருக்கிறது. பாண்டவர்களைப் போரில் ஒரு கைபார்த்துவிடுகிறேன்" என்று துடையைத் தட்டிக்கொண்டு சொன்னான். இங்ஙனம் துர்ப்புத்தி உடைய துரியோதனன் அறத்துக்கு நேர்மாறாகச் செல்கின்றான். இத்தகைய துரியோதனனுக்கு அன்பின் மூலம் வசப்பட்டு இருந்த கர்ணன் தன் வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்தான். கிருஷ்ண பரமாத்மா கர்ணனைத் தனியாக அழைத்தார். கர்ணனிடம் "நீ குந்தியின் மகன்" என்ற இரகசியத்தை வெளியிட்டார். "நீங்கள் உண்மையைப் பகர்வீர்கள், ஆனால் நான் குந்தியின் மகன் என்ற உண்மையைக் கேட்டு ஆனந்தமடைகிற நிலையில் நான் இல்லை. இவ்வுண்மையை அறியும்பொழுது நான் அதிகத்துயரத்துக்கு ஆளாகின்றேன்" என்றான் கர்ணன். "கர்ணா, நீ குந்தியின் மகன் என்பதை ஒப்புக்கொண்டால் நீ அரசனாகலாம். நீ அரசனாவது பாண்டவர்களுக்கும் சம்மதம், துரியோதனனுக்கும் சம்மதமாகும். நீ அரசனாகி விட்டால் யுத்தம் நின்று போய்விடும். யுத்தத்தை நிறுத்துவது உன் கைவசமிருக்கிறது. இப்பொழுது நீ என்ன சொல்கின்றாய்?" என்று கிருஷ்ண பரமாத்மா கேட்டார். "உங்கள் நல்லெண்ணத்தைப் பாராட்டுகின்றேன். ஆனால் தயவு செய்து நான் குந்தியின் மகனென்ற இரகசியத்தைப் போர் முடியும்வரை வெளியிட்டு விடாதீர்கள். நான் துரியோதனனுக்காகப் போர் புரிந்து உயிர் கொடுக்கத் தீர்மானித்து இருக்கிறேன். இராஜ்ஜியத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றான் கர்ணன். கர்ணன் இங்கு ஒரு சுயநலத்தியாகியாக இருக்கின்றான். கெட்டவனுக்கு உதவிபுரிந்தாலும் அவனிடத்தில் சுயநலம் சிறிதும் இல்லை. கண்ணனுக்குப் பிறகு குந்தியே கர்ணனிடம் வந்து தான் அவனுடைய தாய் என்பதை நிரூபித்துக்காட்டுகின்றாள். அப்பொழுதும் கர்ணன் சுயநலத்தியாகியாக நடந்துகொள்கின்றான். போரில் எல்லாவற்றையும் இழந்து அர்ஜுனன் எதிரில் நிற்கின்றான் கர்ணன். கர்ணனுக்கு அவன் செய்த புண்ணியமெல்லாம் பாதுகாப்பாக நிற்கிறது. கிருஷ்ணபரமாத்மா ஒரு யாசகனாக வந்து கர்ணனுடைய தானத்தின் புண்ணியத்தையெல்லாம் கர்ணனிடம் இருந்து வாங்கிக் கொள்கின்றார். அப்பொழுதுதான் கர்ணனுக்கு முக்தி கிடைக்கின்றது. கெட்டவர்களுக்காகப் போர் புரிந்த பீஷ்மருக்கும், கர்ணனுக்கும் முக்தி கிடைக்கின்றது. அவர்கள் இருவரிடத்திலும் சுயநலம் சிறிதும் இல்லாததால் அவர்கள் முக்திக்குரியவர்களானார்கள். சுயநலத்தியாகம் செய்கின்ற அளவு அறத்தில் நாம் மேலே போகின்றோம்.

அறமே வடிவெடுத்திருந்த தர்மராஜா மூலம் அறத்துக்கு முடிவான விளக்கம் கிடைக்கிறது. துரியோதனனோடு போர் புரிந்து பாண்டவர்கள் வெற்றி அடைந்தார்கள். போரின் துவக்கத்தில் போர் புரியமாட்டேன் என்று அர்ஜுனன் கூறினான். அர்ஜுனனைச் சரிப்படுத்துவதற்குக் கண்ணன் கீதை உபதேசம் செய்தார். போரில் வெற்றி அடைந்த பிறகு இராஜ்ஜியத்தை ஆளமாட்டேன் என்று தர்மர் கூறுகின்றார். அவரைச் சரிபண்ணுவதற்குக் கண்ணன் பாண்டவர்களைப் பீஷ்மரிடம் அழைத்துச் செல்கின்றார். பீஷ்மர் சரீரத்தை உகுப்பதற்காக உத்தராயணப் புண்ணிய காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். பீஷ்மர் இச்சா

மிருத்யு என்னும் வரம் பெற்று இருக்கின்றார். அவ்வரத்தின்படி அவருடைய அனுமதியில்லாது அவரை மரணம் அணுகமுடியாது. உத்தராயணப் புண்ணியகாலத்தில் சரீரத்தை விட்டு விடுவதற்காகக் காத்துக் கொண்டிருந்த பீஷ்மரிடத்தில் கண்ணன் பாண்டவர்களை அழைத்து வந்தார். பீஷ்மரைப்பார்த்துக் கண்ணன்பாண்டவர்களுக்குத் தர்மோபதேசம் செய்து வையுங்கள் என்றார். "கண்ணா, உன் முன்னிலையில் நான் எப்படித் தர்மோபதேசம் செய்வது? நீயே அவர்களுக்கு வேண்டியதைப் புகட்டு" என்றார் பீஷ்மர். "உங்களுடைய ஆற்றலை எல்லாம் ஒரு பேரனுக்குக் கொடுத்தீர்கள். அவன் அறம் வழுவிப் போனதால் அது அவனுக்குப் பயன்படாது போய்விட்டது என்பதை உலகுக்குப் புகட்டினீர்கள். உங்களுடைய அறிவை எல்லாம் இப்பொழுது உங்கள் முன் நிற்கின்ற மற்றொரு பேரனுக்குக் கொடுங்கள். உங்கள் அறிவு பாண்டவர்கள் மூலமாக உலகுக்குப் பயன்படும். சரீர உணர்ச்சியைக் கடந்திருக்கும் நிலையைச் சிறிது நேரம் உங்களுக்குத் தருகின்றேன். நீங்கள் அவர்களுக்கு வேண்டிய தர்மோபதேசம் செய்யுங்கள்" என்றார் கண்ணன். வாழ்க்கைத் தத்துவங்கள் எல்லாம் சாந்தி பருவத்தில் பீஷ்மருடைய வாயிலிருந்து உபதேசங்களாக வந்தன. பீஷ்மர் அதைச் செய்துவிட்டு முக்தி என்னும் பெருநிலைக்குப் போய்விடுகின்றார். பாண்டவர்கள் அதன் பிறகு பதினெட்டு ஆண்டுகள் சீரிய ஆட்சி புரிந்து விட்டுச் சொர்க்கத்துக்குப் புறப்பட்டுப் போனார்கள். பரீக்ஷித்துக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்துவிட்டுப் பூமியை வலம்வந்து சொர்க்கத்தை நோக்கிப் போனார்கள். கயிலைக்குப் பக்கத்தில் போகின்ற பொழுது அவர்களை அழைத்துப்போக விமானம் வந்தது. பாண்டவர்கள் ஐவர், திரௌபதி, ஒரு நாய் ஆகிய ஏழுபேர் அக்கூட்டத்தில் இருந்தார்கள். சொர்க்கத்துக்குப் போய்க் கொண்டிருக்கும் வழியில் திரௌபதி மடிந்து கீழேவிழுந்தாள். தர்மரைத் தவிர மற்ற சகோதரர்கள் திரௌபதி விழுந்துவிட்டாள் என்று சொன்னார்கள். தர்மர் திரும்பிப் பார்க்காது அவளிடத்திலிருந்த சிறிய குறை ஒன்றைக் கூறினார். அவள் கற்புடையவள். ஐவருக்குப் பொதுவாக மனைவியாக இருக்கவேண்டியவள் அலாதியாக அர்ஜுனனிடத்துச் சிறிது அன்பு அதிகமாக வைத்திருந்தாள். அக்குற்றத்திற்காக அவள் வீழ்ந்தாள். திரௌபதி ஐவருக்கு மனைவியாக இருந்ததில் ஒரு பெரிய தத்துவம் இருக்கிறது. பாண்டவர்கள் ஐவரையும் ஐம்பொறிகளாக வைத்துக்கொண்டால் திரௌபதியை மனதாக வைத்துக்கொள்ளலாம். மனம் ஐம்பொறிகளுக்கும் பொதுவாக வேலைசெய்கிறது. அதற்கிடையில் மனம் தன் தூய்மையை இழந்து விடுவதில்லை.

மேலும் அவர்கள் போய்க்கொண்டே இருந்தார்கள். கொஞ்சதூரம் போனதும் சகாதேவன் வீழ்ந்தான். சகாதேவன் வீழ்ந்துவிட்டான் என்ற செய்தியைத் தர்மருக்குச் சொன்னார்கள். சகாதேவன் சாஸ்திர ஆராய்ச்சியில் நிகரற்றவன். எனவே அவனிடம் கல்விச் செருக்கு இருந்தது. ஆதலால் அவன் வீழ்ந்தான் என்று தர்மர் பகர்ந்தார். மேலும் சிறிது தூரம் சென்றதும் நகுலன் வீழ்ந்தான். நகுலன் வீழ்ந்தான் என்ற செய்தியைத் தர்மரிடம் சொன்னார்கள். நகுலன் உடல் அழகு வாய்ந்தவன். உடல் அழகில் தனக்கு நிகரானவர் யாருமில்லை என்னும் செருக்கு அவனிடம் இருந்தது. ஆகையால் அவன் வீழ்ந்தான் என்று தர்மர் கூறினார். மேலும் சிறிது தூரம் சென்றதும் அர்ஜுனன் வீழ்ந்தான். மகாபாரதப் போரில் தான் ஒருவனே எதிரிகளை எல்லாம் கொல்லக்கூடிய காண்டீபம் வைத்திருக்கிறேன் என்று ஆயுதம்பற்றிய செருக்குடையவனாக அர்ஜுனன் இருந்தான். இறைவனுடைய திட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட கடமை இருக்கிறது. உலகத்தில் வீணாகப் பிறந்தவர்கள் யாருமில்லை. ஒவ்வொருவருக்கும் அமைந்த கடமை அவரவர்களுக்குரிய தர்மம் ஆகிறது. இதை உணராது அர்ஜுனன் எதிரிகளை எல்லாம் தான் ஒருவனே ஒழிக்கும் திறமை உடையவன் என்று தன் திறமையிடத்துச் செருக்குக் கொண்டவனாக இருந்தான். ஆகையால் அவன் வீழ்ந்தான் என்றார் தர்மர். கடைசியாகப் பீமனும் வீழ்ந்தான். பீமனுக்குப் பலத்தைப் பற்றிய செருக்கு இருந்தது. பலத்தில் தனக்கு நிகரானவர்கள் யாருமில்லை என்று பீமன் எண்ணியதால் அவன்வீழ்ந்தான்

என்று தர்மர் கூறினர். தர்மர் மட்டும் தனியாகப் போனர். அவரைத் தொடர்ந்து நாய் ஒன்று சென்றது.

தர்மரைச் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல விமானம் ஒன்று வந்தது. இந்திரன் தர்மரிடம் பகர்ந்ததாவது: “உங்கள் தம்பிமார்கள் சிறு சிறு குற்றங்கள் செய்தமையால் சொர்க்கம் போவதற்குத் தகுதி அற்றவர்கள். பூதசரீரத்தோடு சொர்க்கம் செல்வதற்கு நீங்கள் ஒருவரே தகுதி வாய்ந்தவர். “திரௌபதி, தம்பிமார்களுடைய நிலை தெரியாது நான் சொர்க்கத்துக்கு வரமாட்டேன்'' என்ருர் தர்மர். ''உங்களுக்கு அவர்கள்மீது இத்தகைய அபிமானம் இருந்தால் அவர்கள் கீழே விழுந்தபொழுது ஏன் திரும்பிப்பார்க்காது வந்தீர்கள்?'' என்ருன் இந்திரன். ''திரும்பிப் பார்த்திருந்தால் நானும் வீழ்ந்திருப்பேன்'' என்ருர் தர்மர். இதில் நமக்கு ஒரு பெரிய பாடம் இருக்கிறது. உயர்ந்த லட்சியத்தை நாடிப்போகின்றவர்கள் திரும்பிப் பார்க்கக் கூடாது. லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கவேண்டும். தர்ம ராஜாவின் பரந்த மனப்பான்மையை இந்திரன் பாராட்டினன். உங்கள் தம்பிமார்களுடைய சரீரங்கள் சிறு சிறு குற்றத்துக்காக வீழ்ந்து விட்டன. அவர்களுடைய ஆத்மாக்கள் சொர்க்கத்திற்குக் கொண்டு போகப்பட்டுள்ளன. நீங்கள் விமானத்தில் ஏறுங்கள். இங்ஙனம் இந்திரன் கூறியதும், யுதிஷ்டிரன் விமானத்தில் ஏறப் போனர். அவருடன் சென்ற நாயும் வாலை ஆட்டிக்கொண்டு விமானத்தில் ஏற வந்தது. சொர்கத்தில் நாய்க்கு இடமில்லை என்று இந்திரன் சொன்னன். ''என்னை நம்பி வந்த நாய்க்கு இடமில்லை என்ருல் எனக்கும் சொர்க்கம் வேண்டாம். என்னை நம்பி வந்த நாயை இடைவெளியில் விட்டுவிட்டுச் சொர்க்கத்தைப் பெரியதாகக் கருதிக் கொண்டு வரமாட்டேன். என்னை நம்பி வந்த நாயைப் புறக்கணிக்க மாட்டேன்.” இங்ஙனம் யுதிஷ்டிரன் பகர்ந்தார். இந்திரன் கூறியதாவது: ‘தம்பி மார்களோடும், திரௌபதியோடும் சொர்க்க வாழ்க்கை வாழ விருப்பமா, இந்த நாயோடு பூலோக வாழ்க்கை வாழ விருப்பமா?'' ''நாய் உங்களுக்கு அற்ப ஜந்துவாகத் தென்படலாம். நான் எல்லா உயிர்களையும் சமமாகப் பாராட்டுகின்றேன். தம்பிமார்களையும், திரௌபதியையும் கருதுவது போன்று இந்த நாயையும் கருதுகின்றேன். என்னை நம்பி வந்த உயிரை ஒரு நாளும் இடைவெளியில் விட்டு விடமாட்டேன். அதை இடைவெளியில் விட்டுவிட்டு எனக்குப் பெரிய பதவி கிடைக்கிறது என்று நான் வரமாட்டேன். பூலோகம் மட்டமானதாக இருக்கலாம். நாய் அற்ப ஜந்துவாக இருக்கலாம். ஆனல் அது என்னை நம்பி வந்திருக்கிறது. அதை முன்னிட்டுத் தம்பிமார்களோடும், மனைவியோடும் வாழும் சொர்க்க வாழ்வைத் தியாகம் பண்ணுகிறேன்'' இங்ஙனம் யுதிஷ்டிரன் பகர்ந்தார்.

நாயாக வந்தது தர்ம தேவதையாக மாறி அமைந்தது. தர்ம தேவதை பகர்ந்ததாவது: “யுதிஷ்டிரா, நீ தர்மத்தைக் காலமெல்லாம் கடைப்பிடித்து வந்துள்ளாய். நாய் எஜமானனைப் பின்பற்றுவது போன்று நான் தோன்ரு நிலையில் இருந்துகொண்டு உன்னைப் பின்பற்றிக்கொண்டே வந்தேன். நீ தர்மத்தை விட்டுப் பிசகாதவனுக இருந்தாய். நீ தான் சொர்க்கத்திற்குத் தகுதியுடையவன்.” அதன் பிறகு தர்மனைச் சொர்க்கத்திற்குஅழைத்துக்கொண்டு போனர்கள். இது தான் நம்முடைய தேசிய லட்சியம். இதுதான் நமக்குரிய தர்மமார்க்கமாகும். சுயநலம் படைத்திருக்கின்ற அளவு அதர்மம் ஆகிறது. சுயநலத்தியாகம் பண்ணுகின்ற அளவு அது தர்மமாகிறது.

பரதன் சுயநலத்தியாகம் பண்ணினன். ஆகையால் அவன் ஆழ்வாராகின்ருன். இராமன் இராஜ்ஜியத்தை ஆள்வதைவிடத் தாய், தந்தையர் சொற்படி நடப்பது கடமை என்று இராஜ்ஜியத்தைத் தியாகம் செய்தான். அவன் அவதார மூர்த்தி என்று சொல்லும் நிலைக்கு வந்தான், ரிஷிகளுடைய ஆசிகளுக்கு உரியவனுனன். விபீஷணன் தீமையை எதிர்த்து நாட்டின் நலனுக்காகப் போராடினன். ஆகையால் அவன் விபீஷண ஆழ்வார் ஆனன். பாண்டவர் ஐவரும் சுயநலம் அறவே அற்றவர்களாக வாழ்ந்தார்கள். தர்மத்தினுடைய புதல்வர்களாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அதர்மத்தில் ஈடுபட்டவர்கள் எல்லாரும் அழிந்தார்கள். அதர்மம் வெல்லாது என்பதற்குப் பீஷ்மர் பெரிய தியாகம் பண்ணினர். நண்பனி

டத்து நான் வைத்த அன்பை மாற்றமாட்டேன். அதை முன்னிட்டு எனக்கு நரகமே வந்தாலும் நான் ஏற்றுக்கொள்வேன். நண்பனின் பொருட்டு நான் உயிர்கொடுப்பேன். இத்தகைய சுயநலத் தியாகியாகக் கர்ணன் இருந்தான். ஆகையால் அவனுக்கு முக்தி கிடைத்தது.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு "யான், எனது" என்னும் செருக்கை ஒழிக்கின்றோமோ நாம் அவ்வளவுக்கவ்வளவு மேன்மை அடைகின்றோம். இந்த எண்ணத்தில் ஊறியவர்களாக நாம் வாழ்ந்து வரவேண்டும். அப்படி வாழ்ந்து வந்தால் இந்தியா பழைய பண்பை மறுபடியும் பெறும். அப்பண்பை மறந்து வெறும் பொம்மைகளாக நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்து வருவோமானால் நமக்கும் நலனில்லை, உலகுக்கும் நலனில்லை. பாரமார்த்திகப் பண்பு நிறைந்த நாட்டில் நாம் பிறந்தவர்கள். நாகரிகத்தின் உச்சநிலையிலிருக்கின்ற நாட்டில் நாம் பிறந்தவர்கள். இதை உணர்ந்து நாம் அந்த மயம் ஆகவேண்டும். ஆண்டாள் 'ஏல் ஓர் எம்பாவாய்' என்று பகர்ந்துள்ளார். மேலான கருத்தை ஏற்று எண்ணிப் பாருங்கள் என்பது அதற்குப் பொருள். மேலான கருத்தை எண்ணிப்பார்த்து அந்த மயமாக நாம் வாழ்வைத்திருத்தி அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்த நாட்டிற்குரிய நன்மக்கள் ஆகின்றோம். இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பொம்மைகளாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களால் அவர்களுக்கோ, உலகுக்கோ எவ்வித நலனும் இல்லை. தர்மத்தை உறுதியாகப் பிடித்துச் சுயநலத் தியாகம் செய்து இந்த நாட்டின் மேலான இலட்சியத்தில் மனதை நிலைநிறுத்தி வாழ்ந்து வருவோமானால் இந்த நாட்டிற்குரிய செல்வர்கள், செல்விகள் ஆகின்றோம்.

தர்மர் சொர்க்கத்துக்கு போய்ச் சேர்ந்தார். அங்குத் துரியோதனன் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதைப் பார்த்தார். தம்பிமார்கள் யாரையும் அங்குக் காணவில்லை. யுதிஷ்டிரன் அப்பொழுது பகர்ந்ததாவது: "சொர்க்கம் என்பது இதுதானா! இந்தச் சொர்க்கம் எனக்கு வேண்டாம். என் தம்பிமார்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்." தேவர்கள் யுதிஷ்டிரனை அழைத்துச் சென்றார்கள். நரகத்தின் பகுதிக்குச் செல்கிறார்கள். அங்கிருந்து துர்நாற்றம் வருகிறது. சகோதரர்கள் அழுது கொண்டிருக்கிற கூக்குரல் தர்மருடைய காதில் வந்து விழுந்தது. "பூலோகத்தில் அடாத செயலைச் செய்த துரியோதனனுக்குச் சொர்க்கம் கிடைத்திருக்கிறது. தர்மத்தை விட்டுப் பிசகாதிருந்த என் சகோதரர்களுக்கு நரகம் கிடைத்திருக்கிறது. இதுதான் தேவலோகத்தின் நீதி என்றால் இந்தச் சொர்க்கம் எனக்குவேண்டாம். தம்பிமார்களுடன் நான் நரகத்தில் இருந்து கொள்கிறேன்." இங்ஙனம் யுதிஷ்டிரன் பகர்ந்தார். இது சுயநலத்தியாகத்தின் உச்சநிலையாகும் அப்பொழுது யமதர்மராஜாவும் இந்திரனும் யுதிஷ்டிரனுக்குப் பகர்ந்ததாவது: தேவலோகத்தில் நீதி ஒருநாளும் பிசகாது. ஒருவன் ஏராளமாகத் தீமை செய்து சிறிது நலன் செய்திருந்தால் அந்த நலனின் பயனை முதலில் அவனுக்குத் தந்துவிடுகிறோம். துரியோதனன் அந்தக் கூட்டத்தில் ஒருவன் ஆகின்றான். அவன் செய்த சிறு நலனை இப்பொழுது அவன் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். நலனுக்குரிய புண்ணியத்தை அனுபவித்ததும் அவனுக்குரிய இடமாகிய நரகத்திற்குப் போய் விடுவான். அங்கு அவன் நீண்டகாலம் கிடப்பான். சிறு தீங்கு செய்து ஏராளமான நன்மை செய்தவர்களுக்குத் தீங்கின் பலனை முதலில் தந்துவிடுகிறோம். அக்கூட்டத்தில் உம்முடைய சகோதரர்கள் சேர்ந்திருக்கிறார்கள். எனவே அவர்கள் தீமையின் பலனை அனுபவிப்பதற்கு இப்பொழுது நரகத்திலிருக்கிறார்கள். இந்தச் சிறிய காலம் முடிந்தவுடன் அவர்கள் சொர்க்கத்திற்குப் போய்விடுவார்கள். நீர் 'அசுவத்தாம குஞ்சர:' என்று சொன்ன குற்றத்திற்காக நரகத்தைப் பார்க்கும் தண்டனை உமக்குக் கொடுத்துள்ளோம். இனி உமக்கும், உம்முடைய சகோதரர்களுக்கும் சொர்க்க வாழ்வு அமையும். அங்கிருந்து சிலர் முக்திக்குப் போவீர்கள். இன்னும் சிலர் வீரப் பிறப்பெடுப்பீர்கள். அறத்தை உறுதியாகப் பிடித்துச் சுயநலத்தியாகம் செய்து பாரமார்த்திகப் பண்பில் ஊறிவளர்வோம். பரமனுடைய பேரருளால் நாட்டிற்குரிய நன்மக்களாக நாம் திருந்தி அமைவோமாக. (முற்றும்)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

V. ஞால நாயகன்தேவி :

முன் பகுதியில் அனுமன் சீதையைப் பார்க்க அசோக வனத்துள் நுழைந்தபோது சீதை இருந்த நிலையைக் கண்டோம். அனுமன் மட்டுந்தானு சீதையை அந்நிலையில் கண்டான்? கம்பனின் கவிதைத் திறத்தால் நாமும்தாம் கண்டோம். இனி, அனுமன் சீதையைப் பார்த்து அவள்தான் சீதை என்று உறுதி கொள்ளும் நிலையைக் காண்போம்.

1. மேகமும் மின்னலும்

அசோகவனத்துள் நுழைந்த அனுமன் எண்ணிறந்த அரக்கியர் எழுந்து ஓடுவதையும், அவர்கள் எதனையோ சுற்றிக்கொண்டு நிற்பதையும் கவனித்து, விரைவாக அவர்களைப் பின்தொடர்ந்து, மரத்திற்கு மரம் தாவிச் சென்று, அவர்களை நன்கு கவனிக்கும் முறையில் ஒரு மரத்தில் அமர்ந்துகொண்டு, அந்த அரக்கியரின் பதட்டமான நடவடிக்கைக்கு என்ன காரணம் என்று கூர்ந்து நோக்கினன்.

அங்கே அவன் கண்ட காட்சி! விரிந்து பரந்த விண்ணெங்கும் நிறைந்து நின்ற கருநிற மேகக்கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு ஒளி வீசும் மின்னலைப்போன்று கருநிறத்து அரக்கியர் சுற்றிநிற்க, அவர்களுக்கிடையில் கண்டான் 'அல்லையாண்டு அமைந்த மேனி அழகனுடைய' தேவியாகிய சீதையை !

"விரி மழைக் குலம் கிழித்து ஒளிரும் மின் எனக்
கரு நிறத்து அரக்கியர் குழுவில் கண்டனன்;
குரு நிறத்து ஒரு தனிக் கொண்டலாம் எனக்
கரு நிறத்து அழகனுக்கு அமைந்த காந்தையை.

— சுந்தர காண்டம். காட்சிப் படலம் 63.

[விரிமழைக் குலம் கிழித்து—பரந்து கிடந்த கருமேகக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு. ஒளிரும் மின் என—ஒளி வீசுகின்ற மின்னலைப் போன்று. அரக்கியர் குழுவில் — அரக்கியர் கூட்டத்திற்கு மத்தியில். குரு நிறத்து ஒரு தனிக் கொண்டலாம் என—சிறந்த கருமை நிறத்ினல் ஒப்பற்ற நீருண்ட மேகம் போன்ற. கருநிறத்து அழகன்—கருமை நிறமுள்ள அழகான ராமன். அமைந்த காந்தை—ராமனுக்கு ஏற்ற மனைவியான சீதை.]

விண்ணெங்கும் பரவி நிற்கும் கருமேகக் கூட்டத்தைப் பாரெங்கும் பரவித்திரிந்த அரக்கியருக்கும், எவ்வளவு செறிந்து நிறைந்த மேகக்கூட்டத்தையும் கிழித்துக்கொண்டு ஒளி வீசும் மின்னலைச் சீதாபிராட்டிக்கும் உவமிக்கின்றான் கவிஞன். பாடலின் மூன்றாவது வரியில் ராமனுக்கும் அதே மேகத்தை உவமிக்க நேர்ந்த போது கம்பன் எச்சரிக்கையுடன் அதனை வேறுபடுத்திக் காட்டுகின்றான். அதனால்தான் மூன்றாவது வரியில் ராமனுக்கு உவமிக்கப்பட்ட மேகத்தை "குருநிறத்து ஒரு தனிக் கொண்டல்" என்று வேறுபடுத்திச் சிறப்பித்துப் பேசுகின்றான் கம்பன். நீருண்ட மேகம் போன்ற நிறம் கொண்டவன் ராமன். காப்பியத்தில் பல இடங்களில் ராமனை மேகத்திற்கு உவமித்துக் கொண்டு செல்வது கம்பனின் இயல்பு. அவற்றுள் ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிடலாம். ராமனும் சீதையும் இலக்குவனும் ஆரண்யத்துள் நுழைந்த காட்சியைக் கம்பன் பாடுகின்றான்.

" வெய்யோன் ஒளி தன்மேனியின்
விரி சோதியின் மறைய,
பொய்யோ எனும் இடையாளொடும்,
இளையானொடும் போனன்—
'மையோ, மரகதமோ,
மறிகடலோ, மழை முகிலோ
ஐயோ, இவன் வடிவு'! என்பது ஓர்
அழியா அழகு உடையான் ,

—அயோத்தியா காண்டம். கங்கைப்படலம்-1.

[வெய்யோன்—சூரியன்.]

இப்படிப்பட்ட ராமனுக்கு என்று அமைந்த மனைவியை—காந்தையை—அனுமன் கண்டான். 'ராமனுக்கு என்று அமைந்த அல்லது வாய்த்த' சீதை என்று சொல்வதால் அவளைக் கவர்ந்து வந்த ராவணன் செயல் முறையற்றது என்பது குறிப்பாக உணர்த்தப்படுவது காணலாம்.

அஞ்சனைச் செல்வன் முதன் முறையாகச் சீதையைப் பார்த்தபோது சீதையிருந்த சிறப்பினை அற்புதமான உவமையால் கம்பன் விவரித்துக் காட்டுகின்றான். அரக்கர் நாட்டில் இருந்த போதும் தன் தனித்தன்மைக்குச் சிறிதும் ஊறு

ஏற்படாவண்ணம் இருந்ததுடன், அந்நாட்டையே அழிக்கும் சக்தியாகத் தேவி திகழ்ந்தாள் என்பதை மேகக்கூட்டத்தினிடையே இருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் ஒளி வீசும் மின்னலை அவளுக்கு உவமிப்பதன் மூலம் கம்பன் தெளிவாக எடுத்துரைக்கின்றான். அனுமன் கண்டது சீதைதான் என்ற குறிப்பும் அரக்கனால் சிறைவைக்கப்பட்டாலும் அவள் அறத்தின் மூர்த்திக்கு ஏற்றவளாகவே தன்னைக் காத்துக்கொண்டிருக்கின்றாள் என்பதையும் குறிக்கவே

"கரு நிறத்து அழகனுக்கு அமைந்த காந்தை"

என்று சீதையைப் பாராட்டிப் பேசுகின்றான் கவிச்சக்கரவர்த்தி. அனுமனுக்குக் கிடைத்த சீதையின் முதல் காட்சியை மிக நுணுக்கமாகக் காட்டும் கம்பனின் கவித்திறன் போற்றுதற்கு உரியதாம்.

2. அறத்தின் வாழ்வு

'பார்க்கவே அருவருப்பூட்டும் தோற்றமுடைய அரக்கியர் நடுவில் இருக்கும் இம் மாதரசி சீதையாகத்தான் இருக்கவேண்டும். தன்னுடைய கண்களிலிருந்து பெருகும் கண்ணீர்த் தடாகத்தில் இருக்கும் அன்னம்போன்ற இவள் சீதையேதான்' என்று உணர்ந்து மகிழ்ந்தான் மாருதி. சற்று முன்னர், சீதையைத் தேடிச் சோர்ந்துபோன நிலையில் புண்ணியம் என்று ஒரு பொருள் தன்னிடமிருந்து போய்விட்டதோ என்று நினைத்து வருந்தியவன் அனுமன். சீதையைக் கண்டபின் அறத்தின் மீது நம்பிக்கை வந்துவிட்டது அஞ்சனைச் செல்வனுக்கு.

சீதையைக் காணவிட்டால் இலங்கையை அழித்துவிட்டுத் தானும் இறந்து விடுவதென்று முடிவு செய்திருந்தவன்தான் ராமதூதன். ஆனால் இப்போது அவ்வாறு செய்யவேண்டிய அவசியம் இல்லை. இவ்வளவு கஷ்டப்பட்டு இலங்கை வந்து தேடியது வீண்போகவில்லை. அவனை வழியனுப்பிய நண்பர்களின் பிரார்த்தனைபலன் தந்துவிட்டது. அறத்திற்கு எப்போதும் அழிவில்லை; அதனையே சார்ந்திருக்கும் பக்திக்கும் என்றும் குறைவு ஏற்படாது; கற்புடைமை என்றும் வெல்லும். இங்கு அறத்திற்கு ராமனும், பக்திக்கு அனுமனும், கற்புக்குச் சீதையும் இலக்கணமாக இருப்பது காணலாம். அறத்தின் வாழ்வாகிய சீதையைச் சூதால் கவர்ந்தது அரக்கத் தன்மை; ஆனால் அறம் ஒரு நாள் வென்றேதீரும். இதுதான் இயற்கையின் நியதி.

பேய்களும் கண்டு அஞ்சும் அரக்கியர் காவலில், 'இரக்கம் என்று ஒரு பொருள் இல்லாத அரக்கர்' தலைவனின் கொடுமைகட்கு ஆளாகிக் கட்டுண்டாள் சீதை; பொறுத்திருந்தாள். அப்படிப் பொறுத்திருந்தபோது ராமனின் நினைவு தவிர வேறு எதுவும் அவள் மனத்தில் புகுந்ததில்லை. காட்டிற்கு வழியனுப்ப வந்த அமைச்சன் சுமந்திரனிடம் தான் வளர்த்த கிளிகளை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு தன் தங்கையரிடம் சொல்லும்படி கோரிய சீதை, அயோத்தியின் கோட்டை வாயிலைக் கடந்தவுடன் ராமனிடம் 'வனம் வந்து விட்டதா?' என்று 'முதிராக் கிளவியின் முள் எயிறு இலங்க' கேட்ட சீதை, பொய்மான் என்று இலக்குவன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஒரு குழந்தையின் பிடிவாதத்துடன் அதன்மேல் ஆசை வைத்த சீதை, கலைந்துபோன கனவை மீண்டும் தூங்குவதால் தொடர்ந்து காணலாம் என்று எண்ணும் அளவிற்குக் குழப்பம் அடைந்திருந்த சீதை, பத்து மாதங்களாகப் பாதக அரக்கர்தம் சிறையில் பொறுமையோடும் தைரியத்தோடும் இருந்தாள் என்றால் அதற்குக் காரணம் ராமன் மேல் அவள் வைத்திருந்த பக்தியும் ராமனுடைய அருளும்தான் என்பதில் ஐயமுண்டோ?

3. உவகைத் தேன்

கடல் கடந்து, காவல் செய்யும் அரக்கரைக் கடந்து, இலங்கையின் மூலைமுடக்குகளிளெல்லாம் அலைந்து திரிந்து இறுதியில் சீதையைக் கண்ட அனுமன் தனக்குத்தானே சொல்லிக் கொள்கின்றான்: "அறம் சாகவில்லை; நானும் சாக வேண்டியதில்லை! ராகவன் தேவியைத் தான் நான் இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றேன்" என்று கூறி மகிழ்ச்சி மதுவுண்டு ஆடினான் பாடினான்.

"வீடினது அன்று அறம்; யானும் வீகலேன்;
தேடினேன்; கண்டனென்; தேவியே" என
ஆடினன், பாடினன், ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
ஓடினன் உலாவினன் உவகைத் தேன் உண்டான்.
— காட்சிப் படலம் 65.

[வீடினது அன்று அறம்: அறம் அழியவில்லை. யானும் வீகலேன்: நானும் சாகவேண்டிய தில்லை.]

நாம் தேடியது கிடைத்துவிட்டால் நமக்கு எல்லையில்லா ஆனந்தம் தான். அந்த ஆனந்தத்தில் நாம் என்ன செய்கின்றோம் என்பதே நம் நினைவில் இருப்பதில்லை. எனவே தான் இந்த நிலையை மது உண்டவர்களின் நிலைக்கு ஒப்பிடுகின்றான் கவிஞன்.

காண வேண்டியவளைக் 'கண்டு' பரவசம் கொண்ட அனுமன் நிலையை வர்ணித்த கம்பன், காண வேண்டியவனுடைய செய்தியைக் 'கேட்டு'ப் பரவசம்கொண்ட பரதனின் நிலையை எத்தனை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றான் பாருங்கள் :—

> " வேதியர்தமைத் தொழும்; வேந்தரைத் தொழும்;
> தாதியர்தமைத் தொழும்; தன்னைத்தான் தொழும்;
> ஏதும்ஒன்றும் உணர்குறாது இருக்கும்; நிற்குமால்;
> காதல் என்றதுவும் ஒர் கள்ளின் தோன்றிற்றே "
>
> — யுத்தகாண்டம்.மீட்சிப்படலம். 251.

ராமனுடைய வரவை ஆவலுடன் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து, அவன் வராமையினால் தன்னுடைய உயிரைப் போக்கிக்கொள்ள நினைத்துத் தீவலம் வந்த பரதனுக்கு 'ராமன் வந்து கொண்டிருக்கின்றான்' என்ற செய்தியை அனுமன் சொன்னபோது பரதன் அடைந்த மகிழ்ச்சியை இந்தப் பாடலில் கண்டு மகிழலாம். ராமனைப்பற்றியே நினைந்து ஏங்கிய இரண்டு உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்குமாறு ராமனைப்பற்றிய செய்தியைச் சொல்லும் பேறு பெற்றவன் மாருதி. பத்துமாதங்கள் ராமனைப் பிரிந்திருந்த சீதையின் சிந்தையிலும், பதினான்கு ஆண்டுகள் தமையனைப்பிரிந்திருந்த பரதன் உள்ளத்திலும் ராம நாமத்தால் உவகைத்தேன் ஊட்டியவன் அனுமன். சீதையைக் கண்ட அனுமன், ராம நாமம் கேட்ட பரதன் இவர்களுடைய மகிழ்ச்சியே இவ்வளவு பெரிதென்றால், நான்முகனும் தேடிக் காணமுடியாத நாராயணன் தன்னை நாடிவந்து காட்சி கொடுத்ததைக் கண்ட பிரகலாதனின் மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியுமோ? அதனையும் முயன்று பார்க்கின்றான் கம்பன் :—

> "நாடி நான் தருவென்" என்ற நல் அறிவாளன். நாளும்
> தேடி நான்முகனும் காணச் சேயவன் சிரித்தலோடும்
> ஆடினான்; அழுதான்; பாடி அரற்றினான்; சிரத்தில்
> [செங்கை
> சூடினான்; தொழுதான்; ஓடி, உலகு எலாம் துகைத்
> [தான், துள்ளி
>
> — யுத்த காண்டம், இரணியன் வதைப் படலம். 128.

சேயவன்-திருமால்.

பரமனைக் கண்ட பக்தனின் பரவசத்தைப் பாடுவதிலும் வெற்றி பெறுகின்றான் கம்பன் என்பதை இந்தப் பாடலிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

4. ராமனுக்குக் கிடைக்காத பேறு:

இனி, அசோகவனச் சீதையை அடையாளம் கண்டுகொண்ட அனுமனின் எண்ண ஓட்டங்களைத் தொடர்ந்து கவனிப்போம் :—

'செந்தாமரைக்கண்ணனான ராமனுடைய உயிராகிய சீதையை எவ்வளவு பாதுகாப்பான இடத்தில் சிறை வைத்திருக்கிறான் அரக்கன்! தன்னையே அழித்துக்கொள்ளும் முயற்சியில் ராவணன் செய்த கொடுமை இது! சீதை லட்சுமியின் அவதாரம் என்பதும் ராமன் திருமாலின் அவதாரம் என்பதும் தெளிவு. அழுக்குப்படிந்த ரத்தினம் போன்று புழுதி படிந்த மேனியுடன் இருக்கின்றாள். கதிரவன் முன் ஒளி குன்றியிருக்கும் சந்திரன்போன்று இவள் முகம் ஒளி குன்றியிருக்கின்றது. இவளுடைய கூந்தல் அழுக்குப் பிடித்துத் திரண்ட சடையாகியுள்ளது. இவளது இத்தவக்கோலமே இவள் கற்பின் திண்மையைப் பறை சாற்றுகின்றது.

'ராவணனின் சிறையில் இத்தனை மாதங்கள் தன் கற்பினைக் காத்து நிற்கும் சீதையின் மணாளனாக வாய்த்த ராமனைப் புகழ்வதா? அல்லது இவ்வளவு கொடுமையையும் எதிர்த்து மகளிரின் திலகமாக விளங்கும் சீதையின் மன உறுதியைப் புகழ்வதா? அல்லது இப்படிப் பெண்குலத்தின் விளக்காகிய சீதையைப் பெற்றுத் தந்த ஜனகரின் குலத்தைப் புகழ்வதா? தேவர்களும இனிமேல் துன்பத்தினின்றும் விடுபடுவர். பூலோகத்துத் தேவர் போன்ற அந்தணரும் இனித் துயர் நீங்குவர். என்னுடைய பணியும் தவறிவிடவில்லை. எம்பிரான் ராமனுக்கு எப்போதாவது எதிலாவது தோல்வியுண்டோ? சீதையின் கற்பிற்கு ஊறு

எதுவும் நேர்ந்துவிடவில்லையாதலால் ராமனின் கோபம் உலகங்களையெல்லாம் அழிக்காது; ராவணனை மட்டுமே அழிக்கும்.'

'சீதையின் பிறப்பினால், உயர்ந்த குடிப் பிறப்பும், பெண்மையும், நாணமும் சிறப்புப் பெற்றன. இவ்வாறு சீதை இயற்றும் கற்புத் தவத்தைக் காணக் காகுத்தனுக்குக் கொடுத்து வைக்க வில்லையே! சீதையின் தவத்தைக் காணச் செந்தாமரைக் கண்ணனை ராமன் தவம் செய்யவில்லையே! நீதி நெறி கெட்டுக் கொடுமை பூண்ட அரக்கியர் மத்தியில், எவ் விதத் துணையும் இன்றித் தன்னுடைய கற்பி னைக் காத்துக்கொண்டிருக்கின்றாள் சீதை என் றால் அது செயற்கரிய செயலேயாகும். எனவே நல் அறத்தின் மாண்புகளெல்லாம் மகளிர்க்கே போய்ச் சேரட்டும்!'

'இவ்வாறு சீதையைக் காத்தது எது? தருமமோ? அல்லது ஜனகன் செய்த நல்வினைப் பயனோ? அல்லது அவளுடைய கற்பின் திறமோ? எது என்று என்னைப் போன்ற வர்க்குச் சொல்ல முடியுமோ?'

தருமமே காத்ததோ! ஜனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ! கற்பின் காவலோ!
அருமையே! அருமையே! யார் இது ஆற்றுவார்?
ஒருமையே எம்மனோர்க்கு உரைக்கற்பாலதோ?

—காட்சிப் படலம் 75.

ராவணனுடைய செல்வச் சிறப்பினையும் அவனுடைய கொடுமையையும் தேவர்களும் அவனுக்கு அடிமை செய்வதையும் பார்த்த பிறகு இந்தச் சூழ்நிலையில் கற்பு தவறாமல் வேறு யாராலும் இருக்கமுடியுமா? செல்வத் தைக் காட்டி மனத்தில் ஆசை ஊட்டுவதாலும், கொடுமை செய்து பயமுறுத்துவதாலும், மரியா தைக்கு உரியவரும் தமக்குப் பணிந்துள்ளார் கள் என்று காட்டுவதாலும் பெண்களின் மனத் தைத் தன்பால் கவர்வது ராவணன் வழக்கம்! ஆனால் இம்மூன்று முறைகளிலும் சீதையை அசைக்க முடியவில்லை! தீவினை தர்மத்தை அழிக்காது என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்றும் வேண்டுமோ?

'உயர்குடியில் பிறந்து உள்ளத்தில் உறுதி கொண்டு தம் கற்பினைக் காக்கத் தவம் செய்யும் மகளிருடைய பெருமை சொல்லிற்கு அடங்கு வதோ? அத்தகைய மகளிரின் கற்புத் தவத் திற்கு முன், தம்மைச் சுற்றிலும் தீ வளர்த்து நடுவில் நின்றும், நீரினுள் மூழ்கியும், உணவும் நீரும் நீக்கியும், இன்ன பல முறைகளிலும் தவம் செய்யும் தவசியர் தவம் எம்மாத்திரம்?

இவ்வாறெல்லாம் மனத்தில் எண்ணங்களை ஓடவிட்டுக்கொண்டு மாருதி மரக்கிளை ஒன்றில் அமர்ந்து அரக்கியரால் சூழப்பட்ட சீதையைப் பார்த்துக்கொண்டிருந்தான். சீதையின் கற்புத் தவத்தையும் தவசியர் ஆற்றும் வேறு வேறு வகைத் தவங்களையும் மாருதி ஒப்பிட்டுப் பார்க்கின்றான். முனிவர்கள் தாங்களாகவே சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு தவம் இயற்றுகின்றனர். அந்தச் சுதந்திரம் சீதைக்கு இங்கு இல்லை. அவளுக்கு வாய்த்த சூழ்நிலையைத் தன் தவத்தினால் வெல்ல முயற் சிக்கின்றாள். முனிவர்கள் ஆற்றும் தவம் பற்றிய பட்டியல் ஒன்றைத் தருகின்றார் தாயு மான சுவாமிகள்:—

"காய் இலை உதிர்ந்த கனி சருகு புனல் மண்டிய
கடும்பசி தனக்கு அடைத்தும்;
கார்வரையின் முழையில் கருங்கல்போல்-
[அசையாது
கண்மூடி நெடிது இருந்தும்;
தீயிடை வைகியும்; தோயம் அதில் மூழ்கியும்;
தேகங்கள் என்பு எலும்பாய்த்
தெரிய நின்றும்; சென்னி மயிர்கள்கூடாக்குருவி
தெற்ற வெயிலூடு இருந்தும்;
வாயுவை அடக்கியும்; மனதினை அடக்கியும்;
மௌனத்திலே இருந்தும்;
மதிமண்டலத்திலே கனல் செல்ல அமுது உண்டு
வனமூடிருந்தும்; அறிஞர்
ஆயும் மறை முடிவு ஆன அருள் நாடினர்; அடிமை
அகிலத்தை நாடல் முறையோ?
அண்டபகிரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி
ஆனந்தமான பரமே!"

—தாயுமானவர் பாடல், ஆனந்தமானபரம்-4

இப்படித் தவசியர் இயற்றும் தவத்திற் கெல்லாம் இல்லாத சிறப்பும் பெருமையும் பெண்டிர் இயற்றும் கற்புத் தவத்திற்கு உண்டு என்பது அனுமன் கொள்கை. வனத்தில் முனிவர்கள் இயற்றும் தவத்தை யெல்லாம் கண்டு, அறிந்து, உணர்ந்து பயின்றவன் அனு மன். மிதிலைச் செல்வியின் அசோகவனத் தவத்தையும் நேரில் கண்டு அறிந்தவன் அவன்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

4. பஞ்சாட்சரமும், மிதப்புத் தத்துவமும்

நீர் நிலையியல் பற்றிய பல உண்மைகளை மனித சமுதாயத்திற்கு வழங்கியவர் ஆர்க்கிமிடீஸ். இவர்கிரேக்கநாட்டின் மிகப்பெரிய கணித மேதையாவார். அக்காலத்தில் சைரக்யூஸ் என்னும் நாட்டை ஆட்சி புரிந்துவந்த மன்னன் ஹீரோ தனக்கு ஒரு தங்கக் கிரீடத்தைச் செய்யுமாறு பொற்கொல்லன் ஒருவனைப் பணித்தான். பொற்கொல்லனும் ஒரு கிரீடம் செய்துகொண்டு வந்து மன்னனிடம் கொடுத்தான். கிரீடத்தைப் பெற்றுக்கொண்ட மன்னனுக்கு ஓர் ஐயம்! அது தூய தங்கத்தால் செய்யப்பட்டது தானா? அல்லது பொற்கொல்லன் பொன்னைத் திருடி வேறு மட்டமான உலோகத்தைச் சேர்த்துவிட்டானா? தன் ஐயத்தைத் தீர்த்து வைக்க ஆர்க்கிமிடீஸை மன்னன் அழைத்தான். தன் கிரீடம் தூய தங்கத்தால் ஆனதுதானா எனக் கண்டுபிடிக்கப் பணித்தான்.

ஆர்க்கிமிடீஸ், மன்னனின் சந்தேகத்தைத் தீர்ப்பதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே இருந்தார். ஒருநாள் நீர்த்தொட்டியில் உடல் நீரில் மூழ்கும்போது வெளியேறும் நீரின் கன அளவை உற்றுக் கவனித்தார். குளியல் தொட்டியில் ஆடையின்றி இருந்ததையும் மறந்து 'கண்டுபிடித்து விட்டேன்! கண்டுபிடித்து விட்டேன்!' என்று கூவிக்கொண்டே தம் ஆய்வகத்தை அடைந்து சில விதிகளைக் கண்டுபிடித்தார். ஒரு பொருள் திரவத்தினுள் மூழ்கியிருக்கும் போது தன் எடையை இழக்கிறது. அந்த எடை இழப்பு அப்பொருளால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட திரவத்தின் எடைக்குச் சமம். காற்றில் பொருளின் எடையைக் கண்டு, நீரில் பொருள் மூழ்கி இருக்கும்போது அது இழந்த எடையை அறிந்து, பொருளின் அடர்த்தியைக் கணக்கிடலாம் என ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்தார். சில பொருட்கள் திரவத்தில் மூழ்குவதும் சில மிதப்பதும் இவ் அடர்த்தி மாறுபாட்டின் காரணத்தினாலேயே என்று அவர் கூறினார். எடுத்துக்காட்டாக ஒரு இரும்புத்துண்டை நீரில் போட்டால் அது நீரில் மூழ்கிவிடுகிறது. நீரில் மூழ்கும் இரும்புத்துண்டு பாதரசத்தில் மிதக்கும். காரணம் பாதரசத்தின் அடர்த்தி இரும்பின் அடர்த்தியைவிட அதிகம். எனவே ஒருபொருளின் அடர்த்தி திரவத்தின் அடர்த்தியைவிடக் குறைவாக இருந்தால் அது அந்தத் திரவத்தில் மிதக்கும்.

நீரைக் காட்டிலும் கனமான பொருளான கப்பல் நீரில் மிதக்கின்றதே! இதற்கு விடை காண்போம். தக்கையை நீரில் போடும்போது தக்கையால் விலக்கப்பட்ட நீரின் எடை தக்கையின் எடையைவிட அதிகம். எனவே தக்கை மிதக்கிறது. இக்கருத்து தக்கைக்கன்றி எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும். கப்பல் போன்ற பொருட்களை எடுத்துக் கொண்டால் அவை நீரினும் திண்ணிய பொருட்களாயினும் அவற்றால் விலக்கப்படும் நீரின் அளவு அதிகமாயிருப்பதால் அவை மிதக்கின்றன. ஐந்தெழுத்தைத் துதித்த அப்பர் பெருமான் கடலில் மிதந்தது இத்தத்துவத்தின் அடிப்படையில்தானே?

சாதாரண நிலையில் பாலில் வெண்ணெய் அடங்கியுள்ளது. பால் நீருடன் கலக்கிறது. ஆனால் அதை வெண்ணெயாகக் கடைந்தெடுத்துவிட்டால் நீரில் வெண்ணெய் மிதக்கிறது. காரணம் வெண்ணெயின் அடர்த்தி நீரின் அடர்த்தியைக் காட்டிலும் குறைவு. நீரை உலகப் பற்றுக்கு ஒப்பிடலாம். பாலை மனதுக்கு ஒப்பிடலாம். பாலிலிருந்து கடைந்தெடுக்கப்படும் வெண்ணெயைப் பக்தி, ஞானத்திற்கு ஒப்பிடலாம். கடைவதை ஆத்ம சாதனங்களுக்கு ஒப்பிடலாம். ஆத்ம சாதனங்கள் மூலம் மனதினின்று பக்தி, ஞானத்தைக் கடைந்தெடுத்து விட்டால் உலகப்பற்று எனும் நீரில் மிதக்கும். பக்தி ஞானத்தைப் பெறுவது வாழ்வின் குறிக்கோளாகும்.

"பால் நீருடன் கலக்கிறது. ஆனால் அதை வெண்ணெயாகக் கடைந்தெடுத்து விட்டால் நீரில் மிதக்கும். நீருடன் கலக்காது. மனது எனும் பாலினின்று பக்தி, ஞானம் என்னும் வெண்ணெயை ஆத்ம சாதனங்கள் மூலம் கடைந்தெடு. அதன் பிறகு உலகப்பற்று எனும் நீரில் அது கலக்காது."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

பரமாத்மாவிடமிருந்து இப் பிரபஞ்சம் தோன்றி வந்துள்ளது. பரமாத்மாவினுடைய பிரவேசத்தால், நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதால் இப் பிரபஞ்சம் உயிரோவியமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் தூணிலும் இருக்கிறுன், துரும்பிலும் இருக்கிறுன். இதை அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு உயிர்வகைகளில் மானுடர்க்கே உண்டு. இப்போதைக்கு நம்மைப்பற்றி நாம் ஸ்தூலசரீர மயமாக, மனே மயமாக, அறிவு மயமாக, இந்திரிய மயமாக மனபரிபாகத்திற்கேற்பக் கருதிக்கொண்டிருக்கிறேம். இந்த மயக்கத்தை, பிராந்தியைப் போக்கவே இங்ஙனம் ஸ்தூல சரீரம், ஞான, கர்மஇந்திரியங்கள், அந்தக்கரணம் இவைகளின் செயல்களைப்பற்றி ஆராய்ந்தோம். ஆத்மா நீக்கமற நிறைந்திருந்தாலன்றி அவைகள் எல்லாம் வெறும் ஜடப்பொருள்களே, அவை தாமே உணர மாட்டா; தீர்மானிக்கமாட்டா; அனுபவிக்க மாட்டா. இந்தப் பத்தொன்பது அவயவங்களை, பொம்மைகளை வைத்து விளையாடுபவன் ஆத்மா என்று நிரூபிக்கப்பட்டது. (ஒரு சுருதியில் இந்தச் சரீரத்துக்குப் பதினறு அவயவங்கள் என்று வர்ணிக்கப்பட்டிருக்கும். இந்த இடத்தில் அந்தக்கரணத்தை ஒன்ருகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. வேறு சுருதியில் பதினேழு அவயவங்கள் கொண்டது இந்தச் சரீரம் என்று வருகிறது. இங்கு அந்தக்கரணத்தை மனம், புத்தி என்று இரண்டாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மற்ருெரு சுருதியில் இச் சரீரத்திற்குப் பத்தொன்பது அவயவங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இங்கு அந்தக்கரணத்தை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று நான்காகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ளவேண்டும்.)

இனி, காரண சரீரம் எது எனப் பார்ப்போம். அக்ஞானமே காரண சரீரம் எனப்படுகிறது. ஸ்தூலம், சூக்ஷ்மம் ஆகிய இவ்விரண்டு சரீரங்களுக்கும் இது காரணமாகிறது. அதனுல் இதற்குக் காரண சரீரம் என்கிற பெயர் ஏற்பட்டது. இது ஜீவனும் ஈசுவரனும் முதலில் அடையும் சரீரமானதால் பின்னிட்டு வரும் இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக அமைகிறது. பரதன் கேகய நாட்டினின்று வசிஷ்டரின் ஆணைப்படி கோசல நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறுன். "ஏன் அப்பா சொல்லி அனுப்பவில்லை? அல்லது ஏன் அண்ணன் சொல்லி அனுப்பவில்லை. நேற்று தந்தையார் என்னைத் தொட்டியில் இடப்பட்டது போன்று கனவு கண்டேன். அயோத்தி முழுவதும் சோகத்தில் மூழ்கியிருக்கிறது. மக்கள் என்னைப் பார்க்க விரும்பாதவர் போன்று தென்படுகின்றனர். ...... ஆ! தந்தையார் காலமாகி விட்டார்...... ஆருயிர் அண்ணன் கானகம் போய்விட்டார்......ஆ! இதற்கெல்லாம் காரணம் என் தாயார் கோரிய வரம்.......தாயார் இங்ஙனம் கோரியதற்குக் காரணம் கொடுமனக் கூனி. ஆ! கூனியே இக்கேடுகள் எல்லாவற்றுக்கும் காரணம்." ராமாயணத்தில் இங்ஙனம் பரதன் புலம்புவதைப் பார்க்கிறேம். இந்தக் கூனிக்கு நிகர் காரண சரீரம். நடந்துவிட்ட ஒரு சம்பவத்துக்குக், காரணத்தை ஆராய்கிறேம். இதைக் காரண காரியம் என்று வேதாந்தம் சொல்லுகிறது. இவ்வுலகில் யாவும் காரண காரிய அடிப்படையில் நிகழ்கின்றன. ஆத்மா ஏன் அஞ்ஞானத்தின் வசப்பட வேண்டும்? ஆத்மா பிறப்பதில்லை, சாவதில்லை, இவ்வளவு அனுபவங்கள் பெறுவதில்லை, இந்த ஸ்தூல பிரபஞ்சமே உண்மையில் இல்லை என்பது ஒரு வாதம், ஒரு கொள்கை, ஒரு ஞான அனுபவம். இதை நிரூபிக்கக் கயிறு—பாம்பு, அலை—கடல், கட ஆகாசம்—மஹா ஆகாசம், கனவு ஆகிய உதாரணங்கள், நிருபணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனுலும் நம் நிலைமையில் நாம் ஜாக்கிரதா அவஸ்தையில் காண்கிற யாவும் அனுபவிக்கிற சம்பவங்கள் யாவும் ஒரு நியதியில், கோட்பாட்டில், ஒழுங்குப் பாட்டில் அமைந்துள்ளன; ஒழுங்காக, முறையாக, கிரமமாக நிகழ்கின்றன. அதன்படிதான் இந்த விளக்கங்கள் யாவும் இடம் பெறுகின்றன. கோடையில் காவிரி மணலில் ஒரு பௌர்ணமி

இரவில்வழிபாடும், விருந்தும் நடந்தன. நன்கு வயிறுமுட்டப் பாயசம்,லட்டு, முக்கனி எல்லாம் சாப்பிட்டாயிற்று. வெகு திருப்தி, வெகு சந்தோஷம் உண்டாயிற்று. ஆயினும் ஒரு சிலர் சட்டையைக் கழற்றி விட்டுச் சடுகுடு விளையாடுகிறார்கள், ஒரு சிலர் சுற்றி உட்கார்ந்து வேடிக்கை விநோதங்களை மகிழ்ச்சியுடன் சம்பாஷணை செய்து கொண்டுள்ளார்கள். மற்றும் சிலர் நாடகம் நடிக்கின்றனர். அதை மற்றவர்கள் பார்த்து ரசிக்கின்றனர். இவையெல்லாம் ஏன்? இந்த ஆத்மா ஆனந்த, இன்ப சொரூபமானது. அது எப்போதும் தன் இன்ப, ஆனந்த நிலையில் இருக்கவே முயல்கிறது. ஓர் அரசன் சிம்மாசனத்தில் வெகு அலங்காரமாகத் தன் கம்பீரமான கோலத்தில் வீற்றிருக்கிறான். சபை கலைந்து அரசன் தன் யதேச்சையான காரியங்களைக் கவனிக்கிறான், உலாவுகிறான், நீராடுகிறான், போர்க்கருவிகளில் பயிற்சி செய்கிறான், நீதி சாஸ்திரங்கள், ராஜ தர்மங்கள் வாசிக்கிறான், தன் குழந்தைகளுடன் விளையாடுகிறான். கொலுவில் சிம்மாசனத்தில் வீற்றிருந்த அரசனே இத்தனை காரியங்களையும் செய்கிறான். அதே போன்று அத்வைத பரமான நிர்க்குணப் பிரம்மம்தான் வியவஹாரிக சத்தில் ஜீவர்களாக, பிரபஞ்சமாக வடிவெடுக்கிறது. அது எந்தக்கோலத்தில் இருந்தாலும் அது பிரம்மமே. இப்படி வேறு கோலத்தில் இருப்பதை அக்ஞானம் என்கிறோம். அந்த அக்ஞானம் சூக்ஷ்ம சரீரமாக, ஸ்தூல சரீரமாக வடிவெடுக்கிறது. ஏழுகடலின் மணலினும் அதிகமான பிறவி எடுக்கிறது. மாணிக்கம் குப்பையில் கிடந்தாலும் மாணிக்கமே. ஆத்மா எந்தக் கீழான ஜீவ சரீரத்தில் வாழ்ந்தாலும் அது ஆத்மாவே. அதன் மகிமை ஒரு நாளும் குறையாது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இங்ஙனம் சரீரத்திரயம் வந்து அமைகிறது. அதில் அக்ஞானம் காரண சரீரம் எனப்படுகிறது. இதற்குப் பிரமாணம் என்ன என்றால் சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றும் பிரமாணங்களாகும். அக்ஞானமே இந்த ஜீவவியக்திக்குக் காரணம் என்று சுருதி கூறுகிறது. யுக்தி என்பது விசாரித்து அறிதல், காரிய காரண நியதியைக் கொண்டு விசாரித்துக்கொண்டுபோனால் நம் துக்கங்களுக்குக் காரணம் பிறவி. பிறவிக்குக் காரணம் கர்மம்-கர்மத்துக்குக் காரணம் ராகத் துவேஷம்-ராகத் துவேஷத்துக்குக் காரணம் அபிமானம்-அபிமானத்துக்குக் காரணம் அவிவேகம்-அவிவேகத்துக்குக் காரணம்அக்ஞானம் என்றுகொண்டு வந்து சேர்க்கிறது. இந்த அக்ஞானத்துக்குக் காரணம் என்ன என்று நம்மால் யூகிக்க முடிவதில்லை. விருந்து சாப்பிட்டவன் விளையாடி மேலும் மகிழ்வது போன்று இயல்பிலேயே, சொருபத்திலேயே ஆனந்தம், ஞானம் லக்ஷணமாக உடைய ஆத்மா அலகிலா விளையாட்டுடையவனாகி விளையாடி மகிழ்கிறது. யுக்தியின் முடிவும் அக்ஞானம். அக்ஞானத்தைப்பற்றிய அனுபவம் இல்லாதவர்கள் யாரேனும் இவ்வுலகில் உண்டா? எனக்குத் தெரியாது போயிற்றே. நான் முன்பே இதை யூகிக்காது, தெரிந்துகொள்ளாது போனேன், என் அறிவுக்கு எட்டவில்லை என்றெல்லாம் சொல்கிறோம். கல்லாதது உலகளவு என்கிற ஞானம், அதாவது மனிதனுக்கு இன்னும் தெரியாதது அகண்டமாய் இருக்கிறது என்கிற அறிவு,அதாவது நமது அக்ஞானத்தைப்பற்றிய அனுபவம் எல்லாருக்கும் இருக்கிறது. अज्ञानेन आवृतम् ज्ञानं ஞானம் அக்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது. தவத்திலும், புலனடக்கத்திலும் எவ்வளவோ மேல்நிலை அடைந்தவர்களும் ஒரு க்ஷணத்தில் தடுமாறுவதையும் தவறிவிடுதலையும் பார்க்கிறோம். இவ்வுலகம் பூராவும் அறியாமையில் தோன்றியுள்ளது, தோய்ந்துள்ளது, அறியாமையினால் ஆட்டிப் படைக்கப்படுகிறது. அக்ஞானம் நமது வாழ்க்கை அனுபவம். ஆகையால் அக்ஞானம் காரண சரீரம் எனப்படுகிறது.

ஆத்மா என்பது எது என்று முன்பு விசாரித்தபோது ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லி அந்த மூன்று சரீரங்களின் லக்ஷணங்கள் சொல்லப்பட்டன. அதேபோன்று ஆத்மாவை லக்ஷணங்களினால் விளக்கலாம். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது, பரிபூரணமாக இருப்பது பிரம்மம். அதே பிரம்மம் பிரத்யகாத்ம சொரூபமாக (தனிப்பட்ட மனிதனிடத்துள்ள ஆத்மா—ஜீவாத்மா, கட ஆகாசம் போல) உள்ளது என்று உபநிஷதங்களும் சொல்லுகின்றன.

ஆகையால் ஸத் சித் ஆனந்தமே ஜீவாத்மாவின் சொரூப லக்ஷணம் என்று அறியவும். பரமாத்மா—ஜீவாத்மா என்று விவகாரத்திற்காக, விளக்கத்திற்காகப் பேசுகிறோமே தவிர இரண்டும் ஒன்றே; வேறு வேறு அன்று. அலைக்குக் கடலைவிட்டு இருப்பு ஏது? அது எப்படி இருக்கமுடியும்? அலையும் கடலும் ஒன்றே. அலை என்ற பெயரால் நாம் அதைக் குறிப்பிட்டாலும் அது கடலே. சத் என்றால் என்ன? சித் என்றால் என்ன? ஆனந்தம் என்றால் என்ன? மூன்று காலங்களிலும் பாதிக்கப்படாமை ஸத் எனப்படுகிறது. எது காலத்தால் அடிபடுவதில்லையோ, பாதிக்கப்படுவதில்லையோ, அழிவதில்லையோ, ஒரு மாற்றமும் அடைவதில்லையோ அது என்றைக்கும் உள்ளது, அது பிறவாதது, இறவாதது, ஆதி அந்தம் அற்றது. காலம் என்பதே கற்பனையானது. காலம் என்று ஒன்று இல்லை. நித்திய வஸ்துவினிடம் கால தத்துவம் இல்லை; செல்லாது. அது கணக்கில் அடங்காதது, கணக்கிட முடியாதது. ஆகையால் காலம் அடிபட்டு விடுகிறது. இந்த ஒன்றை நாம் புரிந்துகொண்டால், ஒப்புக்கொண்டால் மற்ற அத்வைத லக்ஷணங்கள் யாவற்றையும் நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். கால தேச வர்த்தமானத்திற்கு அப்பாற்பட்டது பரமாத்மா. சுயமாகப் பிரகாசம் உடையது, பிரகாசமயமானது சித். स्वप्रकाशश्चित् சுயம்பிரகாசம் என்றால் என்ன? சூரியன் சுயம் பிரகாசமுடையது, சந்திரன் சூரியப் பிரகாசத்தால் விளங்குகிறது. அதற்குச் சுயம் பிரகாசம் இல்லை என்று படிக்கிறோம். இதைக் காட்டிலும் ஆத்மாவின் சுயப்பிரகாசத்வம் வேறானது. அது வெறும் ஒளியைக் குறிக்கவில்லை. அது போதம், உணர்வு, பிரக்ஞை, சிவப்பிரகாசம், ஆத்மப்பிரகாசம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. சூரிய ஒளியால் இந்தப் பிரபஞ்சம் அறியப்படுவதன்று, தெரிந்து கொள்ளப்படுவதன்று. ஆத்மப்பிரகாசத்தினால்தான் சூரியன் உட்பட பிரபஞ்சம் யாவும் தெரிந்து கொள்ளப்படுகிறது. ஆத்மப் பிரகாசத்தினின்று யாவும் ஒளியை, இருப்பை, அறிவைப் பெறுகின்றன. ஆனந்தம் என்பது ஸ்வானுபூதி स्वानुभूतिरेवानन्दः தனது நிஜசொருபத்தைத் திடமாக, மாற்றமின்றி உணர்தலே சொருபானுவம், ஸ்வானுபூதி எனப்படுகிறது. அது ஆனந்த நிலை. இருமைகள் அற்று பிராந்தி நீங்கி, உண்மைக்கு நேருக்கு நேர் வந்து விட்டநிலை இது. பிரபஞ்ச வாழ்வு என்னும் கனவினின்று விழித்துக்கொண்ட நிலை அது. ஆகையால் துக்கங்கள் அற்று, நீங்கி, பேரானந்தப் பிராப்தி, பேரானந்தம் அடைந்த நிலை எனப்படுகிறது. ஆகவே சத்-சித்-ஆனந்தம் பரமாத்மாவின் நிஜ சொரூபம் ஆகும். அதனிடத்திருந்து வந்துள்ள, வியவகாரிகசத்தில், ஜீவாத்மாவின் நிஜசொரூபமும் சத் சித் ஆனந்தமே ஆகும். மனதை விகசிக்கச் செய்கிற, தெம்பூட்டுகிற ஒரு மகத்தான செய்தி இது. ஆத்மா அல்லாதது பொய். ஜடம் துக்க மயமானது.

கடவுள் அழியாதவர் என்கிற வாக்குமூலம் விமர்சனம் இன்றி, சந்தேகம் இன்றி யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முதல் ஆத்ம லக்ஷணம். இதிலிருந்து ஆராய்ச்சியைத் துவக்குகிறார்கள். எதைவிட அழியாதவர்? உலகில் ஜீவராசிகள், ஸ்தாவரங்கள், மலைகள், நதிகள், பஞ்ச பூதங்கள், சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. இதில் எதனுடைய அழிவுக்கும் அப்பாற்பட்டவர் இறைவன். இவற்றின் அழிவுக்குச் சாக்ஷியாய் இருப்பவர் இறைவன். இவைகளின் காலங்களைக் கணிக்க வல்லவர் யார்? ஆதிஅந்தமற்ற பொருள் என்கிற லக்ஷணத்தில் அவரைப் பழுதுபடுத்த, நலிவுறச் செய்ய இரண்டாவது பொருள் இல்லை, காலம், தேசம், வர்த்தமானம் என்கிற மும்மைக்கும் அவர் அப்பாற்பட்டவர்; அவைகள் உண்மையில் இல்லை என்கிற உண்மை அடங்கியுள்ளது. இந்த உண்மைநிலை, யதார்த்தநிலைதான் தத்துவம் என்று சொல்லப்படுகிறது. அவரின் ஏகத்வ நிலையில் சர்வக்ஞர், சர்வ வியாபி அகண்டமானவர் என்கிற உண்மைகள் அடங்கியுள்ளன. ஆகையால் பரமாத்மா பரிபூரணர். பூரணத்திலிருந்து பூரணம் (ஜீவனும் ஜகத்தும்) வந்துள்ளது. பூரணத்திலிருந்து பூரணம் வந்த பிறகு பூரணமே எஞ்சியுள்ளது என்கிற வேத வாக்கியம் எவ்வளவு உண்மை. இதை நாம் உணர்ந்து ஆத்ம போதத்தில், உணர்வில் நிலைத்த உறுதி பெறுவதற்குச் சாதனை செய்யவேண்டும்.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

22. சூரன் உடல் கிழித்த சுடர் வேலோன் :

— "சீர் அலைவாய்த்

95. தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க்
[கருணை
வெள்ளம் எனத் தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
96. கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்கு இமையோர் வாழச்—சயேந்
[திரனும்
97. சூரனைச் சோதித்து வருக என்று தடந்தோள்
[விசய
வீரனைத் தூதாக விடுத்தோனே—கார் அவுணன்
98. வானவரை விட்டு வணங்காமையால் கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்—பானு
99. பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனை வென்று வாகைமுடித்தோய்—சகம்
[உடுத்த
100. வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்த நெடும்
சூர்உடலம் கீண்ட சுடர் வேலோய்."

அழகிய அலைவீசும் கடற்கரையை உடைய திருச்செந்திலம்பதிக்கு எழுந்தருளினன் முருகப் பெருமான். கருணை வெள்ளம் போல அரியாசனத்திலே வீற்றிருந்தான்.

சூரபத்மனுக்கும் அவனுடைய கொடுமைகளுக்கும் பயந்துகொண்டிருந்த, வெள்ளை யானையை வாகனமாக உடைய தேவேந்திரனுக்கு அஞ்சவேண்டாம் என்று அபயம் அளித்தான். கடல் சூழ்ந்து விளங்கும் சூரபத்மனுடைய இராஜதானியாகிய மகேந்திரத்திற்குச் சென்று, சூரபத்மன் தேவர்களையெல்லாம் சிறையில் இருந்து விடுதலை செய்கின்றனா இல்லையா என்று வினவி வருமாறு வெற்றி வீரனாகிய வீரவாகுவைத் தூதாக அனுப்பியவன் செந்தில் நாதனாகிய முருகப் பெருமான்.

அரக்கர் கோமானாகிய சூரபத்மன் வீரவாகுவின் தூது உரையைப் பொருட்படுத்தவில்லை. எனவே, தேவர்களை விடுதலை செய்ய மறுத்து விட்டான்; முருகவேளை வந்து பணியவுமில்லை; அழிவுக்காலம் வந்துவிட்டதால், கந்தனின் கருணை மொழிகளை ஏற்றுப் பணியும் அறிவும் உணர்வும் அவனுக்கு இல்லாது போய் விட்டன.

எனவே கந்தவேள் மகேந்திரபுரிக்குப் படை எடுத்துச் சென்றான். அசுரர்களின் நால் வகைப் படைகளையும் சம்ஹாரம் செய்தான். பானுகோபன் முதலான சூரபத்மன் புதல்வர்கள் சிங்கமுகன் ஆகியோரை வென்று வெற்றி மாலை புனைந்தவன் வெற்றி வேலன்.

உலகத்தைச் சூழ்ந்து விளங்கும் கடலில், உலகத்தில் உள்ள மாமரம் போன்று இல்லாமல் புதுமையான மாமரமாகத் திகழ்ந்த, முருகனுக்கு அஞ்சி மாமரமாக மாய வடிவெடுத்து நின்ற சூரபத்மன் உடலைக் கிழித்துக் கொன்று சுடர் வேலாயுதத்தை உடையவன் வடிவேலன்.

23. தேவர்களை விடுவித்த தேவாதி தேவன் :

— "பேர் அவுணன்

101. அங்கம் இருகூறாய் அடல்மயிலும்
[சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் —
[அங்கு அவற்றுள்
102. சீறும் அரவைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே—மாறிவரும்
103. சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துஉயர்த்த மேலோனே—மூவர்
104. குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்டளித்த தேவே."

முருகனது வேலாயுதம்பட்டுச் சூரபதுமனின் உடம்பு இரண்டு கூறுகளாகப் பிளவுபட்டது. ஒரு பகுதி வலிமை மிக்க மயிலாக மாறியது. மற்றொரு பகுதி சேவலாக மாறியது. இவை இரண்டும் ஆர்ப்பரித்து நின்றன.

முருகன் அழகிய மயிலைத் தனது வாகனமாக ஆக்கிக்கொண்டான். சேவலைத் தனது வெற்றிக்கொடியாக, வேறு எக்கொடிக்கும் நிகர் இல்லாத வகையில் ஆக்கிக்கொண்டான்.

சிவன், விஷ்ணு, பிரம்மன் ஆகிய மும்மூர்த்திகளின் மனக் குறைகளை யெல்லாம் களைந்தான். சூரபத்மன் சிறைகளில் அடைத்துக் கொடுமைப் படுத்தி வந்த தேவர்களையெல்லாம் விடுதலை செய்து கருணை செய்தவன் முருகவேள்.

கொடிய எதிரியாகிய சூரபத்மனைத் தன் அருகில் வைத்துக்கொள்ள அவனுடைய அங்கத்தின் ஒரு பகுதியான மயிலைத் தனது வாகன

மாகவும், மற்றொரு பகுதியான சேவலைத் தனது கொடியாகவும் கொண்ட கருணை உள்ளம் உடையவன் முருகப்பெருமான்.

எதிரிகளை அடியோடு ஒழித்துவிடாமல், தன் அருகில் வைத்துக்கொண்டு அருள்பாலித்த கருணை வள்ளல் செந்திலாண்டவன்.

24. வள்ளியை மணம்புரிந்த வள்ளல்:

— "மறைமுடிவாம்
105. சைவக் கொழுந்தே தவக்கடலே வான்உதவும்
தெய்வக் களிற்றை மணம் செய்தோனே—
பொய்விரவு
106. காமம் முனிந்த கலைமுனிவன் கண் அருளால்
வாமமட மானின் வயிற்று உதித்துப்—பூமருவு
107. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து—மேன்மை
[பெறத்
108. தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே..."

— வேதங்களின் முடிந்த முடிவாக விளங்கிடும் சைவக்கொழுந்தாகத் திகழ்பவனே! தவத்தின் கடலே! தேவேந்திரன் பெற்றெடுத்த தெய்வ யானையை மணம்புரிந்தவனே!

பொய்யொடு கலந்த காமம், குரோதம் முதலான குற்றங்களை அறவே வெறுத்து ஒதுக்கிய, கலைகளைக் கற்றுணர்ந்த சிவமுனிவனின் திருவருள் பார்வையால், அழகிய பெண்மானின் வயிற்றிலே தோன்றியவளும், குறவர்களின் குலத்தவர்களால் வளர்க்கப் பட்டவளுமான அழகிய வள்ளியை மணம்புரிந்தவன் முருகப் பெருமான்.

25. செந்திலம்பதியைக் காக்கும் செவ்வேள்:

—"உள்ளம் உவந்து
109. ஆறு திருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பி
[னுடன்
கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே—நாறு
[மலர்க்
110. கந்திப் பொதும்பர் எழுகார் அலைக்கும் சீரலை
[வாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே..."

—திருஉள்ளத்தில் பேருவகை கொண்டு, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன் குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு ஸ்தலங்களையும் சென்று கண்டு தரிசனம் செய்து, சரவணபவ என்னும் ஆறு எழுத்து மந்திரத்தைப் பக்தி உணர்வோடு உச்சாடனம் செய்யும் உண்மை அடியார்களின் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருப்பவன் திருமுருகன். அலைகள் வந்து மோதுகின்ற கடற்கரையை உடைய திருச்செந்திலம்பதியில் அவன் வீற்றிருக்கின்றான்.

முருகன் ஸ்தலங்கள் தோறும் நீக்கமற நிறைந்திருந்தாலும், மேற்கூறிய ஆறுபடை வீடுகளையும் விசேஷமாகச் சொல்லுவார்கள். ஆறு எழுத்து மந்திரத்திற்கு [ஷடாக்ஷரம்] ஏற்ப ஆறுபடை வீடுகள் பொருத்தமாக அமைந்துள்ளன.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்" என்கிறார் திருமூலர். உள்ளம் கோயில், உடம்பு ஆலயம். உண்மையான பக்தி உணர்வுகொண்ட அன்பரின் உள்ளத்தை ஆலயமாகக்கொண்டு வீற்றிருப்பவன் இறைவன். பல்லவ மன்னனும், பூசலார் நாயனரும் ஒரே நேரத்தில் சிவபெருமானை எழுந்தருளப் பண்ணுவதற்கு—ஆவாகனம் பண்ணுவதற்காக நாளும் நேரமும் குறித்திருந்தனர். பூசலார் நாயனர் கையில் திருக்கோயில் அமைப்பதற்கான பொருள்வசதி இல்லை. எனவே, தமது உள்ளத்திலேயே கோயில் அமைத்துக்கொண்டார்; கும்பாபிஷேகத்திற்கு நாளும் நேரமும் குறித்துக்கொண்டார்.

இதே வேளையைப் பொருள்வசதி உடைய பல்லவ மன்னனும் குறித்திருந்தான். அடியார்க்கு எளியனாய் இரங்கி அருள்பாலிக்கும் எம்பெருமான் சிவபெருமான் பேரன்பும் பக்தி உணர்வும் நிறைந்த பூசலார் நாயனர் உள்ளத்தில் முதலாவதாக எழுந்தருளப் போவதாகவும், மன்னனை வேறு ஒரு நாளும் நேரமும் குறித்துக் கொள்ளுமாறும் கட்டளையிட்டு விட்டார்.

எனவே, உண்மை அன்பும், பக்தி உணர்வுமே முக்கியமானவை. இங்கே குமரகுருபரரும், "ஆறு எழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோன்" என்று கூறுவது உண்மைப் பக்தியின் பெருமையை விளக்குவதாய் உள்ளது.

பழங்காலத்தில் முனிவர்கள் தங்கியிருந்து தவம் இயற்றிய ஆரண்ய ஆஸ்ரமங்கள் தெய்வ சாந்நித்யம் பெற்றுத் திகழ்ந்தன. அவர்கள்

இருந்த இடங்கள் எல்லாம் இறையருள் கூட்டு விக்கும் தலங்களாக விளங்கின.

காலப் போக்கில், குறிப்பிட்ட தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் தனி விசே டங்கள் உண்டு என்னும் எண்ணம் மக்கள் மனதில் எழலாயிற்று.

எனவே அத்தனி விசேடத் தலங்களுக்குத் தனியாகச் சென்று வழிபாடு செய்வதும், அடியார்கள் கூட்டத்துடன் யாத்திரையாகச் சென்று வழிபாடு செய்வதும் மரபாகப் போற் றப்பட்டன.

வழிபாட்டு முறையில் தொன்மைச் சிறப்பு மிக்க மரபைப் போற்றுபவர் குமரகுருபரர். எனவே, "ஆறு திருப்பதி கண்டு"—நேரில் தலங்களுக்குச் சென்று வழிபடும் முறையைக் கூறுகின்றார். அவ்வாறு வழிபடுவதின் மூலம் உண்மைப் பக்தியின் சிறப்புத் தெரிகின்றது.

"மனமே! இராமபிரானிடம் பக்தி என்ற சாம்ராஜ்ப் பதவி எவருக்குக் கிடைக்கிறதோ அந்த மனிதர்களின் நல்ல தரிசனம் அதிகமான ஆனந்தத்தைக் கொடுக்கும். இந்த ஆனந்தம் இத்தகையது என விவரித்துச் சொல்ல முடி யாது. இது அனுபவத்தால் உணரக்கூடியது" என ஸ்ரீ தியாகராஜர் ஸ்ரீ ராம பக்தியைப் பற்றிக் கூறுவது இங்கு நினைக்கத்தக்கது.

26. அடியேனுக்கு முன்னின்று அருள் பாலிப் பாயாக:

— "சந்ததமும்

111. பல்கோடி சன்மப் பகையும் அவம் இருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்–பல்கோடி
112. பாதகமும் செய்வினையும் பாப்பும் பசாசும் அடல்
பூதமும் தீநீரும் பொருபடையும்—தீது அகலா
113. வெவ்விடமும் துட்ட மிருகம்முதலாம் [எவையும்
எவ்விடம் வந்து எம்மை எதிர்ந்தாலும்
— அவ்விடத்தில்
114. பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு [திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்
115. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் விரிகிரணம்
116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓர் ஆறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற–வந்து [இடுக்கண்
117. எல்லாம்பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திருந்து—பல்விதமாம்
118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும் சீர்ப்
பேசும் இயல் பல்காப்பியத் தொகையும்—ஓசை
119. எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து—ஒழுக்கமுடன்
120. இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மை [விடுத்து
121. ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி [ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்."

—முருகக் கடவுளிடம் குமரகுருபர சுவாமி கள் விண்ணப்பம் செய்துகொள்வது இவ் அடிகளில் புலனாகிறது.

எப்பொழுதும் பலகோடிக்கணக்கான எண் ணிக்கையில் பெருகி வருகின்ற பிறவி என்ற பகையும், அகால மரணமும், கோடிக் கணக் கான துன்பங்களும், பலவகைப் பிணிகளும், கோடிக்கணக்காக நான் செய்த பாவங்களும், பில்லிசூனியம் ஏவல் முதலான செய்வினைகளும், கொடிய நச்சுப்பாம்பும், துன்புறுத்தும் ஆசை என்னும் பேயும், வலிமை மிக்க பூதமும், அதிக வெள்ளப்பெருக்கும், நெருங்கிப் பெருகிவரும் தீயும், கொடியவர்களின் ஆயுதமும், தீமை நீங்காத கொடிய நஞ்சும், துஷ்டத்தனம் விளை விக்கும் கொடிய மிருகங்களும், இவை போன்று தீங்கு தருவன பிறவும் எந்த இடத்தில் வந்து எங்களை எதிர்த்தாலும், அவ்விடத்தில் அந்தச் சமயத்தில், எம்பெருமானே! நீ உன்னுடைய பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு அழகிய உன் தோள்களும், பயத்தைப் போக்கும்படி யான உன் வேலாயுதமும், கச்சை என்னும் இடுப்பு உடை அணிந்த அழகிய இடுப்பும், சிறிய திருப்பாதங்களும், சிவந்த அழகிய கை களும், கருணை பொங்கிவழியும் அழகிய பன்னி ரண்டு விழிகளும், சிறப்பு மிக்க வதனங்கள் ஆறும், சூரியகிரணம் போன்று ஒளி சிந்தும் கிரீ டங்கள் ஆறும் எப்பக்கங்களிலும் சரி; எனக் கெதிரே வந்து தோன்றி, எலலாத் துன்பங் களையும் பொடிபடுத்தி ஒழிக்கவேண்டும்.

யான் வேண்டுகின்ற எந்த வரங்களையும் தந்தருளவேண்டும். எனது உள்ளத்தில் புகுந்து மகிழ்ச்சியாக வீற்றிருத்தல் வேண்டும்.

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, விஸ்தாரகவி ஆகிய நான்கு வகைக் கவிகளைத் திறம்படப் பாடும் ஆற்றலை எனக்குத் தந்தருள்க. எட்டுவகை நினைவுக்கலை என்ற அஷ்டாவதானம் செய்யும் ஆற்றலையும் தந்தருளுவாயாக.

பெருமை பொருந்திய பலவகைக் காப்பிய நூல்களின் அறிவு, எழுத்துக்களைப் பற்றிய ஒலி இலக்கணம், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி எனச் சொல்லப்படும் ஐந்து இலக்கணம் ஆகியவை பொருந்திய முதிர்ந்த தமிழ் அறிவை எனக்கு அருளுவாயாக. நல்ல ஒழுக்கத்தை எனக்கு நல்குக. இந்தப் பிறவியிலே வருகின்ற அகப்பற்று புறப்பற்று ஆகியவற்றை அகற்றி அருளுக.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் என்னிடத்துச் சாராமல் ஒழித்துவிடுக. சுயநலம் சிறிதும் இல்லாமல் பிறர்நலம் பேணி, இறையருளை நாடுவதற்கு ஆராய்கின்ற, பிறவிதோறும் இறையருள்நாட்டம் உடைய அடியார்களோடு எனக்கு நல்ல இணக்கம் ஏற்படுமாறு அருள்பாலிப்பாயாக. திருத்தொண்டர் கூட்டத்துள் என்னையும் ஒருவன் ஆக்குக. சிறந்த அடியார்களிடத்து எப்போதும் ஒன்றியிருக்கும் பேரின்பப் பெரும்போகம் நானும் நுகருமாறு அருளுக.

சிவந்த மணமுடைய உன் மலர்ப்பாதங்களை எனக்குக் காட்டி என்னையும் ஆட்கொண்டு அருளுவாயாக. இவ்வாறு குமரகுருபரர் வேண்டுகின்றார்.

உடம்பு எதுவும் எடுக்காத அவ்யக்த நிலையில் ஆன்மா பேர் உறக்கத்தில் கிடக்கும். இவ்வாறு கிடக்கின்ற ஆன்மா என்னும் உயிர்மீது கருணைகொண்டு இறைவன் உடம்பை அவ்வுயிருக்குத் தருகின்றான். தான் எடுத்திருக்கிற—தனக்கு வாய்த்திருக்கிற — உடம்பிற்கு ஏற்ற பிரகாரம் நல்வினை தீவினைகளை ஆன்மாவானது செய்கிறது.

இறைவன் ஒருவன் உள்ளான் என்னும் உணர்வும், அவன் திருவடி அடைதலே பிறவிப் பயன் என அறியும் அறிவும் மானிடப் பிறவிக்கு அன்றி ஏனைய பிறவிகளுக்கு இல்லை. "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்தமா நிலத்தே"; "அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்பன ஆன்றோர் வாக்குகளாகும்.

மனிதப் பிறவி எடுத்த ஆன்மா இறை உணர்வு இன்றி, மனிதப் பிறப்பின் நோக்கத்தை மறந்து எண்ணற்ற தீமைகளைச் செய்கிறது. தீவினைகளுக்கு ஏற்றவாறு, பிறவியும் பலவாறு தொடர்ச்சியாக வந்து அமைகிறது.

பெத்த நிலையில் கிடக்கின்ற ஆன்மாவைப் பிறவி எடுக்கச் செய்து, அது இயற்றுகின்ற நல்வினை மூலம் முக்திநிலை அடையச் செய்வது இறைவனின் திருக்கருணை நோக்கமாகும். இறைவனுடைய திருக்கருணைக்குப் பாத்திரமாகும் விதத்தில் ஆன்மாவானது நல்வினைகளைச் செய்தல் வேண்டும். நல்வினையும் பிறவிக்குக் காரணமாக அமைவதால் இருவினையும் சேராத பெருநிலையை உயிர் எய்துதல் வேண்டும்.

அவ்வாறு அந்நிலை அடைகின்ற வரையிலும் பிறவித் துயர் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். "சந்ததம் பந்தத் தொடர்" என அருணகிரியார் இதனைக் குறிக்கின்றார். ஆன்ம நோக்கம் ஈடேறுவதற்குப் பிறவித் தொடர் ஒரு பகையாக இருப்பதால், "பல்கோடி சன்மப் பகை" எனக் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்.

இறப்பு எப்போது வரும் என யாராலும் நிர்ணயித்தல் இயலாது. வந்த கடமை முடிந்த பிறகு புறப்பட்டுச் செல்கிறது உயிர். கடமையினை ஆற்றாமல் இடையிலே சென்று விடக்கூடிய நிலையும் உண்டு. அகால மரணம் சம்பவித்தல் எனச் சொல்லுவார்கள். எப்பொழுதும் புறப்படுவற்கு—மரணத்தை எதிர் நோக்குவதற்கு—ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

விக்கினங்கள் என்னும் இடையூறுகள், பலவகைப்பட்ட நோய்கள், எண்ணித் தொலையாத பாவச் செயல்கள் ஆகியவை அவரவர் வினையால் வருகின்றன. இவற்றிற்கு அடிப்படையான தீவினைகளை தான் செய்யாது ஒழிதல் வேண்டும் என வேண்டிக் கொள்கிறார் குமரகுருபரர்.

பில்லி, சூனியம், ஏவல் முதலியன மற்றவர்களால் செய்யப்பட்டு நம்மைத் துன்புறுத்துகின்றன. இவற்றிற்கு மருத்துவம் பார்த்தல்

அரிது. மருந்துகளால் நலம் பெறுதல் என்பது இல்லை. இறைவனே வைத்தியநாதனுக இருந்து அவன் திருவருளாகிய நன்மருந்தால் இந்நோய்த் துன்பத்தை ஒழிக்கிறுன்.

கொடிய நச்சுப்பாம்பு தீண்டுவதால் ஏற்படும் துன்பம், பூதங்களால் ஏற்படுகின்ற துன்பம் தம்மை வந்து அணுகக்கூடாது; துஷ்ட மிருகங் களால் துன்பம் வரக்கூடாது; அவ்வாறு வந் தாலும், முருகா! நீ வந்து எதிரே நின்று எங்கள் துன்பங்களையெல்லாம் தீர்த்துத் துணைசெய்தல் வேண்டும் என இறைஞ்சு கின்ருர்.

இறைவன் முருகப்பெருமான் மீது ஆருக் காதலும், அழுத்தமான மனப்பிடிப்பும் உடைய வர் ஸ்ரீ குமரகுருபரர். அவரோ துறவி. இறை வன் திருவருளும், சுயநலம் இல்லாமையும் அவ ரிடத்திலே உண்டு. எனவே தமக்கு வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சுபவர் அல்லர்.

குமரகுருபரர் வாழ்ந்த காலத்தில், இவ்வா றெல்லாம் சமூகத்தில் மக்களுக்குத் துன்பங் கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வாறு துன்பம் வரும் என்னும் நம்பிக்கையும் இருந் தது. இத்துன்பங்களையெல்லாம் ஒழிக்க, இறை வனைப் போற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என அவர்கள் நம்பி இறைவனைத் துதித்து வழிபட்டார்கள்

தமக்காக மட்டும் குமரகுருபரர் பாடாமல், தமது வாக்கினைச் சொல்லுவதால் மற்றவர் களும் பயன் அடைதல் வேண்டும் என்னும் எண்ணத்தில் வரக்கூடிய துன்பங்களையெல் லாம் தொகுத்துச் சொல்லி, இப்படி வருகிற துயரங்களை, முருகனே! நீதான் துடைத்தல் வேண்டும் எனப் பணிந்து போற்றுகிருர்.

சங்க காலத்தில் முருகனை ஒருமுகம் உடைய வனுக வழிபட்டு வந்த நிலை இருந்தது. வட மொழியில் உள்ள ஸ்காந்த புராணத்தைத் தழுவி, கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புரா ணத்தைப் பாடினுர். சரவணப் பொய்கையில், ஆறுதிருமகவும், உமையவள் வாரி அணைப்ப, ஆறுமுகங்கொண்டு ஓர் உடம்பு பெற்றுத் திகழ்ந்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

கந்தர் கலிவெண்பா 'குட்டிக் கந்தபுராணம்' எனச் சொல்லப்படும். கந்தபுராண மரபைப் பின்பற்றிக் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா வில் முருகப்பெருமான் திரு அவதாரத்தை இயம்புகின்ருர்.

ஆசு கவி, மதுர கவி, சித்திர கவி, விஸ்தார கவி, முதலான பலவிதக் கவிகளையும் இயற்ற வல்ல ஆற்றலை எனக்குத் தந்தருள வேண்டும்; எட்டுப்பேர் ஒரே சமயத்தில் எட்டு விதமான கேள்விகளைக் கேட்டாலும், அக்கேள்விகளுக்கு ஒரே சமயத்தில் பொருத்தமான பதில்களைச் சொல்லக்கூடிய அஷ்டாவதானம் பண்ணும் நினைவாற்றலும் எனக்கு வேண்டும். என் னுடைய அனுபவ அறிவோடு, தமிழ் நூல் களின் அறிவும் எனக்கு வேண்டும்; எழுத்துக் களின் ஓசை பற்றிய இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவை களைப் பற்றிய ஐந்து இலக்கணம் இவை பற் றிய அறிவும், இவையெல்லாம் ஒருங்கு சேர்ந்த முதிர்ந்த தமிழ்ப்புலமையும் எனக்குத் தந்தருள வேண்டும்.

தாம் இவற்றை வேண்டுவதுடன், நல் லொழுக்கத்தையும் நல்கிட வேண்டும் என வேண்டுகிருர். "மனிதனை எது உயர்த்து கிறதோ அது ஒழுக்கம்; எது தாழ்த்துகிறதோ அது இழுக்கம்" என ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகிருர் சுவாமி விவேகானந்தர்.

அடியார் கூட்டத்தோடு இணைவது என்பது எல்லாருக்கும் வாய்க்காத ஒன்று. அடியார் கூட்டத்தோடு இணையக் கூடிய தகுதி, சேர விரும்பும் அடியவருக்கு இல்லாமல் போகலாம். அப்படியே இருந்தாலும் காலம், நேரம், இடம் ஆகியவை ஒத்துவராமல் போகலாம். இறை வனேடு கொள்கின்ற தொடர்புக்கு நிகரானது அவனது அடியார்களோடு வைக்கின்ற தொடர்பு. "அன்பரோடும் கூட்டு கண்டாய்" என்கிருர் அபிராமிபட்டர். எனவே, அடியார் கூட்டத்துடன் நல் இணக்கம் வைப்பது இறை யருளுக்குப் பாத்திரமாவதற்கு உறுதுணையா கிறது. "ஆயும் பழைய அடியாருடன் கூட்டி" எனக் குமரகுருபரர் இங்கே இயம்புவது கருதத்தக்கது.

திருச்செந்திலாண்டவன் திருவருளைப் பெற் றுக் குமரகுருபரர் கந்தர்கலிவெண்பாவைப் பாடியருளினுர். ஆகவே, கந்தர்கலிவெண்பா குமரகுருபரர் பாடிய அருட்பாடல் தமிழ் ஆகும்.

மனம்போல வாழ்வு

(சுவாமி துருவானந்தர்)

ரயில் என்ஜின் ஒன்று தண்டவாளத்திலே வந்து கொண்டிருக்கிறது. அதே தண்டவாளத்திலே ரயில் என்ஜின் வருவதற்கு முன் ஒரு புழு ஒன்று ஊர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ரயில் என்ஜினுல் தான் நசுக்கப்பட்டு மாண்டு போவோம் என்று உணர்ந்து அந்தச் சிற்றுயிர் தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தண்டவாளத்திலிருந்து நகர்ந்து சற்று அப்பால் போகிறது. ரயில் வண்டி ஜடம். பிறர் இயக்கினுல் அல்லாது தானே நகரும் ஆற்றல் அதற்கு இல்லை. அது மட்டுமன்று. அது எவ்வளவு காலமானுலும் அது என்ஜினுகத்தான், ஜடமாகத்தான் கிடக்கும். ஆனுல் அந்தப் புழுவோ உயிர்த் தத்துவத்தோடு இலங்குவது. தன்னைக் காத்துக் கொள்ளும் ஆற்றல் அதற்கு உண்டு. இன்று அது ஒரு சாமானியமான புழுவாகத் தென்பட்டாலும் பரிணமித்தில் வளர்ச்சியடைந்து பிரம்மஞானி நிலைக்கு வரக் கூடிய ஆற்றல் அதனிடத்துப் பொதிந்து உள்ளது. இதற்கெல்லாம் அடிப்படையாக உள்ளது மனது. மனது என்ற ஒன்று இருப்பதனுல்தான் தன்னைக் குறித்த எண்ணம் தோன்றி தன்னைக் காத்துக் கொள்ளும் விருப்பம் வருகிறது. கண்ணுக்குப் புலனுகும் உடலை அறுத்து அதன் பகுதிகளைக் கண்ணுல் கண்டு ஆராயலாம். அதுபோன்று மனதைப் புறக் கண்களால் காண முடியாது.

மனதைப்பற்றி விளக்கம்:

நவீன விஞ்ஞானிகளில் சிலர் மூளைதான் மனதாகச் செயல்படுவதாகக் கூறுகிருர்கள். அவர்கள் கூற்று யுக்திக்குப் பொருந்தாது. குரங்கினுடைய மூளையை எடுத்து மனிதன் ஒருவனுக்கு வைத்து விட்டால் அவன் குரங்கு இயல்பு படைத்தவனுக ஆகிவிடுவானு என்ருல் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இரவு தூங்குகிறபொழுது மூளை ஒய்வு எடுக்கின்றது. ஆனுல் மனதோ விதவிதமான கனவுகளைக் கண்டு ஒய்வின்றி அலைகிறது. எண்ணத்தின் தொகுதிதான் மனது என்று கற்பிக்கப்படுகிறது. இது ஞானியர் கூற்று. வெங்காயம் உலர்ந்த பிறகு அதன் சருகுகளை ஒன்றன் பின் ஒன்ருக உரித்துப் பார்த்தால் ஒன்றுமே எஞ்சியிருக்காது. மனதைப் பற்றிய கூற்றும் அத்தகையதே. விதவிதமான எண்ணங்கள் உள்ளத்தில் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. அந்த எண்ணத்தை எண்ணுது இருந்து விட்டால் எண்ணமற்ற நிலை வருகிறது. அதுவே மனதின் ஒடுக்கம் என்று சொல்லப்படுகிறது. கண்டதையெல்லாம் எண்ணிக் கலங்கித் தவிப்பது மனதின் செயல்.

என்னுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை [நெஞ்சம்

புண்ணுகச் செய்தது இனிப் போதும் பராபரமே

என்பது தாயுமானவர் வாக்கு. தேங்கிய தடாகம் போன்று அலையற்று, சுத்தமாக நீர் இருந்தால் நீர்நிலையின் அடிப்பகுதி தெளிவாகப் புலப்படும். அதே போன்று எண்ண அலைகள் அற்று காமமும், காசு ஆசைகளாகிய உலக ஆசைகள் அற்று மனது இருக்குமேயானுல் மனதிற்கு அடிப்படையாக உள்ள ஆத்ம சொரூபம் நமக்குத் தென்படும்.

சலவைக்குப் போய் வெளுத்து வந்த துணிக்கு நிகர் நமது மனது. வெளுத்த வெள்ளைத் துணியை எந்தச் சாயத்தில் போட்டு எடுக்கிருேமோ அந்தச் சாயத்தின் நிறத்தை அது பெறுகிறது. அதே போன்று நமது மனது எத்தகைய பயிற்சியைப் பெறுகிறதோ அந்த இயல்பு மனதுக்கு வருகிறது. ஒருவனுடைய மனதுக்கேற்ற காட்சிதான் புற உலகிலிருந்து வருகிறது. ஒரு மனிதன் நிற்கிருன். அவனருகே இரு பெண்கள் நிற்கின்றனர். அப்பெண்டிர் இருவரும் தோற்றத்தில் சம வயதுடையவர் போன்று தென்படுகின்றனர். ஒருத்தி அந்த ஆடவனுடைய மனைவி. மற்றொருத்தி அவனுடைய அருமை மகள். அவன் மனைவியைப் பார்க்கிற மனநிலை வேறு; மகளைப் பார்க்கிற மனநிலை வேறு. இம்மன நிலை அவன் தனக்குத்தானே வளர்த்து வந்ததாம். தனது சுகபோகத்துக்கே உரியவள் என்று தன் மனைவியை இடையருது எண்ணி வந்ததன் விளைவாக அவளைப் பார்த்ததும் அத்தகைய எண்ணம் உருவாகிறது. தன் மகளைப்

பாசத்தோடு வளர்த்து வந்ததால் அவனைக் கண்டதும் பாச உணர்ச்சி மேலிடுகிறது. மனதிற்குநாம் எத்தகைய வடிவங்கொடுக்கிறோமோ அந்த வடிவத்தை அது பெறுகிறது.

சொல்லுக்கும், செயலுக்கும் அடிப்படையாகவிருப்பது எண்ணம். நாம் எண்ணுகிற ஒவ்வொரு எண்ணமும் தூய்மையானதாக இருந்தால் நம்முடைய சொல்லும் செயலும் தூய்மையானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஒருவன் மேலோன் ஆவதும் கீழோன் ஆவதும் பிறப்பை முன்னிட்டன்று; அவன் மனம் அடைந்துள்ள பண்பாட்டை முன்னிட்டேயாம். அந்தணர் என்போர் அறவோர் என்பது கோட்பாடு.

மனதை உடையவன் மனிதன் எனப்படுகிறான். எல்லா உயிர்களுக்கும் மனது இருந்தாலும் மனிதனிடத்தில் மட்டும் அது முழுவடிவத்தில் இருக்கிறது. பிறவிதோறும் உடலில் வளர்ச்சி ஏற்படுகின்றது. மனிதப்பிறவி எடுத்த பிறகு சரீர வளர்ச்சி நின்று விடுகின்றது. மனதைத்திருத்தியமைக்கும் செயல்தான் பிறகு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பறவையாய், விலங்காய் பிறவிஎடுத்தபொழுது கூட உணவுக்காகவோ, உடைக்காகவோ, இருப்பிடத்திற்காகவோ கவலையற்று வாழ்ந்தவன் மனிதப்பிறவி எடுத்தவுடன் அவற்றின் பொருட்டுச் சஞ்சலத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகி ஆழித்துரும்பென அல்லல்படுவதைக் காண்கின்றோம். இதற்குக் காரணமாகவிருப்பது எது? மனது வளர்ச்சியடைய அடைய விருப்பும் வெறுப்பும் வளரத் தொடங்குகின்றன. விருப்பு, வெறுப்பு மயமாகத்தான் எல்லா உயிர்களும் இலங்குகின்றன. தொடக்கத்தில் வளர்ச்சிக்குப் பயன்பட்டு இறுதியில் மனிதநிலைவரை உதவிய விருப்பு வெறுப்பு அவனை மீண்டும் பிறவிச் சுழலில் தத்தளிக்கச் செய்கின்றன. 'வேண்டா விருப்பும் வெறுப்பும் அந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம்' என்றார் தாயுமானவர். நமக்குப் பிடித்தமானவரிடத்தில் பிடித்தமானவைகளில் விருப்பும், நமக்குப் பிடிக்காதவர்களிடத்தில், பிடிக்காத பொருள்களில் வெறுப்பும் ஏற்படுகின்றன. இந்த விருப்பு வெறுப்பைத் தோற்றுவிப்பது மனது. நாம் பிறரை மனதால் மதித்தால் அவர்களும் நம்மை மனதால் மதிப்பார்கள். நாம் பிறரை மனதால் சபித்துக்கொண்டு முகத்தில் மட்டும் சிரித்து மகிழ்ச்சியைக் காட்டினால் அவர்களும் நம்மை மனதால்சபித்து முகத்தால் மகிழ்ச்சியை காட்டுவார்கள். இவ்வுலகம் ஒரு கண்ணாடிக்கு நிகர். அக்கண்ணாடியைப் பார்த்து நாம் சிரித்தால் அதில் தெரியும் நமது பிம்பமும் சிரிக்கும். கோபத்தால் பல்லை நெரித்தால் அதுவும் அப்படியே காட்டும். இதற்கு விளக்கமாக நிகழ்ந்த சம்பவம் ஒன்று வருமாறு: விக்கிரமாதித்தன் என்ற ஓர் அரசனும் அவனுடைய அமைச்சனும் மாறுவேடம் போட்டுக்கொண்டு ஊரைக் கடந்து போய்க்கொண்டிருந்தனர். விக்கிரமாதித்தன் அமைச்சன் பட்டியிடம் 'மந்திரியே நம் குடிமக்கள் என்னைப்பற்றி எங்ஙனம் பேசிக் கொள்கின்றனர்?' என்றான். ஒரு ஒற்றையடிப் பாதை வழியே இருவரும் போய்க்கொண்டிருந்தனர். மன்னவனுடைய கேள்விக்கு மறுமொழி பேசாது பட்டி நடந்து வந்துகொண்டிருந்தான். அவர்கள் எதிரே சிறிது தூரத்தில் ஒரு பெண் இவர்களை நோக்கி அதே பாதையில் வந்துகொண்டிருந்தாள். அவளைச் சற்றுத் தூரத்தில் பார்த்ததும் மன்னன் பட்டியிடம் கூறினன். 'மந்திரி பட்டி, அவள் பெண்தானா! சீ! அடக்கமின்றி அலங்கோலத்தோடு வருகிறாளே. ஆடவர் இருவர் தன் எதிரே வருகிறார்கள் என்ற எண்ணமின்றி வரும் அவள் பெண்ணா இல்லை பேயா?' பட்டியும் மறுமொழி பேசாது மௌனமாக இருந்தான். அப்பெண்ணும் அவர்கள் அருகில் வந்ததும் பட்டி அவளிடம் "இந்த நாட்டு மன்னன் விக்கிரமாதித்தன் இறந்து போனாரே உனக்குத் தெரியுமா?" என்றான். அதற்கு அந்தப் பெண் முகத்தைச் சுளித்துக்கொண்டு "அந்த மூதேவி இருந்தால் என்ன, நாசமாய்ப் போனால்தான் என்ன?" என்று சொல்லிக்கொண்டே விரைந்து போய் விட்டாள். மாறுவேடம் போட்டிருந்த மன்னவன் துணுக்குற்றான். 'என்ன பட்டி! நான் உயிரோடு இருக்கும் பொழுதே அவளிடம் செத்துப் போனதாகச் சொல்லுகிறாய். அவளும் கொஞ்சமும் மரியாதையின்றி என்னைத் தூற்றி விட்டுச் செல்லுகிறாளே' என்றான். பட்டி மறுபடியும் பதில் உரைக்காது தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தான். சிறிதுதூரம்

சென்றதும் வயது முதிர்ந்த கிழவன் தள்ளாடி நடந்துகொண்டு வந்தான். அவன் தலையில் விறகுக் கட்டு இருந்தது. அரசன் பட்டியிடம் கூறியதாவது: "பட்டி, இந்த ஆளைப்பார். வயது முதிர்ந்து உடல் தளர்ந்த நிலையிலும் விறகுகளைச் சுமந்துகொண்டு நடக்க முடியாது சிரமப்படுவதைப் பார்க்க என் மனம் துடிக்கிறது." பாவம்! தள்ளாடிய அந்த முதியோன் அவர்கள் அருகில் நெருங்கியதும் பட்டி, கிழவனைக் கேட்டதாவது: 'ஐயா, பெரியவரே, விக்ரமாதித்த மன்னன் இறந்து போனாரே! சமாச்சாரம் தெரியுமா?"

"ஐயோ, எங்கள் தெய்வம் போய்விட்டதா? இனிமேல் நாங்கள் எப்படி வாழ்வோம். அவர் இருந்ததால்தானே நாங்களும் உயிரோடு வாழ்ந்தோம். இனி எங்களுக்கு வேறு கதி இல்லையே!" என்று சொல்லிக்கொண்டே தடால் என்று விறகுக் கட்டோடு கீழே வீழ்ந்தான். அரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் செத்துப்போனதாகப் பட்டி சொன்னதும் கிழவன் வேதனையுற்றுக் கீழே விழவேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்பி "பட்டி என்ன காரணத்திற்காக நான் செத்துப்போனதாக அந்தப் பெண்ணிடத்தில் சொன்னாய்? அவள் என்னைத் திட்டிக்கொண்டே போனாள். இந்தப் பெரியவரிடத்தில் நான் செத்துப்போனதாக நீ சொன்னதும் தன் உயிர் போனதுபோன்று துடித்து எனக்காக வருந்துகிறாரே! என்ன பட்டி ஒன்றுமே புரியவில்லையே!" என்றான் மன்னன். உடனேபட்டி கூறியதாவது: "அரசே! நீங்கள் கேட்டீர்களே உங்களைப்பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கின்றனர் என்று! இப்பொழுது நீங்கள் கண்ட காட்சிதான் உங்கள் கேள்விக்கு விளக்கம். அப்பெண்ணை இழிவாக எண்ணி, பேசியதால் அவள் உள்ளத்திலும் உங்களைப்பற்றி இழிவான எண்ணம் தோன்றி இழிவான சொற்களால் உங்களைத் திட்டினாள். கிழவனைப் பார்த்ததும் அனுதாப உணர்ச்சி உங்கள் உள்ளத்தில் தோன்றியது. அவனுக்காக இரங்கிப் பேசினீர்கள். நீங்கள் எண்ணிய எண்ணம் அவன் உள்ளத்திலும் தோன்றி உங்கள் மீதும் அனுதாப உணர்ச்சி கொள்ளுமாறு செய்தது. ஆகவே நாம் எதை உலகுக்குக் கொடுக்கிறோமோ அதுதான் நமக்குத் திரும்பவும் வருகிறது. நீங்கள் பிறரை நேசித்தால் அவர்களும் உங்களை நேசிப்பார்கள். நீங்கள் பிறரை வெறுத்தால் அவர்களும் உங்களை வெறுப்பார்கள்.

What we think that we become என்று ஆங்கிலத்தில் ஒரு கோட்பாடு உண்டு. நாம் எதை எண்ணுகின்றோமோ அதன் மயம் ஆகின்றோம் என்பது அதன் பொருள். சிலர் தங்களைக் குறித்துச் சலித்துச் சொல்லுகிற பொழுது 'எனக்கும் வயது ஆகிவிட்டது. உடலும் தளர்ந்துவிட்டது. இனிப் புறப்பட வேண்டியதுதான்' என்று முதுமையைத் தங்களுக்குள் ஓயாது ஞாபகப்படுத்தி மரணத்தை வரவழைத்துக்கொள்கின்றனர். வயது ஆகிக் கொண்டேயிருந்தாலும் மனதில் இளமையும் உற்சாகமும், ஊக்கமும் பொருந்திய எண்ணங்கள் எப்பொழுதும் ததும்பிக்கொண்டேயிருக்குமானால் அவர்கள் வயதானாலும் இளமை பொருந்திய உடலோடும், அழகோடும் தென்படுவர். மகாத்மா காந்தியடிகளை எல்லாரும் காந்தித்தாத்தா என்று சொன்னார்கள். ஜவஹர்லால் நேருவை நேருமாமா என்று சொன்னார்கள். வயதானாலும் மாடிப்படிகளில் குதித்து ஓடியதும், குதிரைச் சவாரிபண்ணியதும் நீந்துதல் போன்றவற்றில் விடாதுஉற்சாகமாக ஈடுபட்டதும் தன்னை யாண்டும் குழந்தைகளோடு இணைத்துக் குழந்தை மயமாகத் தன்னைக் கருதி வந்ததும் குழந்தை உள்ளம் இவர்பால் இருந்தது என்பதைக் காட்டுகின்றன. இதைவிட உயர்ந்தது தன்னை ஆத்மசொருபமாக,தெய்வத்தின் குழந்தையாக எண்ணுவதாகும். அப்பொழுது உடல், உள்ளம் அனைத்தும் தெய்வமயமாகவே மாறிவிடுகின்றன. ஆகவே மனம் எப்படியோ வாழ்வு அப்படி. ஆகவே மனம் போல வாழ்வு என்ற கோட்பாடு வந்துள்ளது. நாம் யாரோடு இணக்கம் கொண்டாலும் தெய்வத்தோடு இணக்கம் கொள்கிறோம் என்ற எண்ணத்தோடு இணக்கம் பூண்டால் பலர் நினைப்பதுபோல் வாழ்க்கை வேதனை தரும் சுமையாக இராது. அமைதியும் ஆனந்தமும் நிறைந்த அமிர்தமாக சுவைக்கும். தெய்வீக வாழ்விலே கிடைக்கும் பேறு இதுவேயாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-145

842. भवरोगघ्नी பவரோகக்னீ — பிறவிப் பிணியை அகற்றுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஜீவகோடிகள் பிறப்பெடுக்கும் செயல் கணக்கில் அடங்காததாக விரிவடைந்து போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப் பிறப்பு எடுப்பதை உயிர்வகைகள் பெரிதும் வேண்டுகின்றன. ஏனென்றால் உடல் எடுத்து உலக வாழ்வில் ஈடுபட்டிருக்க உயிர்களனைத்தும் விரும்புகின்றன. எண்ணிக்கையில் அடங்காத பிறவிகளின் வாயிலாக அவ்வுயிர்கள் பரிணமித்து மேல்நிலைக்கு வருகின்றன. மானுடப் பிறவி ஒன்றே மற்றப் பிறவிகளைவிட உயர்ந்தது. மானுட நிலையை எட்டிய பிறகும் அதில் பற்று வைத்து மக்கள் திரும்பத் திரும்பப் பிறந்து கொண்டேயிருக்கின்றனர். அங்ஙனம் பிறப்பு எடுத்த மக்கள் மடிந்துகொண்டும் இருக்கின்றனர். இதற்கிடையில் இப்பிரபஞ்ச வாழ்க்கையைப்பற்றிய உண்மை ஒன்றை விவேகம் படைத்துள்ள மக்கள் அறிந்துகொள்கின்றனர். அவர்கள் நாடுகின்ற இன்பத்தை இவ்வுலகம் கொடுத்து உதவுவது போன்று தென்படுகிறது. அங்ஙனம் இவ்வையகம் தருகிற இன்ப வாழ்வில் மக்கள் ஆழ்ந்து மூழ்கியிருக்கின்றனர். இடையிடையே அவர்கள் துன்பத்துக்கும் ஆளாகின்றனர். துன்பம் கலவாத இன்பம் இம்மண்ணுலகில் இல்லை என்னும் உண்மையை நாளடைவில் அவர்கள் அறிந்து கொள்கின்றனர். நாள் ஏற ஏற இன்பத்தை விடத் துன்பமே ஈண்டு அமைந்திருக்கிறது என்னும் உண்மையை அவர்கள் அறிய வருகின்றனர். இத்தகைய விவேக உதயம் அமைந்த பின்பே உலகப்பற்றுச் சிறிது சிறிதாக அகலுகிறது. பற்றுதல் முற்றும் அகன்று போகிற பரிபாகம் வந்து அமைகிறது. பற்று நீங்கிய நிலையிலிருந்து அன்னையிடம் இனிப் பிறவி வேண்டாம் என்னும் பிரார்த்தனையைப் பண்ணுகின்றனர். அத்தகைய மனபரிபாகம் அமைந்துள்ள ஜீவாத்மாக்களைப்பிறவிப் பிணியினின்று விடுவித்துத் தன்னுடைய நிஜநிலையில் ஒன்றுபடுத்திக்கொள்ளுகிறாள் என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

843. भवचक्रप्रवर्तिनी பவசக்ரப்ரவர்தினீ — பிறவிச் சக்கரத்தைச் சுழற்றுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிறவியைப் பிணி என்று கருதுபவர்கள் பிரபஞ்ச வாழ்வில் பற்று நீங்கியவர்களாவர். இங்ஙனம் பற்று நீங்கப் பெற்றிருப்பவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலரே. இக்கோட்பாட்டை ஆயிரக்கணக்கான மக்களுள் அரிதிலும் அரிதாக யாரோ சிலர்தான் அறிந்து ஆத்மபரிபாகம் அடைய முயலுகிறார்கள். அங்ஙனம் முயல்கின்ற கணக்கற்ற பேர்களுள் அரிதிலும் அரிதாக யாரோ சிலர்தான் பூரணத்தை எட்டுகின்றனர் என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கீதையில் பகர்ந்திருக்கின்றார்.

தேகம் தாங்கியுள்ள ஜீவகோடிகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். அவைகள் ஸ்தாவரம்என்றும் ஜங்கமம் என்றும் பாகுபடுத்தப்படுகின்றன. இத்தனை விதமான படித்தரங்களில் உள்ள ஜீவகோடிகள் யாவும் உலக வாழ்க்கையில் பற்று மிக வைத்திருக்கின்றன. பற்றுதலுக்கு ஏற்ற சூழ்நிலையும் இயற்கையில் அமைந்திருக்கிறது. ஆதலால்தான் இவ்வையக வாழ்வை ஜீவகோடிகள் அனைத்தும் ஆழ்ந்து பற்றிப் பிடித்து இருக்கின்றன. பற்றுதலை நிறைவேற்றுவதற்கு அவை யாவும் சதா முயன்று வருகின்றன. பற்றுதலில் பெரும்பான்மை நிறைவேறவும் செய்கிறது. ஆசை நிறைவேறுவதற்கு ஏற்பப் புதிய ஆசை உள்ளத்தில் உருவெடுக்கிறது. ஆசை உருவெடுப்பதும் அது நிறைவேறப் பெறுவதும் ஒன்று சேர்ந்து பவசக்கரம் என இயம்பப்பெறுகிறது. ஓயாது சுழன்றுவரும் பிறவிச்சக்கரம் என இது பொருள்படுகிறது. இச்சக்கரத்தை அன்னை பராசக்தி ஒழுங்காகச் சுழற்றிக் கொண்டேயிருக்கிறாள். ஆதலால்தான் இப்பிரபஞ்ச வாழ்க்கை மயமாக உயிர்கள் யாவும் இலங்கி வருகின்றன. இயற்கையை முறையாக ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு இவ்வுண்மை இனிது விளங்குகிறது. ‘எவ்வுடல் எடுத்தார் அவ்வுடல் வாழ்க்கை இன்பம் எனவே துன்பம் இலையென’ என்னும் கோட்பாடும் இதை முன்னிட்டே அமைந்திருக்கின்றது.

இவ்வுண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் ஓர் அரிய உபமானத்தின் மூலம்விளக்கு கிறார். சிறு குழந்தைகளுக்குப் பொம்மைகளை வைத்து விளையாடுவதில் விருப்பம் அதிகம். தாய் ஒருத்தி தன் குழந்தையின் கையில் பொம்மைகளைக் கொடுத்து விளையாட விட்டு விட்டுத் தன்வீட்டுக் காரியங்களைக் கவனிக் கிறாள். விளையாடி சலித்துப்போன பிறகு குழந்தை பொம்மைகளைப் புறக்கணித்துவிட் டுத் தாயைக் கூவி அழைக்கிறது. பவ சக்கரம் இந்த விளையாட்டுக்கு நிகராகிறது. எந்தெந்த உயிர் எந்தெந்த இயக்கத்தில் ஈடு பட விரும்புகிறதோ அந்தந்தச் சூழ்நிலையை அது இனிது அடையப் பெறுகிறது. ஆதலால் தான் பவசக்கரம் மிகக் கவர்ச்சிகரமாக உயிர் களனைத்துக்கும் தோன்றுகிறது. அவை அதில் இனிது ஈடுபட்டும் இருக்கின்றன. ஆதியந்தமில்லாது பவசக்கரம் இங்ஙனம் அன்னையின் அருளால் இனிது இயங்கி வரு கிறது. உயிர்களனைத்தும் அதில் இன் புற்று வாழ்ந்து வருகின்றன என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக் கிறது.

844. छन्दः सारा சந்தஸ்ஸாரா—வேதங் களின் உட்பொருளாகிய உபநிஷதங்களின் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத் தின் பொருள்.

வேதங்களை விருட்சத்தோடு ஒப்பிடலாம். அந்த விருட்சம் வழங்குகின்ற கனியோடு உப நிஷதங்களை ஒப்பிடலாம். வேதங்களைப் பவ சக்கரத்தோடு ஒப்பிடலாம். உபநிஷதங்களைப் பவரோக நிவாரணத்தோடு ஒப்பிடலாம். வேதங்கள் பிரவிருத்தி மயமாயிருக்கின்றன. உபநிஷதங்கள் நிவிருத்தி மயமாயிருக்கின்றன. வேதங்கள் விளக்குவது ஐம்புலன்களுக்கு எட்டுகின்ற பிரபஞ்ச சம்பந்தமான விஷயங் களாகும். உபநிஷதங்கள் விளக்குவது பஞ் சேந்திரியங்களுக்கு எட்டாத பரம்பொருளைப் பற்றிய கோட்பாடு ஆகும். வேதங்கள் நல்குவது இவ்வையகத்துக்குரிய இன்பங்களா கும். உபநிஷதங்கள் எடுத்துக் காட்டுவது இவ்வையக இன்ப துன்பங்களுக்கு அப்பா லுள்ள பாரமார்த்திகப் பெருநிலையாகும். வேதங்களைப் பிரேயஸ் மார்க்கம் எனலாம். உபநிஷதங்கள் புகட்டுகின்ற கோட்பாடுகளைச் சிரேயஸ் எனலாம். பிரேயஸில் பக்குவ மடைந்துள்ளவர்களே பிறகு சிரேயஸுக்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். மரத்தில் தோன்றும் பூவானது பிஞ்சு ஆக மாறுகிறது. அது முதிர்ந்து காய் ஆகிறது. கனிகின்ற பொழுது அது மரத்தை விட்டுப் பிரிகின்றது. பிரேயஸ் மார்க்கமும், சிரேயஸ் மார்க்கமும் அது போன்றன. ஆத்மபரிபாகம் அடையும் வரையில் மானுடன் பிரபஞ்சம் தருகிற பிரே யஸ் மார்க்கத்தில் பயிற்சிபெற்று வருகிறான். பெறவேண்டிய பயிற்சியைப் பெற்றான பிறகு அவன் தானே சிரேயஸ் மார்க்கத்தில் பிரவேசிக் கிறான். இந்த இரண்டு மார்க்கங்களுக்கும் அன்னை பராசக்தி முகாமையாயிருப்பதால் அவள் புக்தி முக்திப் பிரதாயினீ என அழைக் கப் பெறுகிறாள். இக்கோட்பாடு சந் தஸ்ஸாரா என்னும் நாமத்தில் அடங்கியிருக் கிறது.

845. शास्त्रसारा சாஸ்த்ரஸாரா — நூல் களின் உட்பொருள் ஆவாள் என்பது இந்த நாமத்தின் கருத்து.

பரஞானத்தை அடையப் பெற்றவர்கள் அமைத்து வைத்திருக்கும் கருத்துக்களுக்குச் சாஸ்திரம் என்னும் பெயர் வந்துள்ளது. அக் கருத்துக்களில் இரண்டு கோட்பாடுகள் இருக் கின்றன. ஒன்று உடன்பாடானது. மற்றது எதிர்மறையானது. இன்னதைச் செய் என்று ஆக்ஞாபிப்பது உடன்பாட்டு முறை. இன்ன தைச் செய்யாதே என்று தடை பண்ணுவது எதிர்மறையாகும். செய்ய வேண்டியதைச் செய்வதன் மூலமாக மனிதன் மேன்மையுறு கிறான். செய்யத் தகாததனிடத்திருந்து விலகி யிருப்பதன் வாயிலாகவும் அவன் மேன்மையுறு கிறான். செய்யவேண்டியதினின்று விலகியிருந் தும் செய்யத் தகாததைச் செய்வதினின்றும் மனிதன் கீழ்மையுறுகிறான். அன்னை பராசக்தி யானவள் இத்தகைய சாஸ்திரத்தின் சாரமாக அமைந்திருக்கிறாள். ஆதலால் அன்னையைச் சார்ந்திருக்கும் ஆத்ம சாதகன் ஒருவனுக்குச் சாஸ்திரங்களின் உட்கருத்துக்கள் தாமாகவே விளங்குகின்றன. இக்கோட்பாட்டுக்குச் சான்

ருக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் இலங்குகின்றார். அவர் அன்னையிடம் பிரார்த்தித்ததாவது: "தாயே, உன் மகிமைகளை அறிந்துகொள்ள நான் சாஸ்திரங்களை நாடிப்போகேன். பிறர் சொல்லையும் கேட்கமாட்டேன். உன் மகிமைகளை நீயே எனக்கு விளக்கியருள வேண்டும். நான் முற்றிலும் உன்னைச் சார்ந்தவனுக இருக்கிறேன். உன்னை நம்பியிருக்கும் என்னைக் கை விட்டு விடாதே." இங்ஙனம் திரிகரண சுத்தியுடன் அவர் வழிபடு தெய்வமாகிய அன்னை பராசக்தியிடம் விண்ணப்பித்தார். அதன் விளைவாகச் சாஸ்திரம் ஏதும் கல்லாத அவர்தாமே சாஸ்திரசாரமாக மேலோங்குகின்றார். அவர் எதைச் செய்தாரோ அது மற்றவர்களுக்குச் சாஸ்திரம். எதைப் பகர்ந்தாரோ அதுவும் மற்றவர்களுக்குச் சாஸ்திரமாகிறது. எனவே அன்னையிடம் சரண்புகுதல் சாஸ்திரத்தின் சாரத்தை அறிந்துகொண்டதற்கு ஒப்பாகிறது.

846. मन्त्रसारा மந்த்ரஸாரா — மந்த்ரங்களின் சாரமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னைக்கு ஆயிரம் நாமங்களும் அவற்றிற்கு மேலும் அவளுடைய விளக்கமாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு நாமத்தின் உட்கருத்தை ஆழ்ந்து ஆராயுமிடத்து அது நல்ல வழிபாடு ஆகிறது. சொல்லிய பாட்டின் உட்பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவ சாயுஜ்யம் அடைவார்கள் என்பது ஆன்றோர் வாக்கு. இங்ஙனம் அன்னையின் நாமங்களை ஏராளமாக உணர்ந்து ஓதிக்கொண்டு வரவர ஆத்மசாதகன் மனபரிபாகம் அடைகிறான். அதன் பிறகு பல நாமங்கள் சில நாமங்களாகக் குறுகுகின்றன. கடைசியில் சில நாமங்கள் ஒரு நாமமாக உருவெடுக்கிறது. அந்த ஒரு நாமத்தை ஜபிப்பது ஆயிரக்கணக்கான நாமங்களை உச்சரிப்பதற்கு நிகராகின்றது.

விதை வண்ணத்தில் மிகச் சிறியது. ஆனால் அது முளைத்துப் பெரிய மரம் ஆகிறபொழுது பல பாங்குகளை உடையதாக விரிவடைகிறது. மந்த்ரமும் அத்தகையதே. மந்த்ரம் மனதை உறுதிப்படுத்துகிறது; அதைத் தெளிவடையச் செய்கிறது. மந்த்ரத்தின் சொரூபமாயிருக்கும் தெய்வம் அனுபூதிக்கு உரியதாகும்படி ஆத்மசாதகனுக்கு மந்த்ரம் பயன்படுகிறது. ஆதலால் அம்பிகையை மந்த்ரஸாரா எனச் சொல்லுவது முற்றிலும் பொருந்தும். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ராமா என்பது ஒரு மந்த்ரம். அதை முறையாகக் கையாண்டதன் விளைவாகச் சாதாரண மானுடன் ஒருவன் வால்மீகிமகரிஷியாக மேலோங்கலாயினன். பின்பு அந்த மந்த்ரத்தின் சாரமாகிய ராம தத்துவம் வால்மீகி மகரிஷிக்குத் தெற்றென விளங்கிற்று. அதை அவர் விரித்ததன் விளைவாக ஆதிகாவியமாகிய வால்மீகி ராமாயணம் உருவெடுத்தது. ஆக, ராமாயணத்துக்கே சாரமாயிருக்கும் மந்த்ரம் ராம என்பதாகும். பிரபஞ்ச முழுதுக்கும் மந்த்ரமாயிருப்பது ஓங்காரம். ஓங்காரம் ஸ்தூல வடிவெடுக்குமானல் அது பிரபஞ்சமாகவும், அதை ஆண்டு வருகிற ஈஸ்வரியாகவும் விரிவடைகிறது. பிரணவத்தின் அமைப்பைச் சிறிது மாற்றி அமைத்தால் அது உமா என்னும் சக்திப் பிரணவமாக வடிவெடுக்கிறது. உமா என்று உச்சரிப்பதும் ஓம் என்று உச்சரிப்பதும் ஒன்றேயாம். இந்த உச்சாரணையின் விளைவாகப் பஞ்சகிருத்திய மயமாயிருக்கும் பரதேவதை சாதகனுக்குச் சொந்தமாகின்றாள். இப்பிரணவத்தோடு கூடிய பஞ்சாக்ஷரமந்த்ரமாகிய ஓம் நமசிவாய என்பதும், அஷ்டாக்ஷர மந்த்ரமாகிய ஓம் நமோ நாராயணுய என்பதும் அமைந்துள்ளன. இத்தகையமந்த்ரங்கள் ஆத்மசாதனத்துக்கேற்ற பீஜங்கள் அல்லது வித்துக்கள் ஆகும். மந்த்ர உச்சாரணை மக்கள் அனைவருக்கும் சொந்தமாகிறது. ஏதேனும் ஒரு மந்த்ரத்தை ஆத்மசாதகன் உறுதியாகவும் ஊக்கத்துடனும் ஆயுள்கால முழுவதும் உச்சரிப்பானுகில் அவனுடைய ஜீவவியக்தி திருந்தி அமைகிறது. அதன்விளைவாக அந்தமந்த்ரத்தின் சாரமாயிருக்கும் தெய்வத்திற்கு அவன் உரியவனுகின்றான். அந்தத் தெய்வம் அவனுக்கு உரியது ஆகிறது. ஆகவே நாடுகிறவர்கள் அனைவரின் நாட்டத்திற்கேற்றவாறு தெய்வ வியக்தியை அடையப் பெறுகின்றனர். இக்கோட்பாடுகள் யாவும் மந்த்ரத்தில் இருப்பதால் அன்னை பராசக்தி மந்த்ரஸாரா என இயம்பப்பெறுகிறாள்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (252) ஏழை மக்கள் இருக்கும் போது நகைகளை விக்கிரகங்களுக்குத் தருவது சரியான செயலா ?

காலமெல்லாம் எல்லாச் சமுதாயங்களிலும் ஏழை மக்கள் இருப்பது இயற்கையின் பாங்கு. ஏழ்மை உண்மையில் குறைபட்ட மனதினின்று உருவெடுக்கிறது. பொருள்மிகப் படைத்திருப்பதற்கிடையில் மன அமைப்பில் பரம ஏழைகளாக இருப்பவர்களை எல்லாச் சமுதாயங்களிலும் காணலாம். எனவே உலகம் இருக்கும் வரையில் உலக மக்களுக்கிடையில் உடைமையும், வறுமையும் பக்கம் பக்கம் அமைந்திருப்பது இயற்கையின் கூறு.

நல்ல சமுதாயத்தில் நல்ல அரசாங்கம் பொருளாதாரத் துறையில் ஏழை மக்களுடைய ஏழ்மையை அகற்றி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறது. மக்கள் எல்லாரும் சமுதாய நலனுக்காக உழைத்தே ஆக வேண்டும் என்னும் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். ஏழை மக்களுக்கு ஏற்ற தொழில்களைக் கொடுத்து அவர்களுக்குத் தாராளமாகக் கூலியும், சம்பளமும் கொடுக்கலாம். அவர்கள் சம்பாதித்த பணத்தின் பெரும் பகுதியை உணவிலும், உடையிலும், குடியிருக்கும் வீட்டு அமைப்பிலும் முறையாகச் செலவு செய்யும்படி திட்டம் வகுப்பது உசிதம். சமுதாயத்திலிருக்கும் மக்கள் எல்லார்க்கும் போதியவளவு உணவு, உடை, வீடு முதலியன அமையும்படி செய்தல் வேண்டும். இதற்கு மேல் மனதிலுள்ள வறுமையை அகற்ற யாருக்குமே இயலாது. நல்லறிவின் விளைவாகவே மனத்துக்கண் உள்ள ஏழ்மை அகன்று போகிறது.

நகைகளை அவரவர் விருப்பத்துக்கும் உழைப்புக்கும் ஏற்ப அவரவரே தேடிக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டும். நகையைத் தானம் பண்ணுவதால் சமுதாயத்தில் நலம் மிக வாய்த்துவிடாது. விலையுயர்ந்த ரத்தினங்களும் பொன்னும் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அவைகளைத் தாங்களே வைத்து அனுபவிப்பதைவிட கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளை அலங்கரித்து ரசிப்பதுமேலானது. நகைகளைத் தாங்களே அணிந்துகொண்டு இன்புற்று இருக்கும் பாங்கு மக்களுக்கிடையில் உண்டு. இதை இரண்டாந்தரமான பாங்கு என்றே நாம் பொருள்படுத்த வேண்டும். தெய்வத்துக்கு நகைகள் தேவையில்லை. மக்களுடைய திருப்திக்காகத் தெய்வங்களின் விக்கிரகங்களை அலங்கரிப்பதில் தோஷமில்லை. வெறும் பொருட்காட்சியில் ரத்தினங்களை வைத்து மக்களுக்குக் காட்டுவதைவிடக் கோயிலில் தெய்வத்தை அலங்கரித்துக் காட்டுவது மேலானது. நல்ல மனப்பான்மையும் மக்களின் நல்வாழ்வுமே சமுதாயத்தின் நோக்கங்களாக இருந்து வரவேண்டும்.

கேள்வி : (253) இறைவனைப் பற்று அற்றவன் எனக் கூறுவது ஏன் ?

இறைவன் தானே உலகு அனைத்தும் ஆயிருக்கிறான். அத்தகையவனைப் பற்றற்றவன் எனப்பகர்வது ஏன் என்பது கேள்வி. இறைவன் பற்றற்றவன் என்பதற்குப் பிரமாணம்

> பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்றுவிடற்கு.

முக்குணங்களுக்கு அப்பாலுள்ள பரமன் முக்குணங்களைத் தன்னிடத்துத் தோற்றுவித்துக் கொள்ளுகிறான். முக்குணங்கள் சத்வம், ரஜஸ், தமஸ் என்பனவாம். அவைகளின் நிறம் வெண்மை, சிவப்பு, கருப்பு. உயிர்த் தத்துவமாய் அமைந்திருப்பவைகளிடத்துச் சத்துவம் ஓங்கியிருக்கிறது. கிரியை, விசை மயமாய் இருப்பது ரஜஸ். ஜடப் பொருளாயிருப்பது தமஸ். தமோகுணம் ரஜோ குணமாக மாறுவதும் ரஜோகுணம் சத்வகுணமாக மேலோங்குவதும் சத்வகுணம் குணாதீதத்தில் ஒடுங்குவதும் இயற்கையின் பாங்கு. நிறமற்ற ஙீராவி வானத்திலே வெண்மேகமாகவும், சிவந்தமேகமாகவும், கருமேகமாகவும் காட்சி கொடுக்கிறது. ஆயினும் அந்த மூன்று நிறங்களில் பற்றற்றதாயிருப்பதே நீராவியின் பாங்கு ஆகும். இவ்வுண்மை மக்கள் எல்லார்க்கும் வெளிப்படையாக விளங்குகிறது. எண்ணிறந்த உலகங்களாகவும் உயிர்களாகவும் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுகிற இறைவன் அவ்வுலகங்களுக்கும் உயிர்களுக்கும் உண்மையில் அப்

பாற்பட்டவனாகவிருக்கிறான். இது சாத்தியமா அல்லது இது பொருந்துமா என்னும் கேள்வி எழலாம். இதற்கு விடை நம்மிடத்தே இருக்கிறது. கனவு காண்கின்றபொழுது நாம் கனவிலே நமக்கேற்ற உலகத்தையும் உயிர்க்கூட்டத்தையும் கற்பனை பண்ணுகிறோம். அப்படிக் கற்பனை பண்ணுகிற நாம் கற்பனை பண்ணிய சூழ்நிலையிலும் உயிர்களிடத்துப் பற்றுதல் வைக்காதிருக்கிறோம். கனவை விட்டு விழித்துக்கொண்ட பிறகு கனவில் தோன்றிய உயிர்களும் உலகும் போன இடம் நமக்குத் தெரியாது. அவைகளில் நாம் பற்று வைக்காது வெறுமனே அவை யாவையும் மனத்தகத்தே தோற்றுவித்ததே அதற்குக் காரணமாகும். நம்முடைய சிற்றியல்பைக் கொண்டு சிறிது நேரத்துக்கு நாம் கற்பனை பண்ணிய கனவு உலகில், விழித்துக் கொண்ட பிறகு நாம் எங்ஙனம் பற்றுதல் வைக்காதிருக்கிறோமோ அதே விதத்தில் கனவு நிலையையும் நனவு நிலையையும் யாண்டும் தாண்டியுள்ள பரமன் உலகங்கள் யாவையும் தோற்றுவிப்பதும் நிலைபெறச் செய்வதும் துடைப்பதும் ஆகிய செயல்களைத் திருவிளையாடலாகச் செய்து வருகிறான். நிறமற்ற மேகம் நிறம் உற்றமேகமாகத்தன்னைக் காட்டிக்கொள்ளுவது அதன் பாங்கு. ஒரு நிறத்தையும் அது ஒரு பொழுதும் உண்டு பண்ணவில்லை. நிறத்தை உண்டு பண்ணியது போன்று அது தென்படுவது அதன் இயல்பு. அங்ஙனம் உலகனைத்தையும் கடந்துள்ள கடவுள் உலகமயமாக தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறான். அதில் அவன் கட்டுண்டிருந்தவன் அல்லன். வெறும் தோற்றத்தைப் பற்றுதல் எனப் பகர்வது பொருந்தாது. தான் தோற்றுவித்துள்ள பிரபஞ்சத்தில் சிறிதும் பற்றற்றவனாயிருப்பது பரமனுடைய பாங்காம்.

கேள்வி: (254) *நமது பண்பாடு நமது நாட்டிற்கு மட்டும் பொருந்தியதா?*

பண்பாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதி லோகாசாரம் எனப் பெயர் பெறுகிறது. அடுத்த பகுதி வாழ்க்கைக் கோட்பாடு எனப் பெயர் பெறுகிறது. லோகாசாரம் அல்லது அந்தந்த தேசத்துக்குரிய பழக்க வழக்கங்கள் ஒன்றோடொன்று ஒவ்வாதிருப்பது இயல்பு. சான்றுகள் சில எடுத்துக்கொள்வோம். காலில் அணிந்திருக்கும் பாதரட்சையை வெளியே விட்டுவிட்டு வீட்டுக்குள் போவது நம் நாட்டுத் தேசாச்சாரம். பாதரக்ஷையோடு வீட்டுக்குள் போவது மேல் நாட்டு தேசாச்சாரம். எச்சில் பட்ட உணவை மற்றவர்களுக்கு வழங்காதிருப்பது நம் நாட்டு தேசாச்சாரம். எச்சிலைப் பொருள்படுத்தாது ஒருவன் கடித்த கனியைப் பலபேர் மாற்றி மாற்றிக் கடித்துத் தின்னுவது வேறு சில நாட்டவருடைய பழக்க வழக்கம். இங்ஙனம்தேசாச்சாரத்தில்ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பாங்கில் ஈடுபட்டிருப்பது வெளிப்படை. எனவே தேசாச்சாரம் என்ற பண்பாட்டில் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருப்பதில் குறை ஏதுமில்லை.

விருந்து என்னும் சொல் அழைப்புக்கு இணங்கி வருவது என இக்காலத்தில் பொருள்படுகிறது. முன் காலத்தில் முன்பின் அறியாத வேற்றான் ஒருவன் வந்தால் அவனை அன்போடு வரவேற்று உபசரிப்பது நம் நாட்டுப் பண்பு ஆகும். அப்பண்பில் ஒரு பகுதிதான் இன்றைக்கு எஞ்சியிருக்கிறது. உலகில் பல நாடுகளில் வேற்றானைக் கண்ணெடுத்துப் பார்க்காது இருப்பது குற்றமாகாது. ஆனால் நம் நாட்டுக்குரிய மேலான பண்பாகிய ‘விருந்து ஓம்பல்’ என்னும் கோட்பாட்டை உலக முழுவதும் ஏற்றுக்கொள்ளுவது பொருந்தும். உயிரோடு உயிர் நல்லிணக்கம் வைப்பது எல்லார்க்கும் பொதுவானது. புதிதாக வந்துள்ள வேற்றன் ஒருவனுக்கு வேண்டியவாறு சலுகைகள் காட்டி அவனை உபசரிப்பது தூய அன்பின் அறிகுறியாம். இது சிறப்பாக நம் பண்டை ஒழுக்கம் எனினும் இதை இக்காலத்தில் எல்லாநாடுகளிலும் பரப்புவதுபொருந்தும்.

“ மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.”

அனிச்சப் பூ மோந்தவுடன் வாடிவிடும். அது போன்று விருந்தினர்களை முகங்கோணிப் பார்த்தாலே அவர்கள் வாடி நிற்பார்கள். என்பது இக்குறளின் கருத்தாகும். இது நம் நாட்டுப் பண்பு. இந்தப் பண்பை எல்லா நாடுகளும் பின் பற்றலாம். இது எல்லா நாட்டுக்கும் பொருந்தும். நம்மைத் தேடிவந்தவர்களை இன்முகத்தோடும் உள்ளம்போடும் உபசரிக்காவிட்டால் அவர்கள் துன்பப்படுவார்கள்.

குறிப்புகள்

பஞ்சாட்சர மந்த்ர கோடி அர்ச்சனை

கர்மத்தைச் சுயநலப்பற்ருேடு சுகத்தில் ஆசை வைத்துச் செய்யும்பொழுது அது நம்மைத் தளைக்கிறது. தன்னலம் கருதாது உலகத்தின் நன்மைக்கென்றே தியாக புத்தியோடு ஈசுவர ஆராதனையாகப் பாரமார்த்திகப் பெருநோக்கத்தோடு செய்யப்படும் கர்மம் நிஷ்காமியகர்மம் எனப்படுகிறது. நிஷ்காமிய கர்மம் நம்மைக் கர்மபந்தத்திலிருந்து விடுவிக்கிறது. மனிதன் உயிர் உள்ள வரையிலும் யக்ஞம், தானம், தவம் ஆகிய கர்மங்களைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். அக்கர்மங்களைச் செய்யுமளவு அவை நம்மைப் புனிதப்படுத்துகின்றன.

மனதைத் தூய்மைப்படுத்தும் சாதனைகளுள் ஜபம் செய்தல் முக்கிய இடம் பெறுகிறது. இறைவனுடைய நாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் ஜபம் எனப்படுகிறது. உடலின் நோயைப் போக்குவதற்கு மருந்து பயன்படுவது போன்று மனதைத் துன்பத்தில் ஆழ்த்துகின்ற காமக்குரோதாதிகளை அழிப்பதற்குப் பயன்படும் சொற்கள் மந்த்ரங்கள் எனப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட மந்த்ரங்களை நம் முன்னோர்கள் நமக்கு ஏற்கனவே கண்டுபிடித்துத் தந்திருக்கின்றனர். அம்மந்த்ரங்களை நம் மனது எண்ணிப்பார்க்கும் அளவு மனதிலுள்ள காமக்குரோதாதிகள் பேருணர்வுகளாக மாற்றப்படுகின்றன. யக்ஞங்களுள் நான் ஜப யக்ஞமாக இருக்கிறேன் என்று பகவத் கீதையில் கண்ணன் பகர்ந்துள்ளார். இறைவனுடைய நாமத்தை ஜபிப்பது சாதனங்களுள் எளிய சாதனமாகிறது. யாவரும் கடைப்பிடிப்பதற்கு ஜபம் போன்ற எளிய சாதனம் வேறென்றுமில்லை. பலர் ஒன்று கூடி இறைவனுடைய நாமத்தை ஒருமை மனதுடன் உச்சரிக்கும்போது அருள் சக்தி ஓங்குகிறது. கோடி அர்ச்சனை என்னும் பெயரில் பல இடங்களில் இறைவனுடைய நாமம் ஜபிக்கும் செயல் நிகழ்ந்து வருகிறது. தபோவனம் ஆகஸ்டு மாதம் 13ம் தேதியிலிருந்து 19ம் தேதி முடிய சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரியில் பஞ்சாட்சர மந்த்ரகோடி அர்ச்சனையை நிகழ்த்தியது. ஏழு நாட்கள் அவ்வைபவம் அருள் உணர்வோடு நிகழ்த்தப்பட்டது.

பொதுவாக விழா நடக்கிறது என்ருல் ஏராளமாகப் பொருளைச் செலவழிப்பார்கள். சமயத்துறையிலும் அதிகப்பொருள் செலவில் நிகழ்த்தும் விழாத்தான் சிறப்பான விழா என்று மக்கள் பொதுவாகக் கருதுகிருர்கள். குறைந்த செலவில் மன ஒருமுகப்பாட்டோடு சமயத்துறையில் நிகழ்ச்சிகளை நடாத்தினல் தான் மக்கள் எல்லாரும் பயன் அடைவார்கள். மூச்சுக்காற்று உயிர்வாழ்வதற்கு எல்லா மக்களுக்கும் அவசியமானது. அது எல்லா மக்களுக்கும் எளிதில் கிடைக்கிறது. வாழ்வை மேலான வாழ்வாக மாற்றி அமைக்கவேண்டிய செயல் எல்லா மக்களிடமும் நிகழ்ந்தாகவேண்டும். அதற்குச் சமய வாழ்வு அவசியமாகிறது. மேலாம் இயல்புகள் மனிதனிடத்தில் மறைந்து கிடக்கின்றன. அவ்வியல்புகளைத் தூண்டிவிடுவதே சமய நிகழ்ச்சிகளின் குறிக்கோளாகும். மனிதனிடத்துள்ள மேலாம் இயல்புகளைத் தூண்டுவதற்குப் பஞ்சாட்சர மந்த்ரகோடி அர்ச்சனை பயன்பட்டது.

மனதைத் தெய்வச் சிந்தனையில் ஈடுபடுத்துவதற்குச் சீரான திட்டங்கள் வகுக்கப்பட்டன. நாள்தோறும் மூன்று மணி நேரம் பஞ்சாட்சரம் ஜபிப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. அறிவுக்குச் சின்னமாகத் தீபமும், அன்புக்குச் சின்னமாக மலரும் பஞ்சாட்சர அர்ச்சனையில் பயன்படுத்தப்பட்டன. ஐந்து துறவிகள் "ஓம் நமசிவாய" என்று தெளிவாக நிறுத்தி உச்சரித்தனர். அவர்களைப் பின்பற்றி அன்பர்களும், தாய்மார்களும், மாணவிகளும் "ஓம் நமசிவாய" என்று உச்சரித்தனர். அங்ஙனம் இரு பகுதியினரும் ஆயிரம் தடவை " ஓம் நமசிவாய " என்று உச்சரிப்பதற்கு ஒரு மணி பத்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த முறையில் அன்பர்கள், தாய்மார்கள், கல்லூரி ஆசிரியைகள், மாணவிகள் ஆகியோர் ஏழு நாட்கள் பஞ்சாட்சர ஜபம்செய்து மொத்தம் ஒருகோடியே முப்பத்தாறு லட்சத்து ஏழாயிரத்து நூற்று எண்பது தடவைகள் ''ஓம் நமசிவாய'' என்ற மந்திரத்தை ஜபம் செய்தார்கள். ஒவ்வொரு

தடவை சொல்லும்போதும் அட்சதை அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்பட்டது. அர்ச்சனைக்குப்பயன்படுத்தப்பட்ட அட்சதையை ஒன்று சேர்த்துச் சமையல் செய்து அன்பர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டது. எனவே, எளிய முறையில் தெய்வீக உணர்வோடு கோடி அர்ச்சனை நிகழ்த்தப்பட்டது. தினமும் மூன்றரை மணிநேரம் அர்ச்சனை செய்த நேரம் போக பாக்கியுள்ள நேரங்களில் பஜனையும், சத்விசாரமும், தத்துவ ஆராய்ச்சியும், பக்தி நாடகங்களும் நிகழ்த்தப்பட்டன. காலை ஐந்தே முக்கால் மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு இரவு எட்டு மணிக்கு ஒவ்வொரு நாளும் சிறப்பாக முடிவடைந்தன. இடையில் ஓய்வுக்கு உரிய நேரத்தை ஒதுக்கி மற்ற நேரங்களில் இவ்வைபவத்தில் கலந்து கொண்டவர்களுடைய உள்ளங்களை உயர்ந்த கருத்துக்களில் செலுத்துவதற்குத் திட்டங்கள் முறையாக வகுக்கப்பட்டன. அத்திட்டங்களை ஒழுங்குபாட்டுடன் பின்பற்றி அன்பர்களும், தாய்மார்களும் இறைவனுடைய அருள்பேறுக்கு உரியவர்களானார்கள். சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரி மாணவிகள் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பஞ்சாட்சர மந்த்ர கோடி அர்ச்சனையில் கலந்துகொண்டு பயன் அடைந்தார்கள். ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் கல்விக்கு முக்கியமானவை தூயசூழ்நிலையும், மன ஒருமுகப்பாடும் ஆகும் என்று பகர்ந்துள்ளார். அத்தகைய தூய சூழ்நிலையையும், மன ஒருமுகப்பாட்டையும் உண்டாக்குவதற்கு ஏற்ற நிகழ்ச்சியாக இப்பஞ்சாட்சர மந்த்ரகோடி அர்ச்சனை அமைந்ததால் சேலம் ஸ்ரீ சாரதா கல்லூரி சிறந்த கல்வி ஸ்தாபனமாவதற்கு இந்நிகழ்ச்சி அங்கு அமைந்தது பொருத்தமாயிற்று. தூய மனம் படைத்தவர்களுக்குச் சேவை பண்ணுவது கல்வியில் முக்கிய இடம் பெறுகிறது. பாரமார்த்திக நோக்கத்தோடும், தூய மனப்பான்மையோடும் பஞ்சாட்சர மந்த்ர கோடி அர்ச்சனை நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. எனவே இந்நிகழ்ச்சிகளுக்குச் சேவைசெய்த மாணவிகளும், ஆசிரியைகளும் தூய மனப்பான்மையையும், தெளிந்த அறிவையும் பெற்று அடிப்படைக் கல்வியை அவர்கள் பெற்றார்கள். கல்லூரி மாணவிகளுக்கு அவர்களுடைய படிப்பிற்கு இடைஞ்சல் இல்லாது படிப்பு நேரத்தைத்தவிர பாக்கிநேரங்களில் பாரமார்த்திக விஷயத்தில் ஈடுபடுவதற்கு இந்நிகழ்ச்சிகள் துணைபுரிந்தன. மனதைத் தூய்மைப்படுத்தும் கல்வியே சிறந்த கல்வியாகிறது. மனதைத் தூய்மைப்படுத்தும் செயலே சிறந்த செயலாகிறது, இப்பஞ்சாட்சர மந்த்ரகோடி அர்ச்சனை மாணவிகளுக்குச் சிறந்த கல்வியாகவும், அன்பர்களுக்கும், தாய்மார்களுக்கும் சிறந்த செயலாகவும் அமைந்திருந்தது இதன் சிறப்பாகும்.

"உரு ஏறத் திரு ஏறும்"என்பது கோட்பாடு. பஞ்சாட்சர நாம உரு உள்ளத்தில் ஏற, ஏறத் திரு ஏறும் என்பதில் ஐயமில்லை. ஐந்நூறுபேர் ஒன்றுகூடி ஏக மனதுடன் பஞ்சாட்சரத்தை ஜபிக்கும்பொழுது அருள்சக்தி உண்டாகிறது. தனியாக ஒருவர் ஐநூறு தடவை பஞ்சாட்சரம் ஜபித்தால் என்ன பலன் ஏற்படுமோ அந்தப் பலன் ஐந்நூறுபேர் ஜபிக்கும் இடத்தில் ஒரு தடவை ஜபித்தால் அவருக்கு ஏற்படுகிறது. பலர் கூடிச்செய்யும் வழிபாட்டில் பெரும் பலன் சுலபத்தில் நமக்குக் கிடைக்கிறது. எனவே பலர்கூடிச் செய்யும் வழிபாடு நிகழ்கின்ற இடத்தில் பங்குகொள்கின்றவர்கள் பாக்கியவான்கள் ஆகின்றார்கள். பஞ்சாட்சரகோடி நாம அர்ச்சனை ஒவ்வொரு வேளையும் சுமார் ஐந்நூறுபேர் கூடிச்செய்த வழிபாடாக அமைந்தமையால் அதில் கலந்துகொண்டவர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள் ஆகின்றார்கள். பக்தியை வளர்ப்பதற்குப் பொருந்தாத சூழ்நிலை நாட்டில் உருவாகிவரும் இந்தக் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வருவது மக்களிடத்தில் உண்மையான பக்தியையும், ஐக்கிய உணர்வையும் வளர்க்கும். மக்கள் மனதைப் பாழ்படுத்தும் நிகழ்ச்சிகள் குன்றி மக்கள் மனதை மாண்புறச் செய்யும் நிகழ்ச்சிகள் வளர்ந்து வையகத்தின் துயர் நீங்குவது ஆகுக. "ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே" என்ற சம்பந்தர் வாக்கு செயல்பட்டு மக்கள் மேன் மக்களாக மாறி அமைவார்களாக. மந்த்ர ஜபம் அனைவரும் செய்யலாம். மந்த்ர ஜபம் செய்பவர்கள் மேன்மக்களாக மாறுகிறார்களென்பதற்கு வான்மீகி எடுத்துக்காட்டு ஆகிறார்.

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு புத்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शक्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சக்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शान्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு சாந்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु दयारूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு தயாருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु तुष्टिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு துஷ்டிருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु मातृरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ரு ருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु क्षान्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு க்ஷாந்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु कान्तिरूपेण संस्थिता ।	யா தேவீ ஸர்வபூதேஷு காந்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

புத்தி, சக்தி, சாந்தி, சிரத்தை, தயை, திருப்தி, தாய், பொறுமை, காந்தி, வடிவங்களாக எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்ருளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

செய்திகள்

நிகழ்பவை

செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று தென்ஆற்காடு ஜில்லா அவலூர் பேட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளியில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி திருமங்கலம் ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் நடைபெறும் நவராத்திரி விழாவில் மாலை 6-00 மணி முதல் 8-00 மணி வரை ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 13-ம் பதிப்பு பிரசார விலை ரூ.	16-00
திருவாசகம்-பிரசார விலை ...	14-00
கர்மயோக விளக்கம் ...	10-00
ஞானயோக விளக்கம் ...	8-00
ராஜயோக விளக்கம் ...	8-00
பக்தியோக விளக்கம் ...	6-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
விவேகானந்த விவரணம் ...	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ...	4-00
விவேகானந்த உபநிஷதம் ...	4-00
கடவுளின் வடிவங்கள் ...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ...	3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II ...	3-50
தினசரி தியானம்-பிரசார விலை ...	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை ...	3-00
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ...	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம் ...	2-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ஷை ...	3-00
சின்மயானந்த குரு ஷை ...	3-00
ஆனந்தமானபரம் ஷை ...	3-00
சுகவாரி ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை ...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை ...	2-50
பரசிவ வணக்கம் ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள் ...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை ...	1-50
பரமஹம்ஸர் பாமாலை ...	1-50
சந்நியாசி ...	1-25
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
சகோதரி நிவேதிதை ...	1-00
காயத்ரீ ...	1-00
வாலி மோட்சம் (நாடகம்) ...	1-00
நவப்புதல்வர்கள் (நாடகம்) ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ரூ.	1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்) ...	0-80
நன்மக்களைப் பெறுதல் ...	0-80
நோய்க்கு இடம் கொடேல் ...	0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ...	0-75
*ஆத்ம சக்தி ...	0-75
*சக்தி தத்துவம் ...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ...	0-60
*ஆலய வழிபாடு ...	0-60
*சூரிய நாராயணன் ...	0-50
*முருகக் கடவுள் ...	0-50
*விஷ்ணு தத்துவம் ...	0-50
தெய்வீக மகிமைகள் ...	0-50
சைவன் யார்? ...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
*கணபதி ...	0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ...	0-40
வர்ணாச்ரம தர்மம் ...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்...	0-30
The Bhagavad Gita (10th Imp.) ...	20-00
The Indian National Education ...	8-00
Sri Lalitambika Sahasranama Stotram ...	10-00
Ramakrisna Lives Vedanta ...	8-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Daily Divine Digest (DELUXE) ...	4-50
Daily Divine Digest (Ordinary) ...	2-50
Mahabharata (with plastic cover) ...	4-00
Ramayana (do) ...	4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover) ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
The Bhagavad Gita (Small Size) ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Bheeshma The Superman ...	3-50
Hinduism Hosts Christianity ...	3-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
* Introducing the Gita ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ...	1-00
* Key to Higher Life ...	0-75
* The Teacher ...	0-60
* The Student ...	0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் 10—10—80 முதல் 12—10—80 முடிய மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் அக்டோபர் மாதம் 9ஆம் தேதி வியாழக்கிழமை இரவே நேரில் வந்து நாள் ஒன்றுக்கு ரூபாய் 6-00 வீதம் ரூபாய் 18-00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், கைக்குழந்தையுடன் வரும் தாய்மார்களும் இதில்சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்		4-30
நாம ஜபம்	5-00	5-30
ஸ்நானம்	6-00	7-30
ஆரதி	7-30	
சிற்றுண்டி	7-45	
பஜனை	8-30	9-30
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	10-00	11-00
அர்ச்சனை	11-30	12-30
உணவு, ஓய்வு	1-00	3-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	3-00	3-45
நாம ஜபம்	4-00	4-30
சிற்றுண்டி	4-30	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-45	
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:—1. அக்டோபர் 10, 11 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், 12ஆம் தேதி ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணிமுதல் 11-00 மணிவரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்து கொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3.00 முதல் 3-45 மணிவரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்துகொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் அக்டோபர் 12ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணிமுதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஸ்ரீ ஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.